
பக்கங்கள்-16 | 25.மார்கழி.2022 | விலை–50.00




# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0713594443. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –395



## கோட்டாவின் சர்வதிகார ஆட்சியும் ரணிலின் கோமாளி அரசியலும்



## தமிழ் மக்களின் தீர்வு திட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சிறுபிள்ளைத்தனம்



## போதைப்பொருள் விழிப்புணர்வு

# கோட்டாவின் சர்வதிகார ஆட்சியும், ரணிலின் கோமாளி அரசியலும்

## இனப்பிரச்சனைக்கான தீர்வை பெற்றுத்தரப்போவதில்லை



முப்பது (30) ஆண்டுகாலங்கள் பிறைசூடிப்போயுள்ள தமிழர் பிரச்சனை என்பது ஒரு தீர்வுதிட்ட நகர்வை நோக்கி நகர்ந்துவரும் வேளையில் அதனை குழப்பும் நோக்கிலும் கட்சிகளை பிளவுபடுத்தும் நோக்கிலும் இருவரின் அரசியலும் செயற்பட்டுவருகின்ற விடயங்கள் மீண்டும் தமிழ் மக்கள் மீது ஒரு போரை திணிக்கின்ற ஒரு அரசியல் நடவடிக்கையாகவே அவதானிக்க முடிகின்றது. 2004 சமாதானகால ஒப்பந்தம் தொடங்கம் 2009 போர் முடிவுக்கு கொண்டுவரும் வரை இருந்துவந்த அரசியல் சற்று மாற்றம் பெற்று மறைமுகமாக இனச்சுத்திகரிப்பு இந்த நாட்டில் இடம்பெற்றுவருகின்றது.

தமிழ் மக்களை ஓரங்கட்டுகின்ற அவர்களின் போராட்டங்களை மழுங்கடிக்கின்ற நடவடிக்கைகளில் தீவிரமாக களமிறங்கிய கோட்டபாய ராஜபக்ச அதன் அடுத்தகட்டமாக தனது ஆட்சியை தக்கவைக்க முடியாத நிலையில் பொருளாதார பிரச்சனைகள் பூதாகாரமாக ஆரம்பிக்க ரணிலின் இராஜதந்திர அரசியல் நடவடிக்கைகளினால் மகிந்த குடும்ப அரசியலை துண்டுதுண்டாக உடைத்தார். மக்கள் மனதில் குடும்பத்தினுடைய நன்மதிப்பை இழக்க செய்த ரணிலின் அரசியல் என்பது கடந்த 2000 ஆண்டு தொடக்கம் இற்றைவரைக்கும் நரித்தந்திரமான அரசியலாகவே நகர்த்தப்படுகின்றது.

தற்பொழுது வடகிழக்கில் வாழுக்கூடிய மக்கள் போராட்ட சிந்தனை அற்றவர்களாக வாழும் நிலைக்கு தள்ளுகின்ற ஒரு சூழலையே இவர்கள் ஏற்படுத்தியுள்ளனர். தற்பொழுது ஐஸ் போதைப்பொருள் பாவனை அதிகரித்து பாடசாலை மட்டத்திலிருந்து சமுதாயம் பாதிக்கும் அளவிற்கு நிலைமை உருவாக்கப்பட்டுள்ளது. ஐஸ் போதையை உட்கொள்ளும் மாணவ மாணவிகள் மத்தியில் பாரிய அசௌகரியங்களை ஏற்படுத்தும் சம்பவங்களும் பதிவாகியுள்ளன. குறிப்பாக 14 வயது பெண்ணொருவர் போதைக்கு அடிமையாகி பலருடன் தனது நட்புறவுகளை வைத்துக்கொண்டதாக சாட்சியம் வழங்கியிருப்பது என்பது நாட்டில் பாரிய அதிர்வளைகளை தோற்றியுள்ளது.

சமுதாயம் சீர்கெடுகின்றது என்று கூறுகின்ற சமூக ஆர்வலர்கள் இதுபற்றி அக்கறை கொள்ளாது இருப்பது என்பதும் கவலைக்குரிய விடயமே. அதை அரசாங்கம் ஒரு இனஅழிப்பாகவே திட்டமிட்டு செய்கின்றது. பின்னர் அதற்கான சட்ட ஒழுங்குகள் கொண்டுவர வேண்டும் என்கின்றது. ஒரு போராட்டத்தை முடிவிற்கு கொண்டுவந்த இந்த அரசாங்கத்தினால் போதைப்பொருளில் இருந்து இந்த நாட்டை ஏன் மீட்கமுடியாது. குறிப்பாக இதன் பின்னணியில் அரசியல்வாதிகள் செயற்படுகின்றனர் என்பதே திட்டமிட்ட இனஅழிப்பை பகீரங்கமாக ஆயுத முனையில் நடத்திவந்த சிங்கள பேரினவாத அரசு இன்று மறைமுகமாக போதைப்பொருட்களை விற்பனை சந்தையில் விற்பனை செய்து குறித்த இனத்தை அழிப்பதற்கான நடவடிக்கையில் களமிறங்கியுள்ளது.

ஆந்த்ராக்ஸ் வைரஸ், கொரோனா வைரஸ் போன்று குறித்த நாடுகளுக்குள் தாக்கத்தை விளைவிப்பதற்காக அல்லது அச்சுறுத்தலை ஏற்படுத்துவதற்காக சீன நாடும் ஒசாமாபில்லேடனும் இவ்வாறான ஒரு தாக்கத்தை உலகளாவிய ரீதியில் ஏற்படுத்தினார்கள். அதன் ஒரு அங்கமாகவே இலங்கையில் வாழும் சிறுபான்மை மக்கள் மீதும் தற்போதைய காலகட்டத்திலும் இவ்வாறான தாக்கங்கள் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் மறைமுகமாக செயற்படுகின்றது பலியை மக்கள் மீதும் போடுகின்றது. தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வுதிட்டம் வழங்கப்படுமாயின் வடகிழக்கு மலையகம் உட்பட பாரிய அபிவிருத்தியை சந்திக்கும். அதேநேரம் சிங்கள பகுதிகள் வெறிச்சோடிய நிலையே காணப்படும். வடக்கு கிழக்கில் பொருளாதார மத்திய மையங்கள் நிறுவப்பட்டு அதனுடைய அபிவிருத்தி கட்டமைப்புக்கள் வளர்ந்து சென்றால் சிங்கள பிரதேசங்கள் அபிவிருத்திகள் குறைவடையும் என்ற காரணத்தினாலும் பாரியளவில் வடக்கு கிழக்கில் அமையவிருந்த சர்வதேச விமானத் தளங்களை அரசாங்கம் மட்டுப்படுத்தி குறித்த வரையறைக்குள்ளேயே செயற்படுத்திவந்துள்ளது. வெளிநாடுகளுக்கு சென்றுள்ள தமிழர் தரப்புக்கள் பலர் விமான ஓட்டிகளாக பயிற்சி பெற்றிருக்கின்றனர். அண்மைக்காலமாக அவர்களின் வீடியோக்களும் வெளிவந்துள்ளன.

ஆகவே சர்வதேச ரீதியில் இலங்கைத்தீவை தமிழினம் ஆளுகின்ற ஒரு நிலைமை ஏற்படும் என்ற காரணத்தினாலும் அவ்வாறானதொரு ஆட்சி அதிகாரம் இந்த நாட்டில் ஏற்படுமாக இருந்தால் அது தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையில் உருவாகும் என்ற அச்சத்தினாலும் இந்த நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறுகின்ற ஒரு அரசியல் நடிவடிக்கையையே ஆரம்பித்துள்ளார்.

தமிழ் மக்களுக்கான தீர்வு திட்டம் தொடர்பான இவரது அரசியல் நகர்வு என்பது ஏனோ தானோ என்ற நிலைப்பாடுகளுடனேயே நகர்த்தப்படுகின்றது. தமிழ் தரப்பை பேச்சுக்களுக்கு அழைப்பதும் அவர்களுடன் இருந்து உபசாரங்கள் செய்வதும் நட்புறவாக பழகுவதும் இவ்வாறான செயற்பாடுகளினால் இவரை நம்புகின்ற ஒருசிலர் ரணில் விக்ரமசிங்க தமிழ் மக்களுக்கான தீர்வுதிட்டத்தை தருவார் என்ற நப்பாசையிலும் இருக்கின்றார்கள். இனப்படுகொலையை திட்டமிட்ட முறையில் மேற்கொண்ட கோட்டபாய ராஜபக்ச கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் இதுவரையிலும் எந்தவித முடிவுகளுமற்ற நிலையிலும் பலவருடங்களை தாண்டியும் மக்களது போராட்டங்கள் தொடர்கின்றது. வெள்ளைக்கொடியுடன் சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்தது இருக்கின்றார்களா இல்லையை என்ற தெளிவான விடயத்தை கூட கோட்டபாய அரசு இதுவரை அறிவிக்கவில்லை. இந்த நாட்டில் யுத்த குற்றம் இடம்பெற்றிருக்கின்றது என்று கூறும் சர்வதேசம் அதை விசாரிக்கப்பட வேண்டும் என வலியுறுத்துகின்றது. ஆனால் அது நிபந்தனைக்கு உட்படுத்த வேண்டும் என்பது மற்றுமொரு விடயம். இதற்காக கடந்தகாலத்தில் கோட்டா மகிந்த கூட்டு அரசு மைத்திரபால சிறிசேன கூட்டு ஆட்சி சர்வதேச ரீதியில் கால அவகாசங்களையும் எடுத்துக்கொண்டது. ஆனால் அவை அனைத்தும் காலம் கடந்ததாகவே இருக்கின்றது. போருக்கு பின்னர் தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வுதிட்டம் அமையும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதும் சர்வதேச ரீதியில் ஒரு அழுத்தம் அரசாங்கத்திற்கு இருப்பதாக நிலைப்பாட்டை காண்பித்ததே தவிர வேறொன்றுமல்ல.

சர்வதேச நாடுகளும் இலங்கைக்கு ஆதரவான ஒரு போக்கையே கொண்டிருந்தது. காரணம் பூகோள அரசியல் ரீதியாக ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் அதற்கான தீர்வுகள் என்ற அடிப்படையில் பார்க்கும்பொழுது ஆசியபசுபிக் பிராந்தியத்தில் தனது அரசியல் நடவடிக்கையை முற்கொண்டுசெல்வதற்கு சீனா இந்தியாவினுடைய ஆதரவு இலங்கைக்கு தேவை. யுத்தம் முடிவடைந்து 13 வது ஆண்டு முடிவடைந்துள்ள நிலையில் பூகோள ரீதியாக ஏற்பட்டுள்ள தாக்கங்களுக்கு தீர்வினை ஏற்படுத்தும் வகையிலே தற்பொழுது அரசியல் நகர்த்தப்படுகின்றது. பொருளாதார ரீதியில் ஒரு தாக்கத்தை இந்த நாட்டுக்கு உருவாக்கி பெருந்தொகை உதவிகளை சீனாவும் இந்தியாவும் மாறி மாறி வழங்கிக்கொண்டிருக்கின்றது. குறிப்பாக கடல் கப்பலில் இருந்தும், ஆகாய மார்க்கங்களில் இருந்தும், தரை ரீதியான ஆயுதம், மருந்து போன்றவைகளும் இதில் உள்ளடக்கப்படுகின்றது.

இதேநேரம் பசுபிக் பிராந்தியத்தில் தன்னை இலங்கையின் நட்புறவு நாடாக அமெரிக்கா வெளிப்படுத்தி இந்தியாவையும் சீனாவையும் மீற செயற்படுகின்ற அடுத்தகட்ட நகர்வையும் அது மேற்கொள்கின்றது. தாயகம், தேசியம் சுயநிர்ணய உரிமைக்காக போராடிய தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டம் என்பது சர்வதேசரீதியாக கொண்டு செல்லப்பட்ட பொழுதும் பேரம்பேசப்பட்ட அரசியலும் பூகோள ரீதியான அரசியலுமே வடகிழக்கிணைந்த தமிழர் தாயகத்தை உருவாக்குவதில் முட்டுக்கட்டையாக செயற்பட்டது. மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் யுத்தம் முடிவிற்கு கொண்டுவரப்பட்டு வெற்றி நாயகன் என்ற வெறித்தனத்தோடு செயற்பட்டுவந்த மகிந்த குடும்பம் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் மக்கள் எதிர்ப்பையும் மீறி காப்பாற்றப்பட்டு இருக்கின்றார்கள் என்பதே உண்மை. அரசியல் ரீதியிலான தீர்வுதிட்டங்கள் நல்ல நிலையை எட்டுகின்ற சூழலில் எல்லாம் சிங்கள பேரினவாத கட்சிகளைப் பயன்படுத்தியும் தமிழர் தரப்பில் பிரிவினைவாதங்களை உருவாக்கியும் மாறி மாறி வந்த அரசியல் தலைமைகள் தமது காய்களை நகர்த்திக்கொண்டு வந்தன என்பதே வரலாற்று ரீதியிலான உண்மை. இதனை மாற்றியமைப்பதற்கான வழிகளையே எதிர்வரும் காலங்களில் தமிழ் தரப்பு மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் தமிழர் தரப்பின் அடுத்த சந்ததி இந்த தீர்வுதிட்டம் தொடர்பில் சிந்திக்க வேண்டிய சூழல் உருவாகும். ரணிலின் கோமாளி அரசியல் என்பது தனது அரசியல் சுயலாபத்திற்காக வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுகின்ற ஒரு அரசியல் நகர்வையே நகர்த்திவருகின்றார். மக்கள் ஆணையுடன் வெல்லக்கூடிய ஒரு தலைவரை இந்த நாட்டில் உருவாக்கினால் மட்டுமே அதனுடன் சிறுபான்மை கட்சிகளையும் இணைத்துக்கொண்டு செல்லுகின்ற மனப்பக்குவமுடைய தலைவர்களை தேர்ந்தெடுப்பதன் ஊடாகவே சிறுபான்மை தரப்பிற்கு ஒரு தீர்வினை பெற்றுக்கொள்ளும் நிலைமை உருவாக்கப்படும்.

மலர்ந்துள்ள புத்தாண்டில் தீர்வு கிடைக்கும் என்பதும் அல்லது தீபாவளிக்கு தீர்வு கிடைக்கும் என்று கூறுவதும் 13 வது சீர்திட்டத்தை அமுல்படுத்தி தமிழ் மக்களுக்கான தீர்வுதிட்டம் என்று கூறுவதும் ஒரு வாசகமாக அமையப்பெறுமே தவிர தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வாக அமையப்பெறாது. இந்த நாடு பொருளாதார ரீதியில் மீண்டும் அதாளபாதாளத்தை நோக்கியே செல்லக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன. மாற்றத்தை கொண்டுவருகின்றோம் என்று கூறுகின்ற அரசியல் தரப்புக்கள் தமது இனவாத சிந்தனைகளில் இருந்து மாற்றம் பெறவேண்டும். இனவாத சிந்தனையிலிருந்து மாற்றம் பெறுவதற்கு அதனை மாற்றுவதற்கு தமிழ் அரசியல் தரப்பும் இணைந்து செயற்படுவதன் ஊடாகவே தமிழினத்துக்கு கிடைக்கப்பெறுகின்ற தீர்வுதிட்டங்களில் ஓரளவேனும் பெற்றுக்கொள்வதற்கான நிலைமை உருவாக்கப்படும். இந்த கோமாளி அரசியலில் இருந்து நாட்டை மீட்டெடுக்க வேண்டிய பொறுப்பும் நாட்டு மக்களுக்கு இருக்கின்றது.

**சுழியோடி**

தினப்புயல்
ஆசிரியர் பீடம்
இல:154, 6வது ஒழுங்கை
தேக்கவத்தை,
வவுனியா.

## கடந்துவந்த அரசியல் பாதைகள் சொல்லும் செய்தி என்ன?

புதுவருடத்தை நோக்கி 2023 இல் காலடி எடுத்து வைப்போமா என்ற கேள்வி கனைகளோடு மக்கள் இவ்வாண்டையும் வரவேற்க தயாராக இருக்கின்றார்கள். இதனோடு தமிழ் மக்களுக்கான தீர்வு கிடைக்கும் என்ற நப்பாசையில் தமது அரசியல் ஆசனங்களை தக்கவைப்பதில் அரசில்வாதிகளும் மக்களிடம் போளி ஆணைகளை வழங்குகின்ற ஒருவராகவே செயற்படவேண்டிய சூழலும் உருவாகியுள்ளது. 1983 - 2009 வரை தமிழினத்தின் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட அரச பயங்கரவாதம் என்பது ஒரு இனத்தின் மீது மேற்கொண்ட பாரிய வன்முறையாகவே பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

யூலை களவரத்தை எடுத்துக்கொண்டாலும், முள்ளிவாய்க்கால் இனஅழிப்பை எடுத்துக்கொண்டாலும் இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றதற்கு ஆதாரங்கள் இருந்தும் அவை அனைத்தும் சர்வதேச ரீதியாகவும் உள்நாட்டு ரீதியாகவும் மழுங்கடிக்கப்பட்டு வந்த கதைகளாகவே தொடர்கின்றன. கடந்து வந்த பாதைகள் அனைத்தும் கசப்பான ஒரு அனுபவத்தை கொண்டிருக்கின்றது. கோட்டபாய ராஜபக்சவை ஆட்சியிலிருந்து வீட்டிற்கு அனுப்பிய விடயங்கள் இதில் முக்கியம் பெறுகின்றது.

40 க்கும் மேற்பட்ட அரசியல்வாதிகளின் வீட்டிற்கு தீ வைக்கப்பட்டது ஜனாதிபதி மாளிகை பிரதமர் அலுவலகம் போன்றவை சுற்றிவளைக்கப்பட்டு மக்களால் தீ வைக்கப்பட்டது. அதன் பின்னர் ஓரளவு பொருளாதார நிலைமை கட்டுப்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டு வன்முறைக்கு தூண்டியவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் அவர்கள் கைது செய்யப்பட்டு அடைக்கப்பட்டார்கள். சஹ்ரானின் குண்டுத்தாக்குதலால் மீண்டுமொரு பயங்கரவாதம் உருவாக்கப்படுமென அரசாங்கம் கருதி சிறுபான்மை இனத்தின் மீது வன்முறைகளை கட்டவிழ்த்துவிட்டிருந்தது. கடந்துவந்த அரசியல் பாதைகள் என்பது புதிதான அனுபவம் ஒன்றுமில்லை ஒரு இனத்தின் மீது அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கின்றது என்றே கூறலாம்.

நேர்மையான அரசியல் செய்ய முடியாத சூழல் உருவாகியுள்ளது. போதைப்பொருள் பாவனையாளர்கள் வன்முறையாளர்கள் என கடந்த வருடத்தில் 42 க்கும் மேற்பட்டோர் சுட்டுக்கொல்லப்பட்டனர். சீனா, இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கையில் கால் ஊன்றுவதற்காக தம்மால் முடிந்த உதவிகள் அனைத்தையும் இலங்கை அரசிற்கு வழங்கியது. மௌனிக்கப்பட்ட போராட்டங்களின்பின்னர் தமிழ்மக்களுக்கான தீர்வு கிடைக்கும் என்று 13 ஆண்டுகள் பிறைகூடிபோயுள்ள நிலையிலும் இதுவரை தீர்வுகள் எட்டப்படவில்லை. 3 தசாப்தங்கள் முடிவுற்ற நிலையில் 4வது தசாப்தத்திற்குள் நாம் நின்று கொண்டிருக்கின்றோம்.

சிந்தித்து செயற்படுகின்ற ஒரு நிலைமையும் தற்பொழுது உருவாகியுள்ளது. அதுவும் நாட்டின் தொழினுட்ப வளர்ச்சி என்பது இனிவரும் காலங்களில் சைபர் தாக்குதல் நடைபெறுவதற்கான வாய்ப்புக்களே இருக்கின்றன. கத்தியின்றி இரத்தமின்றி ஒரு மனித உயிரை வேட்டையாடுகின்ற கெமிக்கல் ஆயுதங்களே இனி பயன்படுத்தப்படும். கடந்த ஆட்சியாளர்களின் செயற்பாடுகள் கசப்பான அனுபவங்களாக இருக்கின்றபொழுது மலரவிருக்கின்ற இப் புத்தாண்டில் மக்களின் எதிர்பார்ப்பு என்பது என்று எமக்கு விடிவு கிடைக்கும் என்பதேயாகும்.

## 200 உலக வரலாற்றில் குறுஞ்சமர்



இந்த முறையில் எறிகணைகளை எறிகளை செலுத்துநரும் அவனது உதவியாளனும் காவிச்செல்லலாம். ஈரலிப்பிலிருந்து எறிகணையைப் பாதுகாக்கும் பொருட்டு நீர்புகாத் துணியால் அல்லது பொலித்தீனால் கட்ட வேண்டும். இதன் மேற்பகுதியில் காவுகயிற்றைக் கட்டிவிடலாம்.

வழக்கமாகப் படைவீரர்கள் சமருக்காகச் செல்லும்போது ஆர்.பி.ஜி. - 7 இனை அதனது கூடுதல் எடை காரணமாக எடுத்துச்செல்ல விரும்புவதில்லை. இதற்குப் பதிலாக ஆர்.பி.ஜி. - 18, 22, 26, ஆர்.பி.ஓ.ஏ ('ஸ்மேல்') கையெறிகணை போன்றனவற்றையே எடுத்துச்செல்கின்றனர். இரவுச் சமர்களில் எரியூட்டுவதற்கு மாத்திரமன்றி எதிரிகளின் நிலைகளை ஒளிர்வூட்டி வெளிச்ச நிலைகளை உருவாக்குவதற்காகவும் ஸ்மேலைப் பயன்படுத்துகின்றார்கள். ஆர்.பி.ஜி. - 7 இல் கவனத்தைச் செலுத்தாமல் விடக்கூடாது. இதனது வினைத்திறன் மிக்க செயற்பாட்டுத் தூரம் ஒருதடவைப் பயன்பாட்டு எறிகணை செலுத்திகளைவிட மிக அதிகமாகும். அத்துடன் இதில் ஒளியில் குறிகாட்டிகள் இருப்பது அதனது சூட்டைத் துல்லியமாக மேற்கொள்ளவும் உதவுகின்றது. குறிப்பிடப்படவேண்டிய விடயம் யாதெனில் ஆர்.பி.ஜி. - 7 இற்கான சன்னங்களைக் கொண்ட எரியூட்டல், ஒளியூட்டல், பிறவகைச் சிறப்பு எறிகணைகளை உருவாக்குவது ரசிய இராணுவத்தின் படைப்பிரிவுகளது சாத்தியப்பாடுகளைக் கணிசமானளவு விரிவாக்கும்.

### சுடுகலனாளனின் தந்திரங்கள்

மிக வெளிப்படையாகத் தெரிகின்ற குறைபாடாக ஆயுதத்தைச் சரியான முறையில் வைத்திருக்கத் தெரியாமையும் சூட்டிற்கு அதனை வேகமாகத் தயார்ப்படுத்தத் தெரியாமையுமே விளங்குகின்றன. வழக்கமாகப் பயன்பாட்டிலுள்ள ஆயுதத்தை வைத்திருக்கின்ற முறைகள் எதிர்பாராத வகையில் அருகில் எதிரி தோன்றுகின்ற தருணத்தில் வேகமாகச் சூட்டுக்குத் தயாராக உதவுவதில்லை. குறோஸ்னி நகரில் நடந்த சம்பவங்கள் இரண்டை இதனையொத்த பண்பிற்கு எடுத்துக்காட்டிற்காகக் கூறுகின்றேன்.

மோட்டார் பற்றி வீட்டின் தட்டையான கூரையில் நிலைப்படுத்தப்பட்டிருந்ததுடன் போராளிகளின் நிலைகள் மீது தாக்குதல் தொடுத்துக்கொண்டும் இருந்தது. இரண்டு வீரர்கள் தண்ணீர் எடுப்பதற்காகக் கிணறு அமைந்துள்ள வீடொன்றின் வளவுக்குச் சென்றனர். அவர்களது கைகளில் தண்ணீர் வாளி இருந்தது. அவர்களது ஆயுதங்கள் முதுகில் தொங்கியவாறிருந்தன. அந்த வீட்டு வளவுக்குள் சந்தடியின்றிப் போராளிகள் நுழைந்து வீரர்களை ஆயுத முனையில் மடக்கி அவர்களது ஆயுதங்களைக் களைந்து கைதிகளாகப் பிடித்துச் சென்றனர். தங்களது ஆயுதங்களைப் பயன்படுத்த முடியாதவர்களாகப் படைவீரர்கள் இருந்தனர். இரண்டாவது சம்பவம் யாதெனில் அமைதியானதும் இரட்டை ஆட்சி நடக்கின்றதுமான காலப்பகுதியில் குறோஸ்னியில் ரசிய வீரர்களின் இறுதிச் சடங்கை பரிசோதிப்பு அதிகாரியொருவர் புகைப்படமெடுத்துக்கொண்டிருந்தார்.

அவரது கைகள் புகைப்படக்கருவியைப் பற்றிக்கொண்டிருந்ததுடன் சுடுகலன் வலது தோளில் சுடுகுழல் கீழ்நோக்கியவாறு தொங்கிக்கொண்டிருந்தது. அவரது பிஸ்ரல் வலது பக்கத்தில் கோல்சரினுள் இருந்தது. இரு பக்கத்தாலும் இரு போராளிகள் அவரை நெருங்கி ஆயுத முனையில் அச்சுறுத்தி அவரது ஆயுதங்களைக் களைந்து கைதியாகப் பிடித்தனர்.

இவ்வாறான சம்பவங்கள் யுத்தப் பிணக்குகளுள்ள வலயங்களில் மிகவும் கூடுதலாக நடைபெறுகின்றன. போர் வீரர்களும் அதிகாரிகளும் எதிர்பாராத வகையில் எதிரியுடன் எதிர்ப்படும்போது தயாரற்ற நிலையில் இருக்கின்றதுடன் தமது ஆயுதங்களைப் பயன்படுத்த முடியாதவர்களாகவும் இருக்கின்றார்கள்.

உத்தியோகபூர்வச் சூட்டு ஆயுதத்தை வைத்திருக்கின்ற அதனைப் பயன்படுத்துகின்ற சில முறைகளைக் கூற விரும்புகின்றேன். இம்முறைகள் ஆயுதத்தை வசதியான நிலையில் வைத்திருக்க உதவுவதுடன் கைகளும் சுதந்திரமாக இருக்கின்றன. இது மட்டுமல்லாமல் இம்முறைகள் வேகமாகச் சூட்டு நிலைக்குக் கொண்டுவர உதவுகின்றதுடன் எதிரியின் தாக்குதலுக்கு எதிராக வேகமாகச் செயற்படவும் வசதியானதாகின்றது.

1. இடது தோளில் - இது பழைய வேட்டைக்கார முறையாகும். ஆயுதம் கீழே தொங்கிக்கொண்டிருக்காவண்ணம் சரியான அளவில் காவுவாரைச் சீராக்க வேண்டும். இந்த முறை வேகமாகச் சூட்டு நிலைக்கு வர உதவுகின்றது. ஆனால் எதிரி மிக அருகிலென்றால் கைச்சண்டையிட்டுப் பிடிக்க வேண்டிவருகின்றது. இதற்கு ஆயுதத்தின் இந்நிலை தடையாகவிருக்கின்றது இவ்வாறான சூழ்நிலையில் தோள்மூட்டிலிருந்து காவுவாரை விலக்கி ஆயுதத்தைத் தரையில் விழுத்த வேண்டும்.

2. மார்பில் - காவுவார் கழுத்திற்குப் பின்னால் சுற்றிச் செல்கின்றதுடன் சுடுகுழல் கீழ்நோக்கியவாறு சுடுகலன் தொங்கிக்கொண்டிருக்கும். இந்த முறை மிகவும் வசதியானதுடன் வேகமாகச் சூட்டுநிலைக்கு வரவும் உதவுகின்றது. இந்நிலையில் ஆயுதம் இருப்பது கையால் பிடிப்பதற்கும் இடையூறாக இருக்காது. கால்களால் கைகளால் சுதந்திரமாகத் தாக்குகின்ற பிடிபடும்போது சண்டையிடுகின்ற விழுகின்ற பக்கவாட்டாகப் படுத்து நகருகின்ற சந்தர்ப்பத்தையும் தருகின்றது. இதுதவிர சுடுகலனால் எதிரியின் தாக்குதலைத் தடுப்பதுடன் அவனுக்குச் சுடுகலனின் அடிப்பாகத்தாலும் ரவைக்கூட்டினாலும் பலத்த அடியையும் கொடுக்கலாம். இந்த முறையில் சுடுகலனைக் காவும்போது சுடுகலனின் அடி வலது தோளிற்குச் சற்றுக்கீழே இருக்கும்படி காவுவாரைக் கணிசமானளவு தொங்கவிட வேண்டும்.

3. கவசவாகனத்தில் வீரர்கள் நகர்வை மேற்கொள்கின்றபோது வழக்கமாக அவர்கள் கவசத்தின் மேற்பகுதியில் இருக்கின்றார்கள். வழக்கமாக அவர்கள் திறந்திருக்கின்ற வாகனக் கதவிற்குள் ஒரு காலை நுழைத்தவாறும் மறுகாலை வாகனத்தின் மேற்பகுதியிலும் வைத்தவாறு இருக்கின்றார்கள். இந்நிலையில் இருக்கும் போது சூடுகள் மேற்கொள்ளப்படுமானால் வேகமாகத் திறந்திருக்கின்ற கதவினுள் புகுந்துகொள்ளலாம். அத்துடன் வாகனம் கண்ணிவெடியில் சிக்கினாலோ ராங்கியெதிர்ப்பு எறிகணைத்தாக்குதலுக்குள் அகப்பட்டாலோ வேகமாக வாகனத்திலிருந்து தரைக்கும் குறிக்கலாம். இந்நிலையில் அவர்கள் ஆயுதத்தைக் கையில் பிடித்தவாறு இருக்கின்றார்கள். இது கதவினுள் தாவிச்செல்லத் தடையாகவிருக்கின்றதுடன் வெடிப்பேற்பட்டாலோ திடீரென நிறுத்தப்பட்டாலோ வீரர்கள் வாகனத்திலிருந்து தூக்கியெறியப்படும் போது ஆயுதங்கள் இலகுவாகத் தவறப்பட்டும் விடுகின்றன. இவ்வாறான சம்பவம் நடைபெறாமலிருப்பதற்காக காவுவாரை இளக்கி அதனைத் தலைக்குப் பின்னாகக் கொழுவி ஆயுதம் உடலோடு இருக்கும்படியும் சுடுகுழல் மேலே நோக்கியாவாறும் தொங்கவிடப்பட வேண்டும். இந்நிலையில் ஆயுதம் போதியளவு வசதியாகவிருப்பதுடன் வாகனத்திலிருந்து குதிக்கவும் இடையூறாக இருக்காது. இலக்கை நோக்கி வேகமாகக் குறிபொருத்தவும் சாத்தியமாக இருக்கின்றது.

4. இராணுவப் பணியாட்களும் காவற்றுறையாளர்களும் காவல் நிலையங்கள் அனுமதிக் கடவை நிலைகள் வீதிப் போக்குவரத்துப் பரிசோதனை நிலையங்கள் போன்ற இடங்களில் அடிக்கடி கடமை செய்யவேண்டிய நிலையேற்படுகின்றது. இவ்வாறான இடங்களில் கடமையின் பண்பு நீண்ட நேரம் அங்கே தங்கிநிற்பதாக இருக்கின்றபடியால் சைகைகள் வழங்கக் கூடிய வகையில் ஆவணங்களைப் பரிசோதிக்கும் வகையில் வாகனங்களைச் சோதனையிடத்தக்க வகையில் ஆட்களைச் சோதனை செய்யக்கூடிய வகையில் கைகள் அவசியம் சுதந்திரமாக இருக்க வேண்டும். ஆயுதத்தை வேகமாகப் பயன்படுத்த உதவியளிக்கின்ற வசதியான நிலையில் அது இருக்க வேண்டும். அதேநேரத்தில் சோதிக்கப்படுகின்ற நபர் ஆயுதப் பயன்படுத்தலைத் தடுக்கும் வாய்ப்புக் கொண்டவராக இருக்கக்கூடாது வழக்கமாக வீதிப் போக்குவரத்துப் பரிசோதனையாளர்கள் ஆயுதத்தை வலது பக்கத்தில் வைத்திருக்கின்றனர். இந்நிலையிலிருந்து ஆயுதத்தைத் தோள்மூட்டிற்கு எடுத்துக்கொள்ளக்கூடாது. மாறாக இடுப்பிற்கருகிலிருந்தவாறே குறிபொருத்தா நிலையில் மாத்திரமே சுடலாம். ஆனால் பரிசோதனையாளன் குளிர்கால உடையணிந்திருந்தால் ஆயுதம் ஆடிக்கொண்டிருக்கின்ற தேவையற்ற சுமையாக மாறிவிடுகின்றது. மிகவும் வசதியாக ஆயுதத்தை வைத்திருப்பதற்காக சுடுகுழலிலுள்ள காவுவார் வளையத்திலிருந்து காவுவாரைக் கழற்றி சுடுகலன் அடியிலுள்ள வளையத்தில் கொழுவிவிடுவதன் மூலம் வளையம் போன்ற வடிவில் காவுவார் வந்துவிடுகின்றது.

இந்த வளையத்தைத் தேவையான அளவிற்கேற்பச் சீர்செய்து தோள்மூட்டினூடாகக் கொழுவி முதுகில் தொங்கவிடலாம். சுடுகலன் சுடுகலனடி நீட்டப்பட்ட நிலையில் வலது தோள்மூட்டிற்குக் கீழே தொங்கிக்கொண்டிருப்பதுடன் இலகுவாக ஒரு கையால் சுடுகலனை நீட்டியும் பிடிக்கலாம். சோதனையை மேற்கொள்கின்றபோது இடதுகாலை அரைக்காலடி முன்னே எடுத்து வைக்கப் பரிந்துரைக்கின்றேன். இதன் போது சோதிக்கப்படுவரிலிருந்து சுடுகலன் சற்றுத் தொலைவிலிருக்கும் வண்ணம் உடலை இடது பக்கமாக முன்னோக்கி வளைத்திருங்கள்.

தொடர்வான்....


# தமிழ் மக்களின் தீர்வு திட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சிறுபிள்ளைத்தனம்

## முன்னாள் ஓய்வு பெற்ற நீதியரசரும், பாராளுமன்ற உறுப்பினருமான க.வி.விக்னேஸ்வரன்

**கேள்வி:இன்றையசமகாலஅரசியல்பார்வையில் தமிழ் மக்களின் தீர்வு திட்டம் தொடர்பில் நாட்டின் ஜனாதிபதியுடன் பல தமிழ் கட்சிகள் ஆதரவு தருவதான சமிஞ்சைகளுடனான ஒரு சந்திப்பினை நடத்தியிருக்கின்றனர். அந்த அடிப்படையில் உங்களது நிலைப்பாடு இதில் தமிழ் மக்களுக்கான தீர்வு எட்டப்படுமா அல்லது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையிலான இந்த காலகட்டத்தில் அதனை பெற்றுக்கொள்ள முடியுமா? என்ற வகையில் நீங்கள் ஒரு சட்டத்துறை சார்ந்தவர் என்ற வகையிலும் சட்ட ரீதியாகவும் இதனை எப்படி பார்க்கின்றீர்கள்?**

பதில் : சம்மந்தனுடைய தலைமைத்துவத்தின் கீழ் நானும் அதில் கலந்துகொள்ள என்னுடைய இணக்கத்தை தெரிவித்திருந்தேன். ஏனென்றால் எங்களுக்குள் ஒருவித ஒற்றுமை இருந்தால் தான் எங்களால் முன்னேற முடியும் என்ற காரணத்தினால் அந்த விதத்தில் தற்போது அரசாங்கத்திற்கு பலவிதமான உலகலாவிய நெருக்குதல் நிலைமைகள் இருக்கின்றன. பொருளாதார ரீதியாக அவர்களுக்கு பிரச்சனைகள் இருக்கின்றன. அந்த பிரச்சனைகளை தீர்ப்பதற்கு சில நாடுகளிடமிருந்து உதவிகளை கேட்கின்ற பொழுது உங்களுடைய மனித உரிமை





விடயங்கள் சம்மந்தமாக நீங்கள் போதுமான கரிசனை எடுக்காதபடியால் எங்களுக்கு எங்களது நாட்டின் உதவிகளைத் தருவது சற்று கடினமாக இருக்கின்றது என சில நாடுகள் கூறுகின்றன. அதை விட ஜஎம்எஸ் கூட சில விடயங்களில் அரசாங்கத்தை விமர்சித்திருக்கின்றது. இந்த நிலையிலே அரசாங்கத்திற்கு நெருக்குதல் வந்து தமிழ் மக்களது பிரச்சனைகளை எப்படியாவது தீர்க்க வேண்டும் என்றவொரு நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது அது ஒருபுறம். மற்றையது தற்போதைய பொருளாதார வீழ்ச்சியின் நிமித்தம் நாட்டில் பலவிதமான பிரச்சனைகளை எதிர்கொண்டிருக்கும் பொழுது தொடர்ந்தும் ஒருசாராரை அல்லது சிறுபான்மையினரை தங்களுக்கு எதிராக வைத்துக்கொண்டிருப்பது அவர்களுக்கு உசிதமில்லை என்ற முறையிலே எங்களோடு தங்களது பிரச்சனைகளை தீர்த்துக்கொள்ள வேண்டும் என்றவொரு எண்ணத்திலே இருக்கின்றார்கள்.

ஆகவே அன்றைய தினம் 13 ஆம் திகதி ஜனாதிபதி இல்லத்தில் நாங்கள் பேசிய போது பல கட்சிகளினுடைய தலைவர்கள் வந்திருந்தார்கள். சிங்கள கட்சிகள், தமிழ் கட்சிகள், முஸ்லிம் கட்சிகள் என்று பலரும் அன்று அங்கு பிரசன்னமாயிருந்தார்கள். அவர்கள் எந்த நேரத்திலும் ஒருவரையொருவர் குற்றம்சாட்டி பிரச்சனைகளை எழுப்பாத வண்ணம் அவர்களுடைய பேச்சுக்களை வைத்திருந்தார்கள். ஆகவே அந்த விதத்தில் பார்க்கின்ற பொழுது எல்லோருமே இந்த நிலையை நன்றாக உணர்ந்திருக்கின்றார்கள். தற்பொழுது இந்த பிரச்சனையை தீர்க்க வேண்டிய கால கட்டம் வந்திருக்கின்றது. முடியுமான வரையிலே நாங்கள் இவர்களுடன் சேர்ந்து இந்த பிரச்சனைகளை தீர்ப்போம் என்று. ஆனால் அவர்களுக்கு என்று ஒரு மனோநிலை இருக்கின்றது. ஒற்றையாட்சியை நாங்கள் கைவிட்டோமானால் ஒவ்வொருத்தரும் நாட்டை பிரித்து எடுத்துவிடுவார்கள் என்று ஏதோவொரு விதமாக அவர்களின் மனதில் பதியப்பட்டிருக்கின்றது.

**கேள்வி : குறிப்பாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி இந்த சந்திப்பை நிராகரித்திருந்கது. அல்லது இவர்களது அனைத்து கூட்டுக்களும் சேர்ந்து தமிழ் மக்களுக்கு ஒரு சதி வேலையை ரணில் விக்ரமசிங்கவுடன் சேர்ந்து ஏற்படுத்துகின்றார்கள் என்ற கருத்தையும் முன்வைக்கின்றார்கள். இது தொடர்பாக உங்களது கருத்து என்ன?**

பதில் : அதாவது எந்த காலத்திலும் பகிஸ்கரிப்பதால் எந்த நன்மையும் கிடைக்காது. ஒரு விடயத்தை நாங்கள் இன்னொருவருடன் பேசியதால் தான் அதிலிருந்து ஏதாவது பெறுபேறுகளை பெறலாம். நாங்கள் அதைப்பற்றி நேரத்துடனேயே சொல்லி விட்டோம். ஆகவே இது தோல்வியடைந்தது என்று சொல்வதிலே எந்த நன்மையும் இல்லை. ஏனென்றால் பேச்சுக்கள் தோல்வியடையக்கூடும். அதற்காக பேச்சுக்குப் போகாமல் இருப்பதால் எந்த வித நன்மையும் கிடைக்காது. தற்போதைய நிலையிலே நாங்கள் எல்லோரும் சேர்ந்து இந்த நாட்டை மேன்மை நோக்கிச் செல்ல உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருக்கின்றது. எங்களுக்கும் இதற்கும் தொடர்பில்லை நாங்கள் இதற்கு வரமாட்டோம் என்றவொரு நிலை மிகவும் மோசமானதொரு நிலை.

ஏனென்றால் எங்களுடன் சேர்ந்து இந்த நாட்டில் இருக்கும் எத்தனையோ இனத்தவர்களை நாங்கள் புறக்கணித்து எங்களுக்கு இதைத்தாருங்கள் இல்லையென்றால் நாங்கள் வரமாட்டோம். அல்லது எங்களுடன் பேசுவதிலே எந்த பயனுமில்லை என்றெல்லாம் கூறுவதிலே அவர்களுடைய சிறுபிள்ளைத்தனம் தான் எனக்கு தெரிகின்றது. அவ்வாறு கூறுவதால் எந்தவித நன்மையும் எமக்கு கிடைக்கப்போவதில்லை. ஒருத்தருடன் ஒருத்தர் பேசி அதனுடைய பலாபலன்களைப் பெற்றுக்கொள்வதில் தான் எங்களுக்கு நன்மை இருக்கின்றது தோல்வியடையலாம் எத்தனையோதரம் தோல்வி அடைந்திருக்கின்றோம் தோல்விகளை கண்டு நாங்கள் பின்னடைய வேண்டிய தேவையில்லை. நாங்கள் பேசி எங்களுடைய கருத்துக்களை அவர்களுக்கு தெரிவித்து அதனூடாக சில நன்மைகளை பெற்றுக்கொள்ள வேண்டும். அதுமட்டுமல்ல நான் ஏற்கனவே கூறியிருக்கின்றேன் இந்திய மத்தியஸ்தன் தேவை என்று. அன்று சிலர் கூறினார்கள் நீங்கள் இந்திய மத்தியஸ்தன் தேவை என்று சொல்லாமல் என்னத்துக்காக இந்த பேச்சுக்களுக்குப் போகின்றீர்கள் என்று. அது மத்தியஸ்தன் வரவேண்டிய நிலை. தருணம் இப்பொழுது அல்ல. தற்பொழுது சகல கட்சிகளும் சேர்ந்து தான் அன்று பேச போயிருக்கின்றார்கள். இந்தியாவிற்கோ அல்லது வேறு எந்த நாட்டுக்கோ அதில் பங்கில்லை. முதலில் எங்களுடைய வடமாகாணம் வடகிழக்கு மாகாணங்களில் இருக்கின்ற நாளாந்த பிரச்சனைகளை தீர்ப்பதற்கு நாங்கள் கேட்டிருக்கின்றோம் அது முதலாவது. அடுத்தது சட்ட ரீதியாக எங்களுக்கு என்னென்ன உரித்துக்கள் இருக்கின்றதோ அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கூறியிருக்கின்றோம். மூன்றாவதாக தான் அரசியல் யாப்பின் திருத்தங்கள் பற்றி நாங்கள் பேச வேண்டியிருக்கின்றது. அந்த தருணத்தில் அரசியல் யாப்பு திருத்தத்தை பற்றி நாங்கள் பேசுகின்ற பொழுது இந்தியாவினுடைய அனுசரணை கட்டாயமாக தேவையாக இருக்கும். ஏனென்றால் 13 ஆம் திருத்த சட்டம் ஒன்று தான் தமிழ் மக்களுக்கு தற்பொழுது இருக்கும் ஒரேயொரு சட்ட ரீதியான ஒரு சட்ட ஏற்பாடுகள்.

ஆகவே அதனை நாங்கள் நீக்குவதாக இருந்தால் அதிலும் பார்க்க மேம்பட்ட சட்ட ஏற்பாடுகளை நாங்கள் அங்கு கொண்டு வர வேண்டும். அது எங்களால் முடியாது ஏனென்றால் புலிகள் இருந்த காலத்திலே அவர்கள் புலிகளுக்கு பயந்து சிலசில நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள். ஆனால் தற்பொழுது நாங்கள் பலமற்றவர்களாக இருக்கின்ற காரணத்தினால் இந்தியாவினுடைய அனுசரணை கட்டாயமாக எங்களுக்கு தேவையாக இருக்கின்றது. அந்த பலத்தை நாங்கள் சமநிலைக்கு கொண்டு வருவதற்கு அவர்களுடைய அனுசரணை தேவையாக இருக்கின்றது. ஆகவே தான் அந்த தருணத்திலே அரசியல் யாப்பை நாங்கள் மாற்றும் பொழுது எங்களுக்கு கட்டாயமாக இந்தியாவினுடைய அனுசரணை அல்லது வேறொரு நாட்டின் அனுசரணை கட்டாயமாக தேவையாக இருக்கும். இதை உணர்ந்து தான் போலும் ஏற்கனவே எரிக்சொல்ஹைமை இவர்கள் கூட்டி வந்திருக்கின்றார் ரணில். ஆனால் நாங்கள் எரிக்சொல்ஹீமை நம்பமுடியாது ஏனென்றால் முன்னர் பல விடயங்களிலும் அவர் அரசாங்கத்திற்கு சார்பாக நடந்து கொண்டார் என்ற கருத்து இருக்கின்றது. ஆகவே அவர் அங்கு இருந்தாலும் பரவாயில்லை இந்தியாவினுடைய அனுசரணையையேனும் நாங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். ஆகவே இவையெல்லாவற்றையும் நாங்கள் பெறக்கூடியதாக இருந்தால் ஒருவேளை அரசியல் யாப்பிலும் நாங்கள் மாற்றங்களை கொண்டுவரலாம். அல்லது புதிய அரசியல் யாப்பு ஒன்றைக் கொண்டுவரலாம் என்பது என்னுடைய நம்பிக்கை.

**கேள்வி : ஜனாதிபதியினுடைய சந்திப்பிலே நீங்கள் ஒரு விடயத்தை குறிப்பிட்டிருந்தீர்கள் வேறும் கூறப்படவேண்டிய விடயங்கள் இருக்கின்றனவா?**

பதில் : நாங்கள் பேசிக்கொண்டது என்னவென்றால் தற்பொழுது இருக்கும் எங்களது பிரச்சனைகளை உடனேயே தெரியப்படுத்த என்று தனிப்பட்ட முறையில் என்னிடம் சொல்லிவிட்டுத்தான் சென்றார். நான் சிலநாட்கள் விடுமுறைக்குச் செல்லுகின்றேன் ஆகவே உங்களுடைய பிரச்சனைகள் இருக்கின்ற பொழுது அவற்றையெல்லாம் எழுதி நீங்கள் பிரதம மந்திரியிடம் கொடுங்கள் நான் 5 ஆம் திகதி பாராளுமன்றம் தொடங்கும் பொழுது இது சம்மந்தமாக நான் வந்த உடனேயே நடவடிக்கைகள் எடுக்கின்றேன் என்று சொல்லிவிட்டுச் சென்றார். முன்னரும் நான் அவருக்கு வாக்களிப்பதற்கு முதல் நாள் அவருடன் பேசிய பொழுதும் பல விடயங்களை நான் குறிப்பிட்டிருந்தேன் இவற்றையும் நான் குறிப்பிட்டிருந்தேன். அவற்றை தான் செய்து முடிப்பதாக கூறியிருந்தார். அதனுடைய ஒரு தொடர்ச்சியாகத் தான் நான் இப்பொழுது அவர் செய்யும் நடவடிக்கைகளை ஆதரிக்கின்றேன். எனவே நன்மைகள் கிட்டக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்பது தான் என்னுடைய கருத்து.

**நேர்காணல் : இரணியன்**

# தீர்வு திட்டம் தொடர்பில் தமிழ் கட்சிகள் ஒன்றிணைவது சாத்தியமற்றதென கருதும் ரணில் காரணம் என்ன?

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்

**கேள்வி : தீர்வு திட்டம் தொடர்பாக ஜனாதிபதியின் கருத்து எவ்வாறு அமையப்பெற்றுள்ளது?**

தீர்வு திட்டம் சம்பந்தமாக ஜனாதிபதி ஏற்கனவே வடக்கை பற்றித்தான் குறிப்பிட்டு பேசியிருந்தார் வடக்கு மக்களுக்கான தீர்வை கொண்டு வருவோம் என்று. ஆனால் அது பின்னர் வடக்கு மக்களுக்கு அல்ல வடகிழக்கு மக்களுக்கு என்ற மாதிரி தமிழ் தேசிய கூட்டமைப்பு போன்று ஏனைய கட்சிகளும் கதைத்தார்கள். கதைத்ததன் பின்னர் தான் 13 ஆம் திகதி சர்வ கட்சி கூட்டம் இடம்பெற்றது. சர்வகட்சி கூட்டம் இடம்பெற்றதன் பின்னர் எரிக்சொல்ஹீமை காலநிலை தொடர்பான ஆலோசகராக நியமிக்கப்பட்டிருப்பவரால் ஏற்கனவே விடுதலைப்புலிகள் இருந்த காலத்திலே பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றது அதில் மாற்றம் இல்லை. அவர் தற்பொழுது இதில் மறைமுகமாக உள்நுழைந்திருக்கின்றார் என்றவொரு விடயம் பேசப்படுகின்றது. ஏனென்றால் நேற்றும் கூட சம்மந்தன் ஐயா சுமந்திரனுடன் கதைத்திருக்கின்றார். இன்று அதன் பின்னர் ஜனாதிபதியுடன் கதைத்திருக்கின்றார் அதையொட்டி இன்று தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழ் தேசியத்தின் கட்சிகளில் தலைவர்களாக வரவேண்டும் என்றவொரு எண்ணத்தில் சந்திப்பதாக ஒரு கேள்வி இருக்கின்றது.

ஆனால் தமிழ் தலைமைகளை பொறுத்தவரையில் 2019 க்கு பின்னர் ஒரு கட்சியாக இருந்தது அந்த கட்சிக்குள் இருந்து 10 கட்சி வந்துவிட்டது. அந்த கட்சியில் இருந்தவர் தான் இன்று பல கட்சிகளின் பெயரை சொல்லி தாங்கள் அனைவரும் தலைவர் என்ற தோரணையில் ஒவ்வொருவராலும் ஒவ்வொரு தீர்வு மற்றும் அறிக்கை என்ற அடிப்படையில் ஒருவர் 13 க்கு மேல் தேவை என்றால் ஒருவர் 13 ஐ அமுல்படுத்த வேண்டும் என்பதும், சமஷ்டி என்பதும் பரவலாக ஒத்த கருத்து நிலவுவது உண்மை. இருந்தாலும் கூட எல்லா தமிழ் கட்சிகளுக்கும் ஒரு உடன்பாடு இருக்கின்றது பிரிக்கப்படாத இலங்கையிலே சமஷ்டி என்ற அடிப்படையில் வடகிழக்கிணைந்த ஒரு தீர்வு வரவேண்டும் என்ற கருத்தானது கட்சிக்குள் போட்டியிருந்தாலும் இதில் ஒரு கருத்து ஒற்றுமை இருப்பது என்பது வெளிப்பாடு. சிலர் அதில் பங்குபற்றாவிட்டாலும் நிபந்தனைகளுடன் பேச வேண்டும் என்று சிலர் கூறுகின்றார்கள் நிபந்தனை தேவையில்லை போய்த்தான் பேசவேண்டும் என பல கட்சிகள் இருக்கின்றது அதில் ஒற்றுமை இல்லாத விடயம் எல்லோருக்கும் தெரிகின்றது. என்ன தீர்வு எடுப்பார்கள் என்று தமிழ் மக்கள் மத்தியில் ஒரு கருத்தும் இருக்கின்றது. நல்லாட்சியில் தமிழ் தேசிய கூட்டமைப்பை ஏமாற்றிய பிரதமர் தான் தற்பொழுது ஜனாதிபதியாக வந்திருக்கின்றார் என்ற சந்தேகங்கள் எல்லாம் இருக்கின்றது.

ஆனால் தற்பொழுது இருக்கின்ற கள நிலவரம் என்னவென்றால் பொருளாதார நெருக்கடிக்குப் பிற்பட்ட காலப்பகுதியில் இலங்கை அரசாங்கத்தில் ஒரு பொருளாதாரத்தில் மீள் எழுச்சி பெறுவதில் அதில் பங்குபற்றி திரும்பப்பெறுவதற்கு சர்வதேசத்தில் வசிக்கின்ற புலம்பெயர் தமிழ் மக்களின் பங்களிப்பு முதலாவதாக இதற்கு தேவையாக இருக்கின்றது. இரண்டாவது தேவையான விடயமாக ஐ.எப்.எம் என்ற சர்வதேச நிதியைப் பெறுவதற்கு இதை இங்கு வழங்குவதற்கு இவர்கள் பேச்சுவார்த்தைகள் நடத்தினாலும் ஐரோப்பிய நாடுகளில் இருக்கின்ற புலம்பெயர் சக்திகள் தமிழ் அமைப்புக்கள் அதனை வழங்கவிடாது தடுக்கின்ற அல்லது இங்கிருக்கின்ற உண்மை நிலைகளை இனப்படுகொலைக்கு தீர்வு காணப்பட வேண்டும்.

காணி அபகரிப்பு செய்யப்படவில்லை வடகிழக்கில் இன்னும் பொருளாதாரத்தை கட்டியெழுப்பக்கூடிய அரசியல் சூழ்நிலை வரவில்லை என்ற காரணங்களை வைத்து தான் அதை கொடுக்ககூடாது என்ற அழுத்தங்களை கொடுத்துக்கொண்டும் இருக்கின்றார்கள். அதுவும் இலங்கை அரசாங்கத்திற்கு தெரியும். ஆகவே இந்த விடயத்தில் அரசியல் தீர்வை கொண்டு வர வேண்டும் என்ற முயற்சி எடுக்கப்படுகின்றது. அதற்காகத்தான் இந்த எரிக்சொல்ஹீமையும் அதில் திரும்ப திரும்ப பேச்சுக்கள் எல்லாம் இடம்பெறுகின்றது. இந்த நிலைப்பாடு கடும்போக்கு சிங்கள தலைவர்களுக்கும் தற்பொழுது புரிந்திருக்கின்றது.

**கேள்வி : தமிழ் தரப்புக்கள் ஒன்றிணைந்து வாருங்கள் என்று ஜனாதிபதி கூறுவது என்பது எந்த வகையில் சாத்தியமாகும்? எந்த தமிழ் தரப்பை அவர் கூறுகின்றார்?**

பதில் : அவர் வடகிழக்கு என்று கூறாமல், வடக்கு என்று மட்டும் கூறாது அவர் பொதுவாகத் தான் கூறுகின்றார் தமிழ் தரப்புக்கள் வாருங்கள் என்று. அவர் என்ன கூறவருகின்றார் என்றால் சுட்டிக்காட்டாவிட்டாலும் தமிழ் தேசிய கட்சியைத் தான் சொல்லுகின்றார். இனப்பிரச்சனைக்கான தீர்வை பிள்ளையான் போய் அங்கே தீர்க்க முடியாது தானே. வடகிழக்கிலுள்ள தமிழ் கட்சிகள் தான் அதற்கு தீர்வு காணப்பட வேண்டும் என்று அவருக்குத் தெரியும். ஒற்றுமைப்பட மாட்டார்கள் அதை வைத்துக்கொண்டு இழுக்கலாம் என்று தான் அவர் ஒற்றுமையாக வாருங்கள் ஒற்றுமையாக வாருங்கள் என்று கூறுகின்றார். பல கட்சிகள் இன்று ஒற்றுமையாகத் தான் இருக்கின்றார்கள். தமிழ் தேசிய மக்கள் முன்னணி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர் மட்டும்தான் நிபந்தனை இல்லாமல் போகக்கூடாது என்றவொரு காரணத்தை கூறியிருக்கின்றார் அதுவும் சரி. என்னைப் பொறுத்தவரை நான் கூறும் விடயம் என்னவென்றால் எல்லா கட்சிகளும் ஒன்றாக இருந்தாலும் சில முடிவுகள் எடுக்கமுடியாது. சில கட்சிகள் அதிலிருந்து விலகி கடும்போக்கான சில முடிவுகளை சொல்வதும் இந்த பேச்சு வார்த்தைகளும் சாதகமாக அமையும் எப்படியென்றால் அவர்களை சுட்டிக்காட்ட வேண்டிய தேவை இருக்கின்றது எங்களை விட இன்னும் ஒரு கட்சி இதை எதிர்த்துக்கொண்டிருக்கின்றது. ஆகவே அவர்களையும் திருப்திபடுத்த வேண்டுமாக இருந்தால் நீங்கள் அதற்கான தீர்வு வழங்க வேண்டும் என்பதை சொல்வதற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணி போகின்ற கட்சிகள் பாவிக்கலாம் என்பது தான் எனது கருத்து. இப்படி தான் தற்பொழுது இருக்கும் களவரம் இருந்துகொண்டு இருக்கின்றது.

**கேள்வி : உண்மையில் இதில் இன்னுமொரு விடயம் என்னவென்றால் இதிலும் ஒரு வடக்கரசியல் கிழக்கரசியல் என்ற பாகுபாட்டை ஏற்படுத்துகின்ற ஒரு தோற்றப்பாடு தோற்றுவிக்கப்பட்டதாக அண்மையில் ஊடகங்களில் செய்திகள் வந்தது. இது தொடர்பாக நீங்கள் என்ன கூறவிரும்புகின்றீர்கள்?**

பதில் : ஜனாதிபதி அவ்வாறு இப்பொழுது மட்டும் கூறவில்லை நீங்கள் பார்த்திருப்பீர்கள் நல்லாட்சி அரசாங்கம் நடத்தும் பொழுதும் கூட தமிழ் மக்களின் தீர்வு திட்டம் தொடர்பிலும் கூட வடக்கு மக்களுக்கான தீர்வு என்று தான் சொன்னார். நன்றாக தெரியும் போராட்டம் நடந்தது. வடகிழக்கு மக்களுக்காகத்தான் தீர்வு நடக்கின்றது என்று சொன்னாலும் கூட அவர் அதில் எதை கவனித்திருக்கின்றார் என்றால் வடக்கில் தானே தமிழ் மக்கள் கூட இருக்கின்றார்கள் ஆகவே வடக்கு மக்களுக்கான தீர்வுதிட்டம் என்று சொல்லப்படும் என்ற மனப்பாங்கும் திட்டமிட்டும் அதை புறக்கணிக்கின்றார் என்று நினைக்கின்றேன். நான் யோசிப்பது என்னவென்னறால் 3 இனத்தவர்கள் இருக்கின்ற காரணத்தினால் மற்றைய இனத்தவர்களை ஏன் பகைப்பான் என்பதற்காக அப்படியொரு காரணத்தை சொல்லுகின்றார் என்று நினைக்கின்றேன். ஆனால் அப்படி சொன்னாலும் போகின்ற கட்சிகள் நியாயமான கருத்து ஒன்றை முன்வைத்திருக்கின்றார்கள் வடக்கிற்கு மட்டும் தீர்வு வழங்க முடியாது வடகிழக்கிற்கும் தீர்வு வழங்க வேண்டும் என்று கூறியிருக்கின்றார்கள். அவர் அதை மறுதளிக்கவில்லை.

**கேள்வி : தமிழர்களுடன் ஒன்றிணையக்கூடிய பல கட்சிகளை தமிழரசுக் கட்சி புறக்கணித்துவருகின்றது அல்லது அவர்களை தங்களுடன் ஒத்து பயணிக்க முடியாது என்று பல காரணங்களை காட்டுவதாக ஏனைய தரப்பு கட்சிகளால் குற்றம் சுமத்தப்படுகின்றது காரணம் என்னவென்றால் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றங்களில் கூட தமிழரசுக் கட்சி தனித்துப்போட்டியிட வேண்டும் என்ற ஒரு நிலைப்பாடு வவுனியாவில் எடுக்கப்பட்டதாகக்கூட ஊடகங்களிலே வந்தது. அவ்வாறு ,ருக்கும் பொழுது எவ்வாறு நீங்கள் அந்த ஒற்றுமையை பேணி ஒரு அரசியல் தீர்வு திட்டத்திற்கான காய்நகர்த்தலை நகர்த்த முடியும் என்று பார்க்கின்றீர்கள்?**

பதில் : முதலாவது ஊடகங்களில் வந்த கருத்தே பிழையானது. ஊடகங்களில் எதனை சொல்லுகின்றார்கள் என்பதனை பார்த்து கதைப்பதும் இல்லை அங்கு முடிவெடுத்ததாகவும் இல்லை. நானும் போனேன் கூட்டத்திலே அதிலே கூறப்பட்டது என்னவென்றால் எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தல் இடம்பெறுமாக இருந்தால் கடந்த தேர்தலிலே என்ன நடந்தது தமிழ் தேசிய கூட்டமைப்பு ஒரு இடத்திலும் ஆட்சி அமைக்கவில்லை. உதாரணத்திற்கு நாங்கள் 20 வட்டாரமுள்ள மட்டக்களப்பு மாநகர சபையிலே 17 வட்டாரத்தினை நாங்கள் கைப்பற்றினோம் தேர்தல் மூலமாக. ஆனால் அந்த 17 பேரையும் விட எதிராக வந்த 19 பேர் மூன்று வட்டாரத்திலும் என்றால் ஏனையவை எல்லாம் பட்டியல் வட்டாரம் மூலம் மற்றைய கட்சிகள் நிரம்பியது.

எனவே அந்த முறையிலிருந்து நாங்கள் விடுபடுவதாக இருந்தால் தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருக்கின்ற மூன்று கட்சிகளும் மூன்று சின்னத்திலே பிரிந்து போட்டியிட்டால் அந்த இடங்களை நாங்களும் கைப்பற்றி ஆட்சி அமைக்கும் பொழுது தமிழ் தேசிய கூட்டமைப்பில் ஆட்சி அமைத்தனான் என்று ஆலோசனை தான் கூறப்பட்டது முடிவல்ல. ஏனைய கட்சிகளுடன் கதைத்து தான் அந்த தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் என்று தெளிவாக கூறப்பட்டது அது ஒன்று. அடுத்தது இலங்கை தமிழரசுக் கட்சி மற்றவர்களை புறக்கணிப்பது என்பது அது இன்று நேற்று அல்ல 2009 க்கு பின்னர் ஈ.பி.ஆர்.எல். எப் சுரேஸ் பிரேமச்சந்திரன் தொடக்கம் ரெலோவில் இருக்கின்ற விலகிய சிறிகாந்தா சிவாஜிலிங்கம் போன்றோரின் கருத்தும் புறக்கணிப்பது என்பது தான்.

ஆனால் என்ன பிரச்சனை என்றால் தாங்கள் ஒரு காரணத்தை விட்டு விலகுவதற்காக இலங்கை தமிழரசுக் கட்சி ஒரு பாரம்பரிய கட்சி என்ற காரணத்தினால் பலி போடப்படுகின்றது. அதில் சில பிழைகள் இருக்கலாம் அதை நான் ஏற்றுக்கொள்ளுகின்றேன். ஆனால் அந்த சில பிழைகளையும் கதைத்து தீர்மானிப்பதற்கு முன் அவர்கள் புறக்கணிக்கின்றார்கள் அல்லது அவர்கள் எங்களை ஒதுக்குகின்றார்கள் என்பது தான் நாங்கள் பார்த்த வரலாறாக இருக்கின்றது.

**கேள்வி : வினோதராதலிங்கம் கூட தமிழ் தேசிய கூட்டமைப்பு ஒரு விபச்சார வீடு என்றும்கூட கூறி பாரிய சர்ச்சை எழுந்திருந்தது அல்லவா?**

பதில் : அவரும் அதே விபச்சார வீட்டு சின்னத்தில் இருந்து தானே வந்தார் அவர் தான் அதில் விபச்சாரம் செய்வதாக நாங்கள் கருதவேண்டி வரும். எனவே அது அவரின் தனிப்பட்ட கருத்து.

**கேள்வி : ஒற்றுமை இல்லை என்பது சிலவேளை இந்த தமிழ் தரப்புக்கள் ஒன்றிணைந்து வரவில்லை ஆகவே நான் இவர்களுடன் பேசி ஒரு முடிவிற்கு வரமுடியாதுள்ளது என்பது அவர் சர்வதேச ரீதியாக எடுத்துக்கொள்வதற்காக ரணிலினுடைய இராஜதந்திரமாகவே இருக்கலாம் என்றே கருதப்படுகின்றது. இது தொடர்பாக உங்களது கருத்து என்ன?**

பதில் : அப்படி சொல்லி விலகமுடியாது. என்ன பிரச்சனை என்றால் ஒற்றுமை இல்லையென சொல்லி விலகினாலும் அங்கு சர்வதேசத்திலே இவரிற்கு காசு கிடையாது. ஏதோவொரு தீர்வு வைக்க வேண்டிய தேவை இவரிற்கு இருக்கின்றது. அவர் சிலவேளை அந்த இராஜதந்திரத்தில் ஒற்றுமையாக வாருங்கள் என்று கூறியிருக்கலாம். ஆனால் அப்படி கூறிவிட்டு ஒற்றுமை இல்லை நீங்கள் போங்கள் என்று சொன்னால் அடுத்தகட்டம் என்ன செய்யப்போகின்றார். புலம்பெயர்ந்த மக்களின் நிதி வருமா அல்லது சர்வதேச நாணய நிதியம் வழங்குமா அதில் பல செயல்கள் இருக்கின்தல்லவா. எனவே அவர் அப்படி சொன்னாலும்கூட ஏதொவொன்று அவர் கதைப்பதற்கு அழுத்தம் உள்ளது என்பது மட்டும் உண்மை.



**கேள்வி : இதில் குறிப்பாக கிழக்கு மாகாணத்தை பொறுக்கவரையில் பாராளுமன்றத்தில் கூடுதலான பேச்சுக்களாக பிள்ளையான் ஒரு விடயத்தை செய்தால் பிள்ளையான் பற்றி சாணக்கியன் பேசுகின்றார், சாணக்கியன் ஏதாவது செய்தால் பிள்ளையான் சாணக்கியன் பற்றி பேசுகின்றார். இவ்வாறு தமிழ் மக்களை பிரதிபலிக்கின்ற தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறு செய்கின்ற பொழுது அந்த மக்களுக்கான சரியானதொரு அபிவிருத்தியை கொண்டுசெல்ல முடியாத சூழல் இருக்கின்றதாக தற்பொழுது பார்க்கப்படுகின்றது. இது தொடர்பாக உங்களது கருத்து என்ன?**

பதில் : அதை முதல் பேசியவர்களிடம் கேட்க வேண்டும். அது கட்சியால் பேசப்படவில்லை பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரையொருவர் பாராளுமன்றத்தில் பேசிய விடயம். இதனால் கட்சிக்கு எந்த பிளவும் இல்லை தீர்வுக்கும் எந்த பிளவும் இல்லை, மக்களுக்கும் எந்த பிளவும் இல்லை. ஒருவரது பிழையை ஒருவர் சுட்டிக்காட்டுகின்றார் அவ்வளவும் தான்.

**நேர்காணல் : நெற்றிப்பொறியன்**

# வட, கிழக்கு காணிசுவீகரிப்பு தொடர்பில் தமிழ் அரசியல் தலைமைகளின் அசமந்த போக்கு கவலைக்குரியது

**முன்னாள் வடமாகாண சபையினுடைய விவசாய அமைச்சர் க. சிவநேசன் (பவன்)**

**கேள்வி : இன்றைய சமகால அரசியல் பார்வையிலேஎல்வளையம்என்றபோர்வையில் காணி அபகரிக்கின்ற விடயங்கள் கூடுதலாக வடபகுதியிலே இடம்பெறுகின்றது. இது தொடர்பாக நீங்களும் பல்வேறு விடயங்களை ஊடகங்களிலே கூறியிருந்தீர்கள் இது திட்டமிட்டு நகர்த்தப்படுகின்றதா அல்லது ஏன் இவ்வாறானதொரு நிலைமை ஏற்படுகின்றது இதனை தடுப்பதற்கான நடவடிக்கைகளை ஏன் தமிழ் தரப்பு மேற்கொள்ளவில்லை என்ற ஒரு கேள்வியும் எழுப்பப்படுகின்றது. இது தொடர்பாக உங்களது கருத்து என்ன?**


பதில் : இந்த காணி அபகரிக்கின்ற விடயம் அல்லது இந்த பிரதேசம் தமிழர்களுடைய தாயக பிரதேசத்தை ஆக்கிரமிக்கின்ற விடயம் அது இன்று நேற்று தொடங்கிய விடயம் இல்லை. நான் நினைக்கின்றேன் இது சிங்கள பேரினவாதம் மிக நீண்ட காலத்திற்கு முன்பு இருந்தே ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. குறிப்பாக சொல்வதென்றால் போராட்டங்கள் ஆரம்பிப்பதற்குரிய காரணங்களிலே இதுவும் ஒரு காரணமாக இருக்கின்றது. சாந்தீக போராட்டமாக இருந்தாலும் சரி அல்லது ஆயுத ரீதியான போராட்டமாக பரிணாமமடைந்ததற்கு இந்த நில ஆக்கிரமிப்பும் ஒரு காரணமாக இருக்கின்றது என்பதை நாங்கள் மறுக்க முடியாது அந்த வகையில் குறிப்பாக மணலாற்றுப் பிரதேசம் அல்லது வடக்கு கிழக்கிற்கு இடையில் இருப்பதாக கருதப்படுகின்ற கொக்குழாய் மற்றும் தென்னமரவாடி போன்ற பிரதேசத்தை உள்ளடக்கிய பிரதேசங்கள் சிங்கள பேரினவாதிகளை பொறுத்தவரையில் அந்த பகுதிகளை ஆக்கிரமிக்கின்ற நடவடிக்கைகளானது அங்கே பல காணிகள் அபகரிக்கப்பட்டு விட்டன. தமிழர்களால்செய்கை பண்ணப்பட்டு வந்த பல நெல் வயல்களை அவர்கள் ஆக்கிரமித்திருக்கின்றார்கள் ஆக்கிரமிப்புடன் தொடர்ந்து அதை அவர்கள் செய்கை பண்ணிக்கொண்டிருப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது. ஆனால் இதற்கு எதிராக தமிழர்கள் பலமுறை போராடி அல்லது ஆரம்ப காலங்களில் அங்கிருந்து விரட்டப்பட்டிருக்கின்றார்கள். இவ்வாறு பல பிரச்சனைகள் வந்தும் மணலாற்று பிரதேசத்திலே தொடர்ந்தும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

ஆனால் அது மட்டுமல்ல அங்கே இருக்கின்ற தமிழர்களுடைய அடையாளங்கள் நீங்கப்படுகின்றது. அங்கிருக்கின்ற இடங்களினது பெயர்கள் மாற்றப்பட்டிருக்கின்றன இவ்வாறான பல பிரச்சனைகள் தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டுவருகின்றது. அதன் பின்னர் இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டபொழுதும் கூட இந்த இடத்தின் முக்கியத்துவம் மட்டுமல்ல இந்த பிரச்சனைகள் அங்கு பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. அதற்காக வடக்கு கிழக்கை இணைக்கின்ற ஒரு பாலம் கொக்குழாயில் நிறுவப்பட வேண்டும் அந்த பாதை செய்து கொடுக்கப்பட வேண்டும் அல்லது செய்யப்பட வேண்டும் என்ற விடயங்கள் இலங்கை இந்திய ஒப்பந்த காலத்தில் இருந்தே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

அதுமட்டுமல்ல தற்பொழுது குறிப்பாக இந்த குறுந்தூர் மலையில் இருக்கின்ற மலை உச்சியிலே விகாரை கட்டுகின்ற விடயம் தொல்பொருள் திணைக்களத்தில் உள்வாங்கப்பட்டு அங்கிருக்கின்ற மிக பழமைவாய்ந்த ஒரு வழிபாட்டு தளம் மட்டுமல்ல ஒரு மிகப்பெரிய இராஜதானி அங்கிருந்திருக்கின்றது. இராஜதானி இருந்தமைக்கு அடையாளங்கள் பல இருக்கின்றது. இன்றும் அந்த சிதைவுகளை காணக்கூடியதாக இருக்கின்றது. அதிலே பல விடயங்கள் 3000 ஆண்டுகள் பழைமை வாய்ந்த அடையாளங்கள் கூட அங்கு காணப்படுகின்றது குறிக்கப்பட்ட கிராமிய எழுத்துக்கள் அங்கே இருந்தது. இவற்றையெல்லாம் மூடி மறைத்து அதை மூடித்தான் விகாரை கட்டுகின்ற வேலை தற்பொழுது இங்கிருக்கின்ற மாவட்ட அல்லது நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பையும் பொருட்படுத்தாது அது தொடர்ச்சியாக கட்டப்பட்டுக்கொண்டிருக்கின்றது. அதை கேட்பதற்கு யாருமே இல்லை என்ற நிலைமை தான் உண்மையிலே இருக்கின்றது இதுவொரு விடயம். அதுமட்டுமல்ல வட்டுவால் பாலம் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த இடம் அந்த இடத்தில் கோட்டபாய முகாம் என்று ஒன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. அதாவது வட்டுவால் பாலத்தினுடைய மறுமுனையிலே நேவி காம்ப் ஒன்று அங்கே போடப்பட்டிருக்கின்றது. முள்ளிவாய்க்கால் தொடர்ந்தும் வந்தாலும்கூட அவர்கள் முகாம் அமைத்திருக்கின்ற இடம் வட்டுவால் என்று கூறப்படுகின்ற இடத்தை சேர்ந்ததேயாகும்.

ஆனால் அந்த முகாம் அமைந்துள்ள இடத்திலே மிக நீண்ட காலத்திற்கு முன்பு தமிழர்களின் உறுதிகள் இருந்தும் கூட அதை அவர்கள் எந்த வித கேள்வியும் இல்லாமல் அவர்களுடைய எதிர்ப்புக்களையும் மீறி அந்த இடத்தை அளவீடு செய்வதும் அதை விலைக்குப்பெறுவதாக கூறி மக்களை மிரட்டுவது போன்ற பல விடயங்கள் இன்றுவரை தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டிக்கின்றது. இன்று இருக்கின்ற பொருளாதார சூழ்நிலையால் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலைமை இருந்தும் கூட அவர்கள் தங்களது நிலைப்பாட்டிலிருந்து அபகரிப்பு விடயங்களில் இருந்து எந்தவித மாற்றமும் இல்லை. அதாவது மகாவலி எல் வளையம் என்று அவர்கள் குறிப்பிட்டு மகாவலி திட்டத்திற்கு கீழ் இருக்கின்ற சடடங்கள் மிக கடுமையானவை அதில் இங்கிருக்கின்ற பொது மக்களோ அல்லது உள்ளூரில் இருக்கின்ற எந்தவித சட்டங்களையும் செல்லுபடியற்றதாக்க முடியும். மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அவர்கள் கொண்டுவந்த அந்த விடயங்கள். அதை பயன்படுத்தி முல்லைத்தீவினுடைய பெரும் பகுதியை அந்த எல் வளையத்திற்குள்ளே உள்ளடக்கியிருக்கின்றார்கள். அதனுடன் சேர்ந்து மகாவலியும். வடமாகாணத்தில் இருக்கின்ற இடங்களிலே முல்லைத்தீவிலே நீர் வளம் கூடுதலாக இருக்கின்றது. பல குளங்கள் இருக்கின்றது இங்கிருக்கின்ற குளங்கள் சிறிய சிறிய குளங்கள் எல்லாம் தூ றுவாரப்படுமாக இருந்தால் இங்கு நீர்த்தேவை என்பது தேவையற்றதொரு விடயம். மகாவலி நீர்த்தேக்கத்திலிருந்து தான் இங்கு நீர் கொண்டு வந்து இந்த இடத்தை வளப்படுத்த வேண்டும் என்ற எந்தவொரு தேவையும் இல்லை. அது வரட்சியான ஒரு பிரதேசத்திற்கு கொண்டு சென்று அங்கே பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய பயன்படுத்த முடியும்.

ஆனால் இந்த பிரதேசத்தை பொறுத்தவரையிலே மகாவலி நீரைத்தான் கொண்டு போய் இந்த இடங்களை வளப்படுத்த வேண்டும் என்ற எந்தவொரு தேவையும் கிடையாது. உங்களுக்கு தெரியும் முல்லைத்தீவு மாவட்டத்திலே ஏறக்குறைய 3 அல்லது 4 பெரிய குளங்கள் இருக்கின்றன. அதைவிட ஆயிரக்கணக்கான குளங்கள் தூறுவாரப்படாமல் இருக்கின்றது. அதுமட்டுமல்ல இங்கிருக்கின்ற நிலப்பரப்பில் 65 வீதமான நிலப்பரப்பு வனவளத்தை கொண்டிருக்கின்றது. 65 வீதமான வளவளத்தை கொண்டிருக்கின்ற நாட்டிற்கு இவ்வளவு பிரதேசத்தில் அபிவிருத்தி செய்யப்படுகின்ற அல்லது விவசாயம் செய்யப்படுகின்ற ஏனைய 35 வீதத்தில் குடியிருப்பு போக மீதி பகுதிக்கு தான் நீர்த் தேவை எங்களுக்கு இருக்கின்றது. அப்படியிருக்கும் பொழுது மகாவலி அபிவிருத்தியை கொண்டுவந்து இங்கு அபிவிருத்தி செய்ய வேண்டிய எந்தவொரு தேவையும் இல்லை. இதன் முற்றுமுழுதான நோக்கம் மகாவலி அபிவிருத்தி திட்டத்தை கொண்டுவந்து தங்களுடைய சட்டத்தை அங்கே நடைமுறைப்படுத்தி தமிழர்களுடைய



நிலப்பரப்பை அபகரிப்பது. இதுவொரு விடயம் மட்டுமல்ல உங்களுக்கு தெரியும் வன ஜீவராசிகள் திணைக்களத்தினூடாக நந்தி கடல் பிரதேசங்கள் முழுவதையும் அவர்கள் தங்களுடைய வனஜீவராசிகள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலே வைத்திருக்கின்றார்கள். எந்த நேரம் வேண்டும் என்றாலும் இங்கு இருக்கின்ற தொழில்களை நிறுத்த இந்த திணைக்களத்தினால் முடியும். அந்த பிரதேசத்திற்கு நீங்கள் செல்லக்கூடாது என்ற சட்டத்தை அவர்களால் அமுல்படுத்த முடியும். எனவே அதைவிட தொல்பொருள் திணைக்களம் உள்ளது. இங்கு பல தொல்பொருள் திணைக்களங்கள் மிக நீண்ட வரலாறுகளை கொண்டிருக்கின்றது. ஆனால் அந்த தொல்பொருள் திணைக்களங்கள் ஆராயப்படுமாக இருந்தால் அது நிச்சயமாக தமிழர்களுக்கு சாதகமானதொரு விடயத்தை தான் தெளிவுபடுத்தும். ஆனால் அவர்கள் அதை பாதுகாப்பது தான் அவர்களது நோக்கமாக கொண்டிருந்தார்களே தவிர குறுந்தூர் மலை போன்ற பிரதேசத்தை தொல்பொருள் திணைக்களத்தினூடாக அதை தோண்டி பார்க்கின்ற பொழுது அவர்களுக்கு தெரிந்திருக்கும் மிக கூடுதலான வரலாறு தமிழர்களது பாரம்பரிய அடையாளங்கள் அங்கே தொடர்ந்தும் தோண்ட தோண்ட வந்து கொண்டிருப்பதால் அதை அவர்கள் மூடித் தான் மீண்டும் அதை தோண்டிப்பார்க்க கூடாது என்ற அடிப்படையில் தான் அவர்கள் இங்கே விகாரையை கட்டி அதை மூடுகின்ற நிலைமை ஏனென்றால் அப்படியொரு கோவிலாக விகாரையை கட்டி அவர்களுக்கு தெரியும் அதை மூடி உள்ளே கொண்டுபோகவேண்டியுள்ளது. இதை ஆராய்ச்சி செய்வது எந்த காலத்திலும் நடக்காத விடயமாக இருக்கும். மிக நீண்ட கால ஆக்கிரமிப்பு திட்டத்துடன் தான் இந்த விடயங்கள் எல்லாம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. நீங்கள் கூறியது போன்று அரசியல்வாதிகள் இந்த விடயத்திலே கூடிய அக்கறை செலுத்தவில்லை என்பது நிச்சயமாக உண்மையான விடயம். ஏனென்றால் நான் நினைக்கின்றேன் சட்ட ரீதியான விடயங்களிலே விகாரை கட்டக்கூடாது என்ற இடத்திற்கு சென்று கேள்வி கேட்ட எல்லோரும் தற்பொழுது சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டிருக்கின்றார்கள். ஆனால் அங்கே அவர்கள் சட்டத்தை எதிர்த்து தொடர்ந்தும் விகாரையை கட்டிக்கொண்டிருக்கின்றார்கள் இது எந்தவிதத்திலே ஒரு ஜனநாயகம் என்று எங்களுக்குத் தெரியவில்லை. ஆனால் இதைக்கூட ஒரு பலமாக இதை எடுத்துச்சென்று கதைக்கக்கூடிய இடங்களிலே கதைக்க வேண்டியவர்கள் அதிலே மௌனமாக இருப்பது கேள்விக்குறியான விடயம்.

**கேள்வி : இப்படியானதொரு காலகட்டத்திலே பாராளுமன்றத்திலே அதனை கொண்டு செல்லலாம் தானே பேசு பொருளாக?**

பதில் : பேசு பொருளாக கொண்டு சென்றாலும் கூட அதிலே எந்தவிதத்திலும் அவர்கள் அக்கறை செலுத்துவதாக தெரியவில்லை. தொடர்ச்சியாக இந்த விடயத்தை கொண்டு செல்ல வேண்டும் என்பதும் மற்றும் இங்கிருக்கின்ற லோக்கல் கவர்மன்டை பொறுத்த வரையிலும் கூட இங்கிருக்கின்ற உள்ளூராட்சி சபைகளில்கூட அல்லது மாகாண சபைகளிலே இருந்த காலங்களிலே இந்த ஆக்கிரமிப்பிற்கு எதிராக சில நடவடிக்கைகள் மேற்கொள்ள முயற்சி செய்தார்கள் தற்பொழுது மாகாணசபை கலைக்கப்பட்ட நிலையிலே அவர்கள் அதை எந்தவித எதிர்ப்புமின்றி தீவிரமாக இதனை மேற்கொண்டு வருவதை காணக்கூடியதாக இருக்கின்றது. இருந்தாலும் தமிழ் இல்லீகளை பொருத்தவரை விகாரை கட்டுகின்ற விடயத்தை அதுவும் ஒரு சட்ட ரீதியாக நிறுத்தப்பட்டிருக்கின்ற விடயத்தை அவர்கள் அத்துமீறி செயற்பட்டுக்கொண்டு இருக்கின்ற விடயத்தை நிறுத்துவதற்கு அவர்களால் இயலாமல் இருக்கின்றது என்பது வேடிக்கையான விடயமாகத்தான் இருக்கின்றது. ஏன் அவர்களால் இயலாமல் இருக்கின்றது இன்றைய சூழ்நிலையில் கூட இதிலே கவனம் செலுத்த வேண்டும் என்பதை அவர்கள் எந்தளவிற்கு எடுத்துச்செய்கின்றார்கள் என்பது தெரியவில்லை. பேச்சுவார்த்தையில் கூட இந்த ஆக்கிரமிப்பு விடயங்களை முதலில் நிறுத்த வேண்டும் என்று. ஆனால் அவர்கள் எதனை தெரிவித்தாலும் அக்கறை செலுத்துவதாக தெரியவில்லை.

**கேள்வி : இதிலே தமிழ் தேசிய கூட்டமைப்பு என்ன செய்கின்றது என்பது மக்களுடைய கேள்வியாக இருக்கின்றது. அதாவது அவர்கள் தங்களுடைய சுயலாப அரசியலை தற்பொழுது கையிலெடுத்துக் கொண்டிருப்பதாகவே மக்களால் கருதப்படுகின்றது. ஏனென்றால் அவர்களால் பல இடங்களிலே எதிர்ப்புக்கள் காட்டப்பட்டிருக்கின்றன. எனவே இதனை சீர்செய்துகொண்டு வடக்கு கிழக்கு பிரதேசத்தை அரசியல் ரீதியாக த.தே.கூ பாதுகாக்க வேண்டிய தார்மீக பொறுப்பு இருக்கின்றதல்லவா?**

பதில் : பொறுப்பு எல்லோரிடமும் இருக்கின்றது. நான் அரசியல்வாதிகள் என்று சொல்லும்பொழுது எந்த தனிப்பட்ட கட்சியையும் கூறவில்லை. பொதுவாகத்தான் சொல்லுகின்றேன். யாருமே அக்கறை இல்லாமல் இருக்கின்றார்கள் என்பது பொதுவான விடயம் தான். மேலும் மிக நீண்ட காலம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருப்பதனால் மக்களைப் பொறுத்தவரை மக்களும் இந்த விடயத்திலே பெரியளவிலே தங்களை ஈடுபடுத்திக்கொள்வது மிக குறைவாகத் தான் இருக்கின்றது. இந்த விடயங்களில் ஒரு சிலரை தவிர மக்களை பொறுத்தவரையிலே நீண்ட கால யுத்தத்தில் தான் பாதிக்கப்பட்டது அதனால் ஏற்பட்ட வடுக்கள் மாறாத நிலையிலும் அதைவிட காணாமல் போன பல விடயங்கள் இதிலே இருக்கின்றதாலையும் இந்த நில அபகரிப்பை அவர்கள் வேறு விடயங்களில் கவனம் செலுத்திக்கொண்டிருக்கும் பொழுது அவர்கள் தங்களுடைய ஆக்கிரமிப்பு விடயங்களை தீவிரப்படுத்திக் கொண்டிருக்கின்றதை காணக்கூடியதாக இருக்கின்றது.

**ΙΙஆம் பக்கம் பர்ாக்க...**

**நேர்காணல் : இரணியன்**

# போதைப்பொருள் விழிப்புணர்வு

போதை என்பது தன்னிலை மறக்கச் செய்து மனிதனின் சுய நிலையை சீர்குலைத்து, புத்தியை மயங்க வைத்து, நல்வாழ்வுக்கு பங்கம் விளைவிக்கும் விடயங்களுள் போதைப்பொருள் முதன்மை பெறுகின்றது. இது தனிமனிதனை மட்டும் பாதிக்கும் பழக்கம் அல்ல. இதனால் அவரைச் சுற்றியுள்ள சமுதாயமும் பாதிப்படைகிறது. சுயாதீனமான உடல், உள ஆரோக்கியமுள்ள மனிதனின் சாதாரண நிலையை மாற்றி அசாதாரண தன்மைகளான தீமைகள், கொடுமைகள், வன்முறைகள் போன்றவற்றை தனக்கும் தான் சார்ந்திருக்கும் சமூகத்திற்கும் விளைவிற்பதற்குத் தூண்டுகோலாக அமைகின்ற ஒரு விஷக்கிருமியே போதையாகும். சாதாரண வீட்டு மட்டத்தில்



ஆரம்பித்து சர்வதேசம் வரை அதன் தாக்கம் பாரிய அளவில் பேசப்படும் நிலை உருவாகியுள்ளது. விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான சர்வதேச தினமும் உருவாக்கப்பட்டிருப்பதானது அதன் தாக்கத்தின் வியாபகத்தை எடுத்துக்காட்டுகின்றது. போதைப்பொருள் பழக்கமானது இன்று உலகில் சமூக, சுகாதார மற்றும் பொருளாதாரப் பிரச்சினையாக மாறியுள்ளது. இன்று போதைப்பொருட்கள் பல வகைகளில் உள்ளன. இது நாட்டுக்கு நாடு பல்வேறு மார்க்கங்களால் கடத்தப்படுகிறது. இது எமது எதிர்கால சந்ததியை சீரழிக்கும் சக்திவாய்ந்த ஆபத்தாக விளங்குகிறது. இதனால் உடல், உளம் பாதிக்கப்படுவதுடன் குடும்பமும் சமூகமும் சீரழிகின்றன. இறுதியில் மரணத்தின் விளிம்பிற்கே கொண்டு செல்கின்றது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 30 ஆண்டு காலம் தனிமனித ஒழுக்கத்திலும் நற்பண்புகளிலும் இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கு முன்னுதாரணமாய்த் திகழ்ந்த வடக்கு கிழக்கில் புலிகளின் காட்டுப்பாட்டில் இருந்த தேசங்கள் இன்று போதை அரக்கனின் கோரப்பிடியில் சிக்குண்டு தனது சுயத்தையும் மாண்புகளையும் இழந்து நிற்கின்றது. போரினால் சிதைவடைந்த தமிழ் மக்களின் மீள் உருவாக்கத்தின் ஆன்மாவாய் கருதப்படும் இளம் சமுதாயம் போதையின்பால் அடிமையுண்டு தானும் அழிந்து தன் நாட்டையும் அழிவிற்குட்படுத்துவது வேதனையின் உச்சம். கடத்தல்கள், கொலை, கொள்ளை, தற்கொலை, சிறுவர் பெண்கள் மீதான பாலியல் பலாத்காரம் மற்றும் வெறிக்கொலைகள், வாள்வெட்டு வன்முறை, வாகன விபத்துக்கள், கணினிக் குற்றங்கள், பாதாள உலகக் கோஷ்டியினருக்கிடையிலான மோதல்கள் என அதிகரித்து காணப்படுகின்றது. குடும்ப, சமூக, பொருளாதார, ஆன்மீக, சூழலியல் சார் பாதிப்புக்களை உருவாக்குகின்ற ஒரு அம்சம் போதைப் பொருட்பாவனையாகும் என பொதுவாகக் கூறப்படுகிறது. இவ்வாறான போதைப்பொருள் பாவனையானது உள்நாட்டு யுத்தத்தித்திற்கு அடுத்தபடியாக இலங்கைச் சமூகத்தை பெரிதும் பாதித்திருப்பதில் முதலிடம் பெறுவது போதைப்பொருள் விற்பனையும், பாவனையுமாகும். போதைப்பாவனையின் நேரடி மற்றும் மறைமுக விளைவுகளால் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துச் செல்கிறது. உடல்ரீதியான பாதிப்புக்களுக்கு மேலதிகமாக உளரீதியான மற்றும் சமூக ரீதியான பாதிப்புக்கள் நீண்டகாலத் தாக்கத்தை ஏற்படுத்த வல்லதாய் உணரப்படுகின்றன. போதைப்பொருட்கள் பண்டைக்காலம் முதல் பாவனையில் இருந்து வந்துள்ளன. அபின், கஞ்சா, கள், சாராயம், கசிப்பு, பீடி, சிகரெட், சுருட்டு என்பன மக்களால் பாவிக்கப்பட்டு வந்தன. விஞ்ஞான வளர்ச்சி காரணமாக பண்டைக்கால போதைவஸ்துக்கள் நவீன உருவிலும் இலகுவான தன்மையிலும் தயாரிக்கப்பட்டுள்ளன. மிகச் சிறியளவு போதைவஸ்தை பாவிப்பதன் மூலம் அதிகளவு போதை தரக்கூடியதாக தயாரிக்கப்படுகின்றன. இதன் காரணமாக போதைவஸ்துக்கள் இலகுவாக கடத்தவும் பரிமாற்றம் செய்யவும் வாய்ப்பாக உள்ளது.

நவீன உலகில் பண்டைக்காலத்து போதைவஸ்துக்கள் மாதிரி அல்லாது மேற்கத்தேய நாடுகளால் ஹெரோயின், கொகேய்ன், கோடீன், மோர்பீன், கனபிஸ், மர்ஜீவானா, ஹஸீஸ், ஐஸ், கஞ்சா கலந்த போதைவஸ்து போன்ற நவீன போதைவஸ்துக்களும் மற்றும் மாத்திரை வடிவில் தயாரிக்கப்படும் மாத்திரைகளும் சர்வதேச ரீதியில் பல நாடுகளுக்கும் கடத்தப்படுகின்றன. உலகில் சில நாடுகளின் பொருளாதாரம் போதைவஸ்துக்கள் வர்த்தகத்திலே தங்கியுள்ளது. போதைப்பொருள் பாவனை சமூகத்திற்கு மட்டுமல்ல தனிநபருக்கு சுகாதார ரீதியாக பல்வேறு கோளாறுகளை ஏற்படுத்துகிறது. உடல் பருமன், ஈரல், குடல், சிறுநீரகம், இதயம் போன்ற உறுப்புக்கள் பாதிக்கப்பட்டு விரைவில் நோயாளியாகி இறக்கும் நிலை ஏற்படுகிறது. இதனால் தான் **"மது நாட்டுக்கும் வீட்டுக்கும் கேடு மது அருந்துதல் உடல் நலத்துக்கு கேடு"**என பல விளம்பரங்களை ஆங்காங்கே பல இடங்களில் காண முடியும். உலகளாவிய ரீதியில் 15-64 வயதுக்கு இடைப்பட்ட 243 மில்லியன் மக்கள் போதைக்கு அடிமையாகி வருகின்றனர். இவர்களுள் 80% ஆண்களும் 20% பெண்களும் அடங்குவர். கடந்த மூன்றாண்டு காலமாக 6 லட்சம் பேர் போதைவஸ்து பாவனை காரணமாக உயிரிழந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை அறிக்கை வெளியிட்டுள்ளது. உலகப் போதைப்பொருள் பாவனையாளர்கள் தொடர்பான அறிக்கையின் புள்ளிவிபரப்படி உலகில் 2 கோடி பேர் ஹெரோயின் போதைப்பழக்கத்திற்கு அடிமையானவர்கள் உள்ளனராம். உலக நாடுகள் எல்லாம் போதைப்பொருள் கடத்தலுக்கு எதிராகக் கடுமையான சட்டங்களைக் கொண்டு வந்து கட்டுப்படுத்தி வருகின்றன. ஆனால் ஹெரோயின், கஞ்சா போன்ற பொருட்களை விற்பதும் பிற நாடுகளுக்கு கடத்துவதும் இன்று வரையிலும் பெரும் இலாபம் தரும் தொழிலாக தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றன. இலங்கையின் திறந்த பொருளாதார கொள்கை, உல்லாசப் பயணிகளின் வருகை என்பனவற்றால் நவீன போதைவஸ்துக்கள் நாட்டினுள் பிரவேசிக்க வழிவகுத்தன. இலங்கையை பொறுத்தவரையில் நவீன போதைவஸ்துக்கள் 1980ஆம் ஆண்டளவில் பரவத் தொடங்கின. இலங்கையில் முதலாவது ஹெரோயின் விற்பனையாளர் 1981ஆம் ஆண்டு மே மாதம் 26ஆம் திகதி 270 கிராம் ஹெரோயினுடன் களுத்துறை மாவட்டத்திலுள்ள ஒரு ஊரில் கைது செய்யப்பட்டார். போதைவஸ்து பொருட்கள் பாவிப்பது, கடத்துவது, வைத்திருப்பது போன்றவற்றுக்கு எதிராக கடுமையான சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. அநேகமான நாடுகளில் இவற்றுக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது. இலங்கையிலும் போதைவஸ்து கடத்தலில் ஈடுபடுபவர்களுக்கு கடும் தண்டனை அளிப்பதன் மூலமே போதைவஸ்து பாவிப்பதனால் ஏற்படும் தீங்குகளில் இருந்து எமது நாட்டு சமுதாயத்தை பாதுகாக்க முடியும். குடும்ப வாழ்வை சீரழிக்கும், நாட்டை குட்டிச் சுவராக்கும் போதைவஸ்து பாவனையை வேரோடு களைய ஒவ்வொருவரும் திடசங்கற்பம் பூணுதல் அவசியம். இதற்காக போதைப்பொருள் கட்டுப்பாட்டுச் சபை போதைப்பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் 1984ஆம் ஆண்டு தொடக்கம் அக்கறையுடன் செயற்படுகிறது.

உலகளாவிய ரீதியில் அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனையினை கட்டுப்படுத்தும் வகையில் 1987ஆம் ஆண்டு ஜூன்26ஆம்திகதிஐக்கியநாடுகள்சபையினால் போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் சட்ட விரோத கடத்தல் தினம் பிரகடனப்படுத்தப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை ஒவ்வொரு ஆண்டும் உலக நாடுகளில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. மேற்கத்திய நாடுகளில் போதைப்பழக்கத்திற்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை தற்போது சதவிகிதத்தின் அடிப்படையில் குறையத் தொடங்கியுள்ள நிலையில் ஆசிய நாடுகளில் போதைப்பொருளுக்கு அடிமையானோரின் வீதம் அதிகமாகிக் கொண்டே செல்கின்றமை துரதிஷ்டமானதாகும். இதற்குக் காரணம் மேலைத்தேய நாடுகளில் ஏற்பட்டுள்ளதைப் போன்ற விழிப்புணர்வுகள் நம் நாடுகளில் இல்லாமல் போனமையாகும். சாதாரணமாக வருடமொன்றிற்கு உலகளவில் 11.8 மில்லியன் மக்கள் போதைப்பாவனை காரணமான நோய்களால் இறந்து போகின்றனர். 3,50,000 இறப்புக்கள் மதுப்பாவனையால் நிகழ்கின்றன. இவ்வாறு பல உயிரிழப்புக்களுக்கும் நோய் நிலைமைகளுக்கும் பல பேருடைய குடும்பங்கள் சீரழிவாகட்டும், இளைஞர்களின் எதிர்காலம் பாதிக்கப்படுதல் ஆகட்டும். இவற்றுக்கெல்லாம் காரணமான போதைப்பொருட்களை தடை செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும். போதைப்பாவனைக்கு எதிராக பல கோடிகளை செலவழித்து விளம்பரம் போட்டுக் கொண்டிருக்கும் அரசாங்கம் ஏன் மதுபான சாலைகளுக்கு அனுமதி வழங்குகிறது எனும் சாமானிய மக்களின் கேள்விக்கு பதிலென்ன?
ஐக்கிய நாடுகளின் போதைப்பொருள் மற்றும் குற்றவியல் தொடர்பான அலுவலகத்தின் உலகளாவிய கடல்சார் குற்றத்திட்டத்தின் தலைவர் ஆலன் கோல் கூறுகையில், "கொவிட்-19 முடக்கங்களுக்கு மத்தியில் போதைப்பொருள் கடத்தலுக்கான நில வழிகள் தடை செய்யப்பட்டுள்ளதால், போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு கடல் மார்க்கம் இலகுவானதாக மாறியுள்ளது" என கோல் தெரிவித்துள்ளார்.

தமிழரின் ஜனநாயக போராட்டத்திலும், பண்பாட்டு வளக்காற்றில் மிகவும் உச்ச பலமாக இருந்தது தமிழீழ விடுதலைப்புலிகளின் காலம் என்பதை எவரும் மறுத்து விட முடியாது. ஆனால் தற்போது அந்த நிலை மாறி உள்ளது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.வடக்கு கிழக்கு தாயகத்தில் விடுதலைபுலிகள் காலத்தில் போதை பொருட்கள் அறவே இருந்ததில்லை ஆனால் அதன் தாக்கம் 2009 மே 18ஆம் தித்திக்குப் பின்பே திட்டமிட்டு போதைப்பொருள் மற்றும் மதுபான பாவனை ஆக்கிரமித்துள்ளது. விடுதலைப்புலிகளால் செய்ய முடிந்ததை இலங்கை அரசாங்கத்தால் செய்ய முடியாது போயுள்ளது. விடுதலைப்புலிகளின் காலத்தில் ஒழுக்கம் மிகுந்த காலமாக வடக்கு கிழக்கு எங்கும் இருந்தது. இந்த உண்மையை மறுதலிக்க முடியாது.

2020ஆம் ஆண்டில் உலகளாவிய ரீதியில் 27 கோடியே 50 இலட்சம் (275 million) மக்கள் போதைப்பொருளைப் பயன்படுத்தியதில், சுமார் 3 கோடியே 60,00,000 (36 million) மக்கள் போதைப்பொருள் பாவனையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என போதைப்பொருள் மற்றும் குற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் அலுவலகம் (UNODC) வெளியிட்டுள்ள 2021 ஆண்டறிக்கையில் இந்தத் தகவல் கூறப்பட்டுள்ளது. இலங்கையில் ஐஸ் போதைப்பொருள் தொடர்பில், 2022ஆம் ஆண்டின் முதல் 10 மாதங்களில் 6,000க்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அதே காலகட்டத்தில் 377 கிலோவுக்கும் அதிகமான ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தேசிய ஆபத்தான மருந்து கட்டுப்பாட்டு சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இதே வேளை நாட்டில் போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டமை, தொடர்பில் 2022 ஜனவரி முதல் அக்டோபர் வரையிலான காலப்பகுதியில் 67,900 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இது 2021ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது 77.8 சதவீத அதிகரிப்பாகும். தரவுகளின்படி கைது செய்யப்பட்ட 67,900 பேரில் 35,765 பேர் ஹெரோய்ன் போதைப்பொருட்களுக்காகவும், 25,114 பேர் கஞ்சாவுக்காகவும், 6,728 பேர் ஐஸ் போதைப்பொருள் தொடர்பிலும் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த நிலையில் 2022 ஜனவரி முதல் ஒக்டோபர் வரையான காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் கைப்பற்றப்பட்ட ஹெரோயின் மொத்த அளவு 1,046 கிலோவாகும் நாடளாவிய ரீதியில் கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் அளவு 10,214 கிலோவாகும். மேலும் 377 கிலோ ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. இதேவேளை கொரோனா தொற்றுநோய்க்குப் பின்னர் போதைப்பொருட்களின் சந்தை விலைகள் குறைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதன் படி ஒரு மாத்திரையின் அளவு 500 ரூபாய் முதல் 1000 ரூபாய் வரையில் விற்பனையாவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

13ஆம் பக்கம் பார்க்க...

நிலவன்

# பிராந்திய செய்திகள்

## கிளிநொச்சி - பளை பஸ் விபத்தில் காயமடைந்த சிறுவனின் கை துண்டிப்பு!

கிளிநொச்சி - பளைப் பகுதியில் கடந்த புதன் கிழமை இடம்பெற்ற பஸ் விபத்தில் படுகாயமடைந்த சிறுவன் ஒருவனின் கை துண்டிக்கப்பட்டுள்ளது. திருகோணமலையிலிருந்து முல்லைத்தீவு ஊடக யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த அரச பஸ் ஒன்று செவ்வாய்க்கிழமை (டிச 21) மாலை கிளிநொச்சி பளைப்பகுதியில் வேகக்கட்டுப்பாட்டையிழந்து விபத்துக்குள்ளாகியது.

இவ்விபத்தில் முல்லைத்தீவு வலயக்கல்வி அலுவலகத்தில் பணிபுரியும் இளம் பெண்ணொருவர் உயிரழந்ததுடன் 17க்கும் மேற்பட்டோர் படுகாயங்களுக்குள்ளாகினர். இந்நிலையில் விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த சிறுவன் ஒருவனின் கை துண்டிக்கப்பட்டுள்ளது.

## மீண்டும் முகக்கவசத்தை கட்டாயமாக்க யோசனை

புதிய ஒமிக்ரோன் மாறுபாடுகளினால் பாதிக்கப்பட்ட நான்கு நோயாளிகள் இந்தியாவில் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் என சுகாதார தரப்பினரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சீனாவில் பரவி வரும் புதிய ஒமிக்ரோன் மாறுபாடுகளினால் பாதிக்கப்பட்ட நான்கு நோயாளிகள் இந்தியாவில் கண்டறியப்பட்டுள்ளனர். இதன்காரணமாக இலங்கையில் எதிர்காலத்தில் மீண்டும் முகக்கவச பாவனையை கட்டாயமாக்கும் யோசனை ஒன்றும் கொண்டுவரப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன், நாட்டிற்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் மீண்டும் கொரோனா பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## யாழ்.நகர் வீதிகளில் துவிச்சக்கர வண்டிகளுக்கான தரிப்பிடக் கட்டணம் நீக்கம்

யாழ். நகர் பகுதிகளில் துவிச்சக்கர வண்டிகளுக்கு அறவிடப்பட்டு வந்த கட்டணங்கள் அன்று(23) முதல் நீக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் அறிவித்துள்ளார்.

யாழ்.நகர் மத்தி பகுதிகளில் உள்ள வீதிகளில் வாகனங்களை நிறுத்துபவர்களிடமிருந்து வாகன தரிப்பிட கட்டணங்கள் அறவிட ஒப்பந்தக்காரர்களுக்கான ஒப்பந்தம் யாழ்.மாநகர சபையினால் வழங்கப்பட்டு இருந்தது. வாகனங்கள் , மோட்டார் சைக்கிள்கள் , துவிச்சக்கர வண்டிகள் என்பவற்றுக்கு தரிப்பிடக்கட்டணம் அறவிடப்பட்டு வந்தது.

துவிச்சக்கர வண்டிகளுக்கான தரிப்பிட கட்டணங்களை அறவிட வேண்டாம் என பல தரப்பினராலும் முன் வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக துவிச்சக்கர வண்டிக்கான கட்டணங்கள் அறவீடு செய்வதை தவிர்க்குமாறு முதல்வரால் ஒப்பந்தக்காரர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.



## டிச.26ஆம் திகதி கடவுசீட்டு பெற விண்ணப்பித்தவர்களுக்கு விசேட அறிவித்தல்

கடவுசீட்டு பெற்றுக்கொள்வதற்காக எதிர்வரும் திங்கட்கிழமை 26ஆம் திகதிக்கு நேரம் வழங்கப்பட்ட அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் அந்த வாரத்தில் எஞ்சிய 04 தினங்களில் ஒரு தினம் மற்றும் நேரம் வழங்கப்படுமென குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள நிர்வாக ஆணையாளர் ஹர்ஷ அலுக்பிடிய தெரிவித்துள்ளார். எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமை விசேட அரச விடுமுறை தினமாக அரசாங்கம் அறிவித்துள்ளதால், அத்தினத்தில் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பிரதான காரியாலயம் மூடப்படுகின்றது.

அதன் காரணமாக கடவுச்சீட்டு பெற்றுக்கொள்வதற்காக காரியாலயத்துக்கு வருமாறு ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த விண்ணப்பதாரிகளுக்கு, வேறு தினம் ஒன்று வழங்கப்படும். புதிய திகதி மற்றும் நேரம் விண்ணப்பதாரிகளுக்கு குறுஞ்செய்தி ஊடாக அறிவிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.




## உணவுப் பொருட்களின் விலை குறைப்பு

லங்கா சதொச நிறுவனம் ஏழு உணவுப் பொருட்களின் விலைகளைக் குறைத்துள்ளது. எதிர்வரும் நத்தார் பண்டிகையை முன்னிட்டு அன்று (23)முதல் அமுலுக்கு வரும் வகையில் இவ்வாறு ஏழு அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில்,
பெரிய வெங்காயம் - ஒரு கிலோவுக்கு 185.00 ரூபா (5.00 ரூபா குறைக்கப்பட்டது)

பருப்பு - ஒரு கிலோவுக்கு 374.00 ரூபா (11.00 ரூபா குறைக்கப்பட்டது)

டின் மீன் (உள்நாட்டு) - 425 கிராம் ஒன்றுக்கு 475.00 ரூபா (15.00 ரூபா குறைக்கப்பட்டது)

மிளகாய் - ஒரு கிலோவுக்கு 1,780.00 ரூபா (15.00 ரூபா குறைக்கப்பட்டது)

நெத்தலி - ஒரு கிலோவுக்கு 1,100.00 ரூபா (50.00 ரூபா குறைக்கப்பட்டது)

வெள்ளை சர்க்கரை - ஒரு கிலோவுக்கு 218.00 ரூபா (6.00 ரூபா குறைக்கப்பட்டது)

உருளைக்கிழங்கு - ஒரு கிலோவுக்கு 285.00 ரூபா (5.00 ரூபா குறைக்கப்பட்டது)



## விளையாட்டு பொருட்களுக்குள் வைத்து கடத்தி வரப்பட்ட ரூ. 100 மில்லியன் பெறுமதியான போதைப்பொருட்கள்

சிறுவர் விளையாட்டு பொருட்களுக்குள் வைத்து கடத்தி வரப்பட்ட ரூ. 100 மில்லியன் பெறுமதியான போதைப்பொருட்களை இலங்கை சுங்கம், பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு (PNB) இணைந்து கைப்பற்றப்பற்றியுள்ளன.

அதன்படி, கடந்த சில வாரங்களாக யாரும் கோராத பல பார்சல்களை இலங்கை சுங்கம், பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு (PNB) இணைந்து தபால் திணைக்களத்தில் பணிபுரிபவர்கள் முன்னிலையில் ஆய்வு செய்த போதே மேட்படி போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன . ஐக்கிய இராச்சியம், நெதர்லாந்து, ஸ்பெயின், ஜேர்மனி மற்றும் கனடா ஆகிய நாடுகளில் இருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்ட சிறுவர் விளையாட்டுப் பொருட்களுக்குள் 4,673 கிராம் 'குஷ்' (கஞ்சா) மற்றும் 9,586 எக்ஸ்டஸி மாத்திரைகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. இந்த போதைப்பொருட்களின் மதிப்பு ரூ. 95,860,000. என தெரிவிக்கப்படுகிறது







## நோயாளர் காவு வண்டியுடன் மோதி ஒருவர் பலி

நோயாளரை ஏற்றி பயணித்த நோயாளர் காவு வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். குறித்த விபத்து அன்று(23) பிற்பகல் 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது. மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட செல்வபுரம் பகுதியில் A9 வீதியில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. மல்லாவியிலிருந்து சிறுநீரக நோயாளி ஒருவரை அவசர சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அழைத்து சென்ற நோயாளர் காவு வண்டியுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. தனது செய்கை நிலத்தை பார்வையிட்டு, வீதியின் மறுபுறத்துக்கு மோட்டார் சைக்கிளில் கடக்க முற்பட்டுள்ளார். இதன்போது, நோயாளியுடன் வேகமாக பயணித்த நோயாளர் காவு வண்டி மோதியுள்ளது.

நோயாளர் காவு வண்டியின் சமிக்கைகளை அவதானிக்காது, சடுதியாக வீதியை கடக்க முற்பட்டுள்ளமையால் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக சம்பவத்தை அவதானித்தவர்கள் தெரிவிக்கின்றனர். நோயாளர் காவு வண்டியில் பயணித்த நோயாளர் மற்றும் வைத்தியர் ஆகியோர் இன்னுமொரு நோயாளர் காவு வண்டியில் மாற்றப்பட்டு வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். விபத்தில் படுகாயமடைந்த நபர் 1990 இலக்க அவசர சேவை ஊடாக கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிசார் தெரிவிக்கின்றனர். குறித்த விபத்தில் கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம் பகுதியை சேர்ந்த கந்தசாமி சுப்பிரமணியம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவர் பார ஊர்திகள் சங்க முகாமையாளராக சேவையாற்றி ஒய்வுபெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. விபத்து தொடர்பான விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## வாதுவையில் நூல் தொழிற்சாலையில் பாரிய தீ விபத்து

வாதுவை, மொரந்துடுவ வீதியில் மலகம பிரதேசத்தில் உள்ள நூல் தொழிற்சாலை ஒன்றில் தீ பரவியுள்ளதாக வாதுவை பொலிஸார் தெரிவித்தனர். இதன் காரணமாக பெருந்தொகையான மின்சாதனங்கள் மற்றும் கம்பிகள் முற்றிலும் சேதமடைந்தன.

களுத்துறை மாநகர சபையின் இரண்டு தீயணைப்பு வாகனங்கள் தீயை கட்டுப்படுத்த பயன்படுத்தப்பட்டதுடன், பிரதேசவாசிகளும் வாதுவை பொலிஸாரும் இணைந்து தீயை அணைத்தனர். மின் கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. சம்பவத்தில் ஒரு கோடி ரூபாவிற்கு மேல் சொத்து சேதம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

# சினி துளிகள்



## பிரபல கவர்ச்சி நடிகைக்கு கொலை மிரட்டல் விடுத்த நபர் கைது

பிரபல தொலைக்காட்சி நடிகையான உர்பி ஜாவித் இந்தி பிக்பாஸ் ஓடிடி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஓவர் நைட்டில பாப்புலர் ஆனார். தனது பிரபலத்தை அப்படியே விட்டு விடக் கூடாது என நினைத்த உர்பி ஜாவித் தொடர்ந்து வித விதமான கவர்ச்சி வீடியோக்களை வெளியிட்டு வருகிறார்.

இந்நிலையில், உர்பி ஜாவித்திற்கு எதிராக கொலை மிரட்டல் விடப்பட்டுள்ளது. தொலைபேசி வழியே தொடர்பு கொண்டு பேசிய மர்ம நபர் ஒருவர் தொடர்ந்து அவருக்கு தொல்லை கொடுத்து வந்துள்ளார். கண்டுபிடித்து விட கூடாது என்பதற்காக வேறு, வேறு எண்களை உபயோகப்படுத்தி உள்ளார். இதைத்தொடர்ந்து நடிகை உர்பி ஜாவித்துக்கு அந்த நபர் பாலியல் தொல்லை மற்றும் கொலை மிரட்டல் விடுத்தும் பேசியுள்ளார்.

இதுபற்றி மும்பை கோரேகாவன் காவல் நிலையத்தில் உர்பி ஜாவித் புகார் பதிவு செய்துள்ளார். மிரட்டலான தொலைபேசி பேச்சுகள் அடங்கிய பதிவுகளையும் அவர் போலீசிடம் அளித்துள்ளார்.

இதன் அடிப்படையில் போலீசார் விசாரணை நடத்தியதில் அந்த நபர் நவீன் கிரி என தெரிய வந்தது. அவரை பீகாரின் பாட்னா நகரில் வைத்து போலீசார் கைது செய்து அவர் மீது பாலியல் துன்புறுத்தல், பின்தொடருதல் மற்றும் குற்ற நோக்கோடு மிரட்டல் விடுத்தல் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து தீவிர விசாரணை நடந்தி வருகின்றனர்.



## கிண்டல் செய்த மாளவிகாவிற்கு பதிலடி கொடுத்த நயன்தாரா



மாஸ்டர், மாறன் உள்ளிட்ட படங்களில் கதாநாயகியாக நடித்தவர் மாளவிகா மோகனன்.

இவர் சில மாதங்களுக்கு முன் கொடுத்திருந்த பேட்டி ஒன்றில் நடிகை நயன்தாராவின் நடிப்பு குறித்து கிண்டல் செய்யும் விதமாக பேசியிருந்தார்.

அவர் கூறியதில் " ஒரு திரைப்படத்தில் சூப்பர்ஸ்டார் நடிகை ஒருவர் உயிர் போகும் நேரத்தில் மருத்துவமனையில் முழு மேக்கப் போட்டுகொண்டு நடித்திருந்தார்.

கமெர்ஷியல் படமாகவே இருந்தாலும் அது எப்படி நடக்கும் " என்று கூறியிருந்தார்.

நயன்தாராபின் பதிலடி
இதில் அவர் நயன்தாராவின் பெயரை குறிப்பிடவில்லை என்றாலும், தற்போது அதற்கு நயன்தாராவே பதிலடி கொடுத்துள்ளார்.

கனெக்ட் படத்தின் ப்ரோமோஷன் விழாவில் கலந்துகொண்ட நயன்தாரா. இது குறித்து பேசிய பொழுது " ஒரு ரியல் படம் பண்ணுவதற்கும், கமர்ஷியல் படம் பண்ணுவதற்கும் வித்தியாசம் உண்டு. அந்த படத்தில் இயக்குனர் என்னை அப்படி தான் நடிக்க சொன்னார். அதுதான் கமர்ஷியல் படங்களுக்கு தேவை என்றும் அவர் என்னிடம் கூறினார் " என்று நயன்தாரா பேசியிருந்தார். இதை தற்போது ரசிகர்கள் இரு வீடியோவையும் இணைத்து வைத்து சரியான பதிலடி கொடுத்துள்ளார் நயன்தாரா என கூறி வருகிறார்கள்.

## பிரம்மாண்ட திரைப்படம் அவதார் 2 இதுவரை செய்துள்ள வசூல்

ஜேம்ஸ் கேமரூன் இயக்கத்தில் அவதார் படத்தின் முதல் பாகம் 2009ம் ஆண்டு டிசம்பர் மாதம் உலகம் முழுவதும் வெளியாகி ரசிகர்களை ஆச்சரியத்தில் உறைய வைத்தது. படத்தில் இடம்பெற்று இருந்த பண்டோரா கற்பனை உலகம் கண்கொள்ளா காட்சியாக அமைந்து, வசூலிலும் சாதனை நிகழ்த்தியது.

இரண்டாம் பாகம் 13 ஆண்டுகளுக்கு பிறகு "அவதார் தி வே ஆப் வாட்டர்" என்ற பெயரில் தயாராகி ஆங்கிலம் மட்டுமன்றி தமிழ், தெலுங்கு, இந்தி, கன்னடம், மலையாளம் உள்பட உலகம் முழுவதும் 160 மொழிகளில் சமீபத்தில் வெளியானது.

கடந்த டிசம்பர் 16ம் திகதி வெளியான இப்படம் இதுவரை உலகம் முழுவதும் 600 மில்லியன் டாலர் வசூலை பெற்றிருப்பதாக கூறப்படுகிறது.



## சினிமாவுக்கு, 'குட் பை'!

டொக்டர் பட்டம் பெற்ற, சாய்பல்லவி, கடந்த ஏழு ஆண்டுகளில் தமிழ், தெலுங்கு, மலையாளம் என்று ஒரு ரவுண்டு வந்து விட்டார். தற்போது, கோயமுத்தூரில் மருத்துவமனை கட்டுவதற்கு திட்டமிட்டு வருகிறார்.

'அந்த மருத்துவமனையை கட்டி முடித்ததும், முழு நேர மருத்துவ சேவையில் இறங்கி விடுவேன்.தற்போது கைவசம் உள்ள படங்களில் நடித்து முடித்ததும், சினிமாவுக்கு, 'குட் பை' சொல்லிடுவேன்'என்கிறார், சாய்பல்லவி



## தமிழ் படங்களின், 'ரீ – மேக்'கில், அபிஷேக் பச்சன்!



தமிழில், பார்த்திபன் இயக்கி, படம் முழுக்க தான் ஒருவர் மட்டுமே நடித்து வெளியான படம், ஒத்த செருப்பு சைஸ்- 7. இந்த படத்தின் ஹிந்தி, 'ரீ - மேக்'கில், பார்த்திபன் நடித்த வேடத்தில் நடித்திருக்கிறார், அபிஷேக் பச்சன்.

இதையடுத்து, தமிழில், 2019ல் வெளியான, கேடி என்ற படத்தின், ஹிந்தி, 'ரீ - மேக்'கிலும், அடுத்து நடிக்கப் போகிறார்.

'இந்த படத்தில், 71 வயது முதியவராக, மு.ராமசாமி என்பவர் கதையின் நாயகனாக நடித்த வேடத்தில், ஹிந்தியில் நடிக்கப் போகிறேன்' என்கிறார்.

# இலங்கையின் சாரமணிந்த விமானி

அன்று 1952ஆம் ஆண்டில் ஆகஸ்ட் மாதத்தின் ஒருநாள் காலை. மனிதரொருவர் பயத்தோடும், வெட்கத்தோடும் தயங்கி தயங்கி இரத்மலானை விமான நிலையத்திலுள்ள விமானவியல் கல்வி நிலையத்தில் நுழைகின்றார். அவரை பார்த்தால் 40 வயதை தாண்டியவர் போல தோற்றம்.பாரம்பரிய சிங்கள முதலாளிமார் அணிவது போல சாரம், பெல்ட், சட்டை, கோட் அணிந்திருந்ததோடு Shoe அணியாதவராகவும் இருந்தார். அவரின் தலைக்கு பின்னால் குடுமியொன்றும் நீட்டிக்கொண்டிருந்தது.அவருடைய பெயர் பௌலிஸ் அப்புஹாமி. அவர் ஒன்றும் அங்கு விமானங்கள் பறப்பதை வேடிக்கை பார்ப்பதற்காக வந்திருக்கவில்லை. மாறாக அவர் தானும் விமானமோட்ட கற்றுக் கொள்ளவே வந்திருந்தார். அன்று தான் அவருக்கு முதலாவது பயிற்சி நாள். விமானம் ஓட்டுவதற்கு பொருத்தமான உடையணிந்து, தாடி மீசையை கிளீன்ஷேவ் செய்து, பளபளப்பான முகங்களுடனும், நுனிநாக்கில் ஆங்கிலத்தோடும், இலங்கையின் பிரபல்யமான பாடசாலைகளில் கற்ற, உயர் குடும்பத்து பிள்ளைகளான அவரது சகமாணவர்களை விட வயதில் பாரியளவு வித்தியாசமும், மருந்துக்கும் வாயில் ஆங்கிலம் நுழையாத, பின்தங்கிய கிராமத்தானின் தோற்றத்தோடும் இருந்த தம்மோடு சரிக்கு சமமாக விமானம் ஓட்ட கற்றுக்கொள்ள வந்ததை அவரது சக மாணவர்கள் வித்தியாசமான கண்ணோட்டத்திலேயே பார்த்தனர். அன்றைய காலத்தில் இலங்கையின் விமானவியல் துறையானது முழுமையாக உயர்தர பாடசாலைகளில் கற்ற, வசதிபடைத்த குடும்பத்தவர்களுக்கே உரியது என்ற எழுதப்படாத விதி இருந்தது. இதன் காரணமாகவே விமானமோட்ட கற்றுக்கொள்ள வந்த நாட்டுப்புற தோற்றத்திலிருந்த Paulis Appuhamy பலரின் வேறுபட்ட பார்வைகளுக்கும், கேலிப்பேச்சுகளுக்கும் உள்ளானதில் வியப்பேதுமில்லைதான். தன்னை நோக்கிவரும் கேலிப்பேச்சுக்களை அறிந்துகொண்ட பௌலிஸ் அப்புஹாமி (Paulis Appuhamy) அவற்றை கேட்டும் கேட்காதது போல நடந்து கொண்டார்.நீங்கள் எல்லோரும் எண்ணக்கூடும் பின்தங்கிய கிராமத்தை சேர்ந்த அப்புகாமிக்கு தானும் விமானம் ஓட்ட கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆசை எப்போது, எப்படி வந்தது என்று? சில நாட்களுக்கு முன்னர் ஒருநாள் தனது மூத்த மகனான விஜித குமார விமானங்கள் பறப்பதை பார்க்க ஆசைப்பட்டதனால் அவனை இரத்மலானை விமான நிலையத்திற்கு அழைத்துக்கொண்டு வந்திருந்தார். அங்கே பாரிய இயந்திரங்களாலான விமானங்கள் வானத்தில் பறப்பதைப் பார்த்து பிரமிப்படைந்த பௌலிஸ் அப்புஹாமி என்ன நினைத்தாரோ தெரியவில்லை உடனே அங்கிருந்த பயிற்சி கல்லூரி பயிற்சியாளர்களில் ஒருவரை அணுகி சிங்கள மொழியில் தயக்கத்துடன் "எனக்கும் விமானத்தை ஓட்ட ஆசையாக உள்ளது. எனக்கு உங்களால் கற்பித்துத்தர முடியுமா?" என கண்களில் எதிர்பார்ப்புக்கள் மின்ன கேட்டார். இதைக் கேட்டவுடனே ஆச்சரியமடைந்த பயிற்சியாளர் பௌலிஸ் அப்புஹாமியை கேள்விக்குறியுடன் ஏற இறங்க ஒருவித பார்வை பார்த்தவர் "தலையில் குடுமியை வைத்துக்கொண்டு உன்னால் எப்படி விமானத்தை ஓட்ட முடியும்? "என வினவினார். ஏனெனில் அன்றைய காலத்தில் விமானம் ஓட்டும் பயிற்சியாளர்களும் மாணவர்களும் ஹெட்போன் இணைக்கப்பட்ட இறுக்கமான ஹெல்மெட் அணிந்தே ஓட்டுவர். அவ்வாறான ஹெல்மெட்கள் விமானத்தில் பறக்கும் போது ஒருவரோடொருவர் தொடர்புகொள்ள பயன்படுத்தப்பட்டன.

இதனால் தலையில் குடுமியுடன் ஹெல்மெட் அணிய கடினமாக இருக்கும் என்பதை பயிற்சியாளர் கூறியபோது அதை காதில் வாங்கிக்கொள்ளாத Appuhamy உடனே "குடுமி இருப்பது எனக்கு எந்த பிரச்சினையும் இல்லை. நான் இப்போதும் கூட பறப்பதற்கு ஆவலாக இருக்கின்றேன்" என உறுதியாக பதில் கூறினார். பௌலிஸ் அப்புஹாமி அவ்வாறு கூறியதை கேட்டபோதும் கூட பயிற்சியாளருக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. அவரின் மனதில் வேறு சில எண்ணங்களும் ஓடிக்கொண்டிருந்தன. "ஹெல்மெட் அணிவதற்கு கஷ்டமான ஒரு சூழ்நிலை இருப்பதற்கு மேலதிகமாக விமானம் ஓட்டும் போது சாரம் அணிந்திருத்தல் விமானம் ஓட்டுவதற்கு சிரமமானதொரு விடயமாகும். மேலும் ஆங்கிலத்தின் வாடையே இல்லாத ஒருவருக்கு வகுப்பறையிலும் விமானத்தில் பறக்கும் போதும் வழங்கப்படும் அறிவுறுத்தல்களை எவ்வாறு புரிந்து கொள்ள முடியுமாக இருக்கும்? என்பதோடு விமானம் ஓட்ட கற்றுக் கொள்ளும் எல்லா மாணவர்களும் கற்கும் கடினமான பாடங்களை எவ்வாறு அவரால் கற்றுக்கொள்ள முடியும்?" என்றும் யோசித்தார். Appuhamyயை சிறியதொரு விமானத்தில் சுற்றிக்காட்டிய பின் பௌலிஸ் அப்புஹாமி சாதாரண தோற்றமுடையவராக இருந்த போதிலும் விமானம் ஓட்ட கற்றுக் கொள்வதற்காக தன்னை முழுமையாக அர்ப்பணிக்க கூடியதொரு ஆர்வமுள்ள மனிதர் என்பது பயிற்சியாளருக்கு தெளிவாக புரிந்தது. அதுமட்டுமன்றி அவருக்கு இயந்திர தொழில்நுட்பங்கள் பற்றிய பரந்தளவானதொரு அறிவு இருப்பதையும் பயிற்சியாளர் அறிந்து கொண்டார். உடனே பௌலிஸ் அப்புஹாமியை பயிற்சியாளர் பிரதான பயிற்சியாளரான C.H.S. அமரசேகரவிடமும் மற்றொரு பயிற்சியாளரான சுசந்த ஜெயசேகரவிடமும் அறிமுகப்படுத்தினார். பயிற்சி கல்லூரியில் உள்ள மற்ற மாணவர்களை விட எந்த அனுபவமும் இல்லாத கிராமத்தவரான Appuhamyயிடத்தில் அதீத திறமை ஒளிந்திருப்பதை இருவரும் புரிந்துகொண்டனர். எனவே அவருக்கு பறப்பதற்கான பயிற்சியை வழங்குவதற்கு இருவரும் தீர்மானித்தனர்.

ஆனால் அவர்கள் அன்றைய சமயத்தில் Appuhamyன் எளிமையான தோற்றம், அவருக்கு ஆங்கிலம் தெரியாது என்பது பற்றி மட்டுமே அறிந்திருந்தனரே தவிர அவர் ஒரு பெருமைக்குரிய குடும்பத்தை சேர்ந்தவர் என்பது பற்றியோ, அவர் தனது தொழிலில் சிறந்து விளங்கியவராகவும், மரியாதைக்குரியவராகவும் இருந்தது பற்றியோ அவர்கள் அறிந்திருக்கவில்லை. 1905 ஆம் ஆண்டு டிசம்பர் 21ஆம் திகதி கம்பஹா மாவட்டத்தின் அத்தனகல்ல என்ற ஊரில் பிறந்த Appuhamy தன் சிறுவயதில் இயந்திரங்களை கையாள்வதில் அதிக ஆர்வமுடையவராக இருந்தார். மேலும் அவருடைய கிராமம் ஒரு பின்தங்கியதாக இருந்த போதிலும் அவருடைய குடும்ப நண்பரான D.C சேனாநாயக்கவின் உதவியால் கொழும்பு ஆனந்தா கல்லூரியில் கல்வி கற்பதற்கான வாய்ப்பு அவருக்கு கிட்டியது. பின்பு தன் தந்தையின் பஸ் நிறுவனத்தை பொறுப்பேற்றார். அவருடைய காலத்தில் அவரிடம் இருந்த 36 பஸ்கள் கொழும்பு,கண்டி, குருநாகல்,ஹங்வெல்ல போன்ற இலங்கையின் பல முக்கிய நகரங்களுக்கும் செயற்பட்டன. 1940களில் அன்று "பஸ் முதலாளி" என மக்களால் அறியப்பட்டிருந்த பௌலிஸ் அப்புஹாமி தன்னை விட பல வருடங்கள் இளமையான 17வயது பெண்ணை திருமணம் செய்தார்.தன் திருமண வாழ்க்கை பற்றி Appuhamyன் மனைவி கூறும் போது "தாம் உடல் ரீதியாக முழுமை பெற்றிருந்த போதிலும் மனதளவில் தான் ஒரு குழந்தையாகவே இருந்தேன். இதன் காரணமாக என்னுடைய பெற்றோர் என்னை மேலும் இரண்டு வருடங்கள் தம்முடனே வீட்டில் வைத்திருந்தனர். இக்காலப்பகுதியில் எனக்கு இரண்டு மகன்களும் 2 மகள்களும் கிடைத்தனர்" என்றார். Appuhamyன் பஸ் நிறுவனம் புகழ் பெற்று முன்னேறியிருந்த காலப்பகுதியில் அவர் தன்னிடமுள்ள இயந்திரங்கள் மீதான திறமையை தன் பஸ்கள், தன்வீட்டு மோட்டார் கார்கள் மற்றும் தொழிற்சாலை இயந்திரங்கள் மீது பிரயோகித்து பார்த்தார். அதுமட்டுமன்றி அவருக்கு Photography மீதும் ஆர்வமும் திறமையும் இருந்தது மட்டுமின்றி, அரிதானதும் விலை உயர்ந்ததுமான கேமராக்களை சேகரிப்பதிலும் அவருக்கு அதீத ஆர்வம் இருந்தது. அதே நேரத்தில் இயந்திரங்கள் தொடர்பாக அவருக்கு இருந்த தேர்ச்சி காரணமாக அவருக்கு விமானம் ஓட்டுதலை பற்றி இலகுவாக கற்றுக்கொள்ள முடியுமாக இருந்தது.



ஆங்கிலம் தெரியாத, சாரம் அணிந்த, குடுமியுடனான சாதாரண ஒரு மனிதனான பௌலிஸ் அப்புஹாமி விமானத்தை செலுத்த அதீத முனைப்புடனும், திறமையுடனும் செயல்பட்டது பயிற்சியாளர்களில் ஒருவரான ஜெயசேகரவை அதிகம் கவர்ந்து விட்டது. இதுபற்றி அவர் கூறும்போது "எனது குடுமி விமானம் ஓட்டுவதற்கு எந்தவிதத்திலும் தடையாக இருக்கவில்லை" என Appuhamy கூறியதாக தெரிவித்தார். தன் முதல் நாள் பயிற்சியை முடித்து விட்டு வீடு திரும்பிய அப்புஹாமி தன் மனைவியைப் பார்த்து "நான் பறப்பதற்கு பயப்படவில்லை நான் நிச்சயம் LicenseI பெறுவேன்" என்று கூறியதோடு மட்டுமல்லாமல் அதை செய்தும் காட்டினார்.விமானத்தை திறமையான முறையில் செலுத்தி தனக்கான LicenseI 1953ஆம் ஆண்டு அக்டோபர் 5ஆம் திகதி பெற்றுக்கொண்டார். அன்றையநாள் அந்த முக்கியமான சந்தர்ப்பத்தின் அடையாளமாக தனது பயிற்சியாளருக்கு சிங்கள முறைப்படி வெற்றிலை வழங்கி அவரை கௌரவித்தார். விமானத்தை செலுத்துவதற்கு அவர் தேர்ச்சியடைந்த பின்பு Tigermoth விமானங்களுக்கு பதிலாக அதிக முன்னேற்றதரத்தையுடைய Chipmunk விமானங்களை செலுத்துவதற்கு முன்னேறியதோடு மட்டுமல்லாமல் பயணிகளை ஏற்றிக் கொண்டு செல்லுமளவிற்கும் முன்னேறினார். அவர் அடிக்கடி தனது மகனான விஜித குமாரவை விமானத்தில் ஏற்றிக்கொண்டு பறப்பார். அவ்வாறு செல்லும் போது ஒரு நாள் எதிர்பாராதவிதமாக பயண வழிப்பாதை தவறி விட்டது. என்றாலும் முன்னெச்சரிக்கையாக செயற்பட்ட அப்புஹாமி புத்தளம் பாலாவியிலுள்ள விமான ஓடுதளத்தில் வெற்றிகரமாக விமானத்தை தரையிறக்கினார். இருவரையும் காணாது பயத்திலிருந்த இரத்மலானை பயிற்சி நிலையத்தில் இருந்தவர்கள் இருவரையும் தேடி மற்றொரு விமானத்தை அனுப்ப தயாராகிக்கொண்டிருந்த போது இருவரும் Chipmunk விமானத்தில் பத்திரமாக திரும்பினர். அதுவரை பதைபதைத்துக் கொண்டிருந்த பயிற்சிநிலைய அதிகாரிகளுக்கும் முக்கியமாக Appuhamyன் மனைவிக்கும் அப்போதுதான் உயிர் திரும்ப வந்தது என்று கூற வேண்டும். Appuhamyன் மனைவிக்கு தன் கணவனுக்கு விமானங்கள் மீது புதிதாக ஏற்பட்டுள்ள எல்லையில்லா காதலை நினைத்து மிகவும் கவலையாக இருந்தது. இந்தக்கவலையானது அவள் தன் கணவனுடன் அவனின் பயிற்சி வகுப்பிற்கு வந்திருந்தபோது Tigermoth விமானமொன்று பயங்கர விபத்துக்குள்ளானதை கண்டபோது இன்னும் அதிகமானது. என்றாலும் அவள் தன்னுடைய கணவனின் ஆசைகளுக்கு தடையாக இருக்கவில்லை. தன் கணவனின் விமானத்தை செலுத்த வேண்டுமென்ற ஆசைக்கு ஆதரவாகவே அவள் செயற்பட்டாள். இதன் காரணமாக 1953ஆம் ஆண்டு தனியாக விமானத்தை செலுத்துவதற்கான விமானங்களை பெற்ற விமானிகளுக்கென ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட விழாவில் பிரதம அதிதியாக வந்த அன்றைய போக்குவரத்து அமைச்சரும் பிற்காலத்தில் இலங்கையின் பிரதமராக செயற்பட்டவருமான சேர் ஜோன் கொத்தலாவலையை வெற்றிலை வழங்கி வரவேற்பதற்காக Appuhamyன் மனைவியே நியமிக்கப்பட்டாள். Appuhamy விமானங்களை ஓட்டுவதை விரும்பிய போதும் தன் பஸ் நிறுவனத்தை முழுமையாக கைவிட்டுவிடவில்லை. இதனால் விமானம் ஓட்டுவதை படிப்படியாக குறைத்துக் கொண்டவர் 1955ம் ஆண்டு காலப்பகுதியில் விமானம் ஓட்டுவதிலிருந்து முற்றிலுமாக ஒதுங்கிக் கொண்டார். Appuhamy தன் பஸ் நிறுவனத்தை வெற்றிகரமாக நடாத்திக் கொண்டிருந்த வேளை அவரை நிலைகுலைய வைக்கும் வகையில் செய்தியொன்று அவருக்கு வந்தது. "இலங்கை தேசிய போக்குவரத்து சபையை ஆரம்பிப்பதற்காக இலங்கையில் உள்ள தனியார் பஸ்கள் அனைத்தும் 1958 ஜனவரி முதலாம் திகதி முதல் தேசிய மயமாக்கப்படுவதாக" அப்போதைய இலங்கையின் பிரதமரான S.W.R.D. பண்டாரநாயக்க திடீரென அறிவிப்பொன்றை வெளியிட்டார்.

11ஆம் பக்கம் பார்க்க...

Althaf Hasan

06ஆம் பக்க தொடர்ச்சி...

வேறு பெரிய விடயங்கள் இருக்கின்ற பொழுது இது சிறிய விடயங்களாக மாற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றது என்று தான் கூற வேண்டும். ஆனால் உண்மையில் இது சிறிய விடயமில்லை. எங்களது இருப்பை கேள்விக்குறியாக்குகின்றது. நாளைக்கு முல்லைத்தீவு மாவட்டம் என்பது ஒரு தனி தமிழர்கள் பெரும்பான்மையினர் வாழுகின்ற பிரதேசம் என்பது மாறி ஒரு பன்முகப்படுத்தப்பட்ட ஒன்றாக மாற்றி அது வடக்கு கிழக்கு முல்லைத்தீவு பிரதேசம் 2 க்கும் இடையில் இருக்கின்ற பிரதேசம் அந்த கோட்பாட்டை இல்லாமல் செய்ய வேண்டும் என்பது அவர்களுடைய திட்டமாக இருக்கின்றது அதுமட்டுமல்ல மணலாற்று பிரதேசம் என்பது எல்லா வளங்களையும் கொண்டவொரு பிரதேசம் அந்த இடமும் வளம் பொருந்திய பிரதேசத்தை அபகரிக்க வேண்டும் என்பது அவர்களுடைய நோக்கமாகவும் இருக்கின்றது. ஆனால் இதிலே எங்களுடைய இருப்பு என்பது அல்லது எங்களுடைய நிலங்கள் தாயக கோட்பாடுகள் என்பது கேள்விக் குறியாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது கேள்விக்குறியாக்கப்பட்டுவிட்டது என்று தான் கூற வேண்டும். அது அநேகமாக ஆக்கிரமிப்பினுடைய அரதிட்டத்திற்கு மேலே அவர்கள் தங்களுடைய எண்ணத்தை ஈடேற்றிவிட்டார்கள் என்பது தான் எங்களது கருத்து.

**கேள்வி : இப்படியே தொடர்ச்சியாக செல்ல அனுமதிக்க முடியாது எனவே இதற்கான ஒரு மாற்று வழியை தமிழ் தரப்பு எவ்வாறு கையாளலாம் என்று நினைக்கின்றீர்கள்?**

பதில் : ஒன்று இந்த விடயத்தை தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டும் இதுவொரு முக்கியமான விடயமாக தமிழ் தரப்பு கருத்திலெடுக்க வேண்டும். இரண்டாவது விடயம் இவர்கள் ஒட்டுமொத்தமாக தங்களால் முடிந்த சில அபிவிருத்தி விடயங்களை மேற்கொள்கின்ற பொழுது எல்லைப் பிரதேசங்களை மையப்படுத்தி அபிவிருத்தி விடயங்களை மேற்கொள்ள வேண்டும். அது மட்டுமல்ல உங்களுக்கு தெரியும் முன்பு மாகாண சபையினுடைய தலைமைக் காரியாலயம் மாங்குளத்தில் அமைய வேண்டும் என்ற அந்த நிலைப்பாடு மாற்றப்பட்டு தற்பொழுது கைதடிக்கு கொண்டு சென்றிருக்கின்றார்கள். ஆனால் அந்த மாங்குளத்திலே அது அமைந்திருக்குமாக இருந்தால் தமிழர்களுடைய நகர்வு எல்லைப் பகுதிகளை நோக்கி சென்றிருக்கும். குடியேற்றங்கள் அல்லது அபிவிருத்திகள் போன்ற விடயங்கள் இங்கே நோக்கப்பட்டு செல்லக்கூடியதாக இருந்திருக்கும். சிங்கள பேரினவாதிகளை பொறுத்தவரையில் யாழ்ப்பாணத்தில் குடியேறுவது என்பது ஒரு அசாத்தியமான விடயம். அந்த முயற்சிகளை அவர்கள் மேற்கொண்டாலும் அது அசாத்தியமான விடயம்.

ஆனால் எல்லைப் பகுதிகளை ஆக்கிரமிப்பதற்கு இலகுவான விடயம். அதை முறியடிக்கக்கூடிய திட்டங்களை நாங்களும் வகுக்க வேண்டும். எப்படி செய்யலாம் என்பதனை நாங்கள் ஒற்றுமையாக செயற்பட வேண்டும். இன்று வரை இலங்கையில் மிகப்பெரிய பாலங்கள் போன்றன அபிவிருத்தியின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் கூட ஒரு பெரிய தொகை இல்லாமல் சாதாரணமாக செய்யக்கூடிய கொக்குழாய் பாலத்தை அவர்கள் போடாமல் கிட்டத்தட்ட அந்த பாலம் போடவேண்டிய இடத்திலேயே சிங்களவர்களை கொண்டுவந்து குடியேற்றியிருக்கின்றார்கள். பாலம் அமைத்து ரோட் போடவேண்டிய இடத்திலே அவர்கள் சிங்களவர்களை குடியேற்றியிருக்கின்றார்கள் இந்த விடயங்கள் எல்லாம் அவதானிப்பிலோ அல்லது கடல் சார்ந்த முகத்துவாரப்பிரதேசத்திலே உள்ள குறிப்பிட்ட பிரதேசங்களிலே யாருமே குடியேறமுடியாத இடங்களாகும். ஏனென்றால் கடலினுடைய ஒதுக்கீடு அல்லது பாறைக்குரிய ஒதுக்கீடு என்றிருக்கின்ற இடங்களில் குடியேற முடியாது ஆனால் இன்று நாங்கள் போய் பார்த்தால் கொக்குழாய் பாலம் அல்லது பாதை அமைய வேண்டிய இடத்தில் சிங்கள மக்களை குடியேற்றியிருக்கின்றார்கள். இவற்றையெல்லாம் நாங்கள் கருத்தில் கொள்வதில்லை அதைப்பற்றி கதைப்பதில்லை இங்கு என்ன நடக்கின்றது என்பதை ஆராய்வதில்லை. மணலாறு என்று கூறுகின்ற பிரதேசம் யாழ் குடா நாட்டைவிட இரண்டு மடங்கு அதிகமாக காணப்படுகின்ற ஒரு பிரதேசமாகும்.

**கேள்வி : இதில் தமிழ் கட்சிகள் ஒருமித்த நிலைப்பாடு இல்லை என்று கூறவருகின்றீர்களா?**

பதில் : இந்த விடயத்தில் இல்லை என்று தான் கூறவேண்டும். ஒருமித்து செயற்படுவது என்னபது தமிழர்களுக்குரிய சாபக்கேடு. ஒருமித்து அவர்கள் செயற்படுவது என்பது அசாத்தியமான விடயம். அது இன்று நேற்று வந்த விடயமல்ல. ஆரம்ப காலங்களில் இருந்து இறுதியாக தந்தை செல்வநாயகம் ஜீவி பொன்னம்பலம் காலத்திலே ஒருமித்த கருத்துடன் அவர்கள் மேற்கொண்டு தேர்தலிலே நிறுத்தப்பட்டதன் பின்னர் ஆயுத போராட்டமாக இருக்கலாம் மீண்டும் இன்றைய நிலைப்பாடாக இருக்கலாம் ஒருமித்து தான் எங்களது விடயங்களை நாங்கள் பெறமுடியும் என்பதிலே யாருக்கும் நம்பிக்கை இருப்பதாக தெரியவில்லை. ஒவ்வொருவரும் தங்களுடைய கருத்து தான் மேலானது ஏனையவர்கள் கூறுவதை கருத்தில்கொள்ளமுடியாது என்ற அடிப்படையில் தான் ஒவ்வொரு தலைவர்களும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

**கேள்வி : ஆயுத போராட்ட கட்சியிலிருந்து வந்தவர் என்ற வகையிலே ஆரம்பகட்டத்தில் நில ஆக்கிரமிப்பு ஏற்படுத்தப்பட்ட பொழுது தான் வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டதாக வரலாறுகள் இருக்கின்றன. எனவே இவ்வாறானதொரு அடக்குமுறை அல்லது நில அபகரிப்புக்கள் ஏற்படுகின்ற பொழுது தமிழினத்தை மீண்டும் ஒரு யுத்த சூனியத்திற்குள் இழுத்துச்செல்வதாகவே பல ஆய்வுகள் கருதுகின்றது அந்த வகையில் நீங்கள் என்ன கூறவிரும்புகின்றீர்கள்?**

பதில் : முதலில் எங்களது நிலங்கள் பாதுகாக்கப்படுவதிலே நாங்கள் அக்கறை இல்லாதிருப்போமாக இருந்தால் மீண்டுமொரு யுத்தம் செய்தும்கூட எங்களது பிரதேசத்தை பெறமுடியாது. ஏனென்றால் இதுவொரு குடியேற்றத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டால் பின்னர் மக்களை அந்த இடத்திலிருந்து அகற்றுவது என்பது ஒரு சாதாரணமான விடயமில்லை. அது அரசுடன் போராடிப் பெறக்கூடிய விடயம் இல்லை. எனவே மீண்டும் யுத்தத்தின் மூலம் நாங்கள் ஒரு விடயத்தை சாதித்துவிடலாம் என்பது கூட கேள்விக்குறியாக போய்விடும் சூழல் தான் இருக்கின்றது. அப்படி இருக்கக்கூடிய சாத்தியங்கள் கூட இல்லாமல் ஆக்கப்படுகின்றது. எனவே அரசு மிக தந்திரமாக செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது அவர்கள் தங்களது விடயங்களிலே மிகவும் கவனமாக இருக்கின்றார்கள். ஆனால் நாங்கள் எங்களுக்குள் இருக்கின்ற முரண்பாடுகளைத்தான் பெரிதாக வைத்திருக்கின்றோமே தவிர நாங்கள் ஒற்றுமையாக செயற்பட வேண்டும் ஒற்றுமையாக இந்த விடயங்களை அணுக வேண்டும் என்பதிலே தமிழ் தரப்பில்லை என்பது தான் உண்மையான விடயம்.

**மாவிலாறும்,மஹிந்தவும்**

**முள்ளிவாய்க்கால்**


**பிரபாகரனும் நடந்தது என்ன?**

**எனும் விறுவிறுப்பான தொடர்**

**வருகின்ற மாதத்தில் இருந்து**

**வெளிவர காத்திருக்கின்றது.**

**-சுழியோடி-**



10ஆம் பக்க தொடர்ச்சி...

பண்டாரநாயக்கவின் பரம்பரை சொத்தான ஹொரகொல்லையிலுள்ள பங்களா அத்தனகல்லவிற்கு மிக நெருக்கமாகவே உள்ளதோடு பண்டாரநாயக்கவும் Appuhamyம் சிறுவயதிலிருந்தே மிக நெருங்கிய நண்பர்களாக இருந்தனர். தன் பால்யகால நண்பன் திடீர் அறிவிப்பை வெளியிட்டு தன் குடும்ப வியாபாரமான பஸ் நிறுவனத்தை பறித்ததோடல்லாமல் தனக்கு அதற்காக வேண்டி எந்தவித இழப்பீடும் வழங்காமல் இருந்தது அவருக்கு தொண்டையில் சிக்கிய முள் போல வேதனையளித்தது. இதன் காரணமாக பிரதமருக்கும் அப்புஹாமிக்குமிடையிலான உறவானது அறுந்து போனது.

பின்தங்கியதொரு கிராமத்திலிருந்து வந்து தனது உயர்தரமான சிந்தனைகளால் தன்னை முழுமை பெறச்செய்து தன் முன்னாலிருந்த அனைத்து தடைகளையும் தகர்த்து விட்டு தன் இலட்சியத்தை அடைய உத்வேகத்துடன் செயற்பட்ட Appuhamy கவலைக்குரிய விடயமாக 1963ஆம் ஆண்டு பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டார். என்றாலும் அதன் பிறகும் பத்து வருடங்கள் உயிர்வாழ்ந்த பௌலிஸ் அப்புஹாமி1973 பெப்ரவரி 23ஆம் திகதி இவ்வுலகை விட்டு பிரிந்துசென்றார். அப்புஹாமி தற்போது உயிரோடில்லையாயினும் இலங்கையின் ஆங்கிலம் பேசத்தெரியாத, சாரம் அணிந்த முதல் விமானி என்ற வகையில் இன்றும் நினைவு கூரப்படுகின்றார். Appuhamyன் கதையானது இலங்கையர்கள் தமது இலக்குகளையும், சாதனைகளையும் அடைவதற்காக வேண்டி தம் முன்னால் வரும் தடங்கல்கள்,தடைகள் அனைத்தையும் உடைத்தெறிந்து விட்டு முன்னேறிச்செல்வதற்கு ஊக்கப்படுத்துமொரு கதையாகும்.

# புத்தர் பொன்மொழிகள்

ஒரு முட்டாள் நண்பனுடன் சேர்ந்து வாழ்வதை விட நீ தனியாக வாழ்வதே சிறந்தது.

போரில் ஆயிரம் பேரை வெல்வதை காட்டிலும் சிறந்தது உன் மனதை நீ வெற்றி கொள்வது.

இந்த உலகில் எப்போதும் நிலைத்திருக்கும் சக்தி உண்மைக்கு தான் உண்டு.

நம் வாழ்க்கையில் எதுவுமே நிலையானது இல்லை என்பதை உணர ஆரம்பித்து விட்டால்.. நமக்கு இருக்கும் ஆணவம் காணாமல் போய் விடும்.

அமைதியை விட உயர்வான சந்தோசம் இந்த பூமியில் வேறு ஒன்றும் இல்லை.

தன் எதிரியாக இருந்தாலும் அவனுக்கும் நல்லதே நடக்க நினைப்பவன் தான் நல்ல மனம் படைத்தவன். அந்த மனம் கொண்டவனுக்கு நல்ல விடயங்கள் தான் நடக்கும்.

உயிர் நண்பன் என்பவன் தக்க நேரத்தில் சரியான உதவிகளை செய்பவன் தான் அந்த நட்பை விட்டு விடக் கூடாது.

உங்கள் வாழ்நாளில் எதை செய்தாலும் திருப்தியுடன் செய்யுங்கள் அதுவே உங்கள் வாழ்வை அர்த்தம் உள்ளதாக மாற்றும்.

வாழ்க்கை என்றாலே துன்பங்களும் துயரங்களும் இருக்கத் தான் செய்யும் அது தான் நியதி என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

இந்த நொடியை சந்தோசமாக வாழுங்கள் நிகழ்காலத்தை சந்தோசமாக வாழ்வது தான் வாழ்க்கையை இனிமையாக மாற்றும்.

வாழ்வு என்பது சில நொடியில் முடிந்து போவதல்ல ஒவ்வொரு நொடியையும் சந்தோசமாக திருப்தியாக வாழ்வதாகும்.

மகத்தான வெற்றி என்பது இந்த உலகத்தை வெற்றி கொள்வதைக் காட்டிலும் உன் மனதை வெற்றி கொள்வதே மகத்தான வெற்றி.

உண்மைக்கு மகத்தான சக்தி உண்டு அதை எவராலும் மாற்றிடவோ.. மறைத்திடவோ.. இயலாது உண்மையை அழிக்கும் சக்தி எவருக்கும் இல்லை.

உண்மை என்பது ஒரு இனிமையான உணர்வு. உண்மையின் அருமை தெரியாதவர்கள் இனிமையின் சுகத்தை உணராதவர்கள்.

உன் வாழ்வில் உண்மையும் அன்பும் நிறைந்திருந்தால் எப்போதும் உன் வாழ்வு மகிழ்ச்சியாகவே இருக்கும்.

உணர்வோடு இருப்பதே போலவே அதீத உணர்ச்சிகளில் இருந்து விலகி இருக்கவும் கற்றுக் கொள்ளுங்கள்.

செல்வத்தின் இயல்பு வளர்வதும் தேய்வதும் செல்வம் என்றைக்கும் ஒரு இடத்தில் நிலைத்திருப்பது கிடையாது.

நீ செய்த செயல்கள் ஒவ்வொன்றும் உன் நிழல் போல உன்னை தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும். அது நல்லதா இருந்தாலும் சரி கெட்டதாக இருந்தாலும் சரி.

மற்றவர்களிடம் பேசும் போது உங்கள் மனதில் இருப்பதை சொல்லுங்கள் இல்லையென்றால் மௌனமாக இருங்கள்.

# மகளிர் பக்கம்

## தூக்கமின்மையால் ஏற்படும் பாதிப்புகள் என்னென்ன?

சராசரியாக ஒரு மனிதன் தினமும் 6 மணி முதல் 8 மணி நேரம் வரை தூங்க வேண்டும் என மருத்துவர்கள் கூறியிருக்கின்றனர்

தூக்கமின்மை காரணமாக பல சிக்கல்கள் உடலுக்கு வரும் என்பதும் குறிப்பாக கண் எரிச்சல் கண்வலி தலைவலி ஆகியவை வரும் என்பதும் குறிப்பிடத்தக்கது

மேலும் ரத்த அழுத்தம் இதய நோய் பக்கவாதம் நீரிழிவு ஆகியவையும் சரியான தூக்கம் இல்லாமல் இருப்பதற்கு வாய்ப்பிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது

தினமும் 8 மணிநேரம் நல்ல தூக்கம் இருந்தால் மருத்துவரிடம் செல்ல வேண்டிய வேலையே இருக்காது என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும்

எவ்வளவு தான் பகலில் கடுமையான வேலை பார்த்தாலும் இரவில் 6 மணி முதல் 8 மணி வரை தூக்கம் என்பதை வழக்கமாகக் கொண்டுவிட்டால் எந்தவிதமான நோயும் உடலை அண்டாது என்பது குறிப்பிடதக்கது

இதை மனதில் வைத்துக் கொண்டு நிம்மதியான தூக்கத்தை தினமும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது



## மழைக்காலத்திற்கு ஏற்ற காரசாரமான நண்டு குழம்பு செய்வது எப்படி!

**சூடான சாதத்தில் ஊற்றி சாப்பிட அருமையாக இருக்கும் இந்த நண்டு குழம்பு. இன்று இந்த ரெசிபியை செய்வது எப்படி என்று பார்க்கலாம்.**

**தேவையான பொருட்கள்**

நண்டு - 1/2 கிலோ,
வெங்காயம் - 100 கிராம்,
தக்காளி - 100 கிராம்,
இஞ்சி, பூண்டு விழுது - 50 கிராம்,
தேங்காய் விழுது - 100 கிராம்,
பச்சை மிளகாய் - 6,
கறிவேப்பிலை - 1 கொத்து,
மஞ்சள் தூள் - 5 கிராம்,
மிளகாய்த்தூள் - 10 கிராம்,
மிளகுத்தூள் - 5 கிராம்,
சீரகத்தூள் - 5 கிராம்,
புளி தண்ணீர் - 50 மிலி,
எண்ணெய் - 150 மிலி,
கொத்தமல்லி - சிறிதளவு
உப்பு - தேவைக்கு.



**செய்முறை**

நண்டை நன்றாக சுத்தம் செய்து இரண்டு துண்டாக வெட்டிக்கொள்ளவும். வெங்காயம், கொத்தமல்லி, தக்காளியை பொடியாக நறுக்கி கொள்ளவும். தேங்காய் விழுது, பச்சை மிளகாய், கறிவேப்பிலை, மஞ்சள் தூள், மிளகுத்தூள், மிளகாய்த்தூள், சீரகத்தூள் அனைத்தையும் சிறிது தண்ணீர் சேர்த்து அரைக்கவும்.

கடாயில் எண்ணெய் ஊற்றி சூடானதும் வெங்காயத்தை சேர்த்து நன்கு வதக்க வேண்டும். வெங்காயம் நன்றாக வதங்கியதும் இஞ்சி பூண்டு பேஸ்ட் சேர்த்து பச்சை வாசனை போனவுடன் தக்காளி சேர்த்து நன்கு மசியும் வரை வதக்க வேண்டும்.

தக்காளி நன்றாக வதங்கியதும் அரைத்த விழுதை சேர்த்து பச்சை வாசனை போகும் வரை வதக்கவும். பிறகு அதில் நண்டு, சிறிது தண்ணீர், உப்பு சேர்த்து வேகவைக்கவும். நண்டு வெந்தவுடன் சிறிதளவு புளித்தண்ணீர் சேர்த்து நன்கு கொதித்தவுடன் கொத்தமல்லித்தழை சேர்த்து அலங்கரித்து இறக்கவும். சூப்பரான நண்டு குழம்பு ரெடி.



## காரணமே இல்லாமல் உடல் வலி ஏற்படுகிறதா?

எந்தவிதமான கடினமான வேலை செய்யாமலேயே திடீரென உடல் வலி ஒரு சிலருக்கு ஏற்படும். காரணமே இல்லாமல் உடல் வலி ஏற்படுகிறது என்று நினைப்பவர்களுக்கு உடல் வலி எதனால் ஏற்படுகிறது என்ற காரணத்தை குறித்து தற்போது பார்ப்போம்

பொதுவாக மழைக்காலம் மற்றும் குளிர்காலங்களில் உடலுக்குத் தேவையான வெப்பம் குறைவாக இருக்கும். எனவே உடலில் உள்ள ரத்த ஓட்டம் குறைவதால் உடல் வலி ஏற்பட அதிக வாய்ப்பு இருக்கிறது

எனவே குளிர் காலத்தில் ரத்த ஓட்டம் சீராக இருக்கும் வகையில் சின்னச் சின்ன உடற்பயிற்சி கண்டிப்பாக செய்ய வேண்டும். அவ்வாறு செய்தால் உடல் வலியில் இருந்து நாம் தப்பித்துக் கொள்ளலாம்

மேலும் அதிக நேரம் ஒரே இடத்தில் உட்கார்வதை தவிர்க்க வேண்டும். ஒருவேளை உட்கார்ந்து அதிக நேரம் வேலை செய்ய வேண்டிய நிலை இருந்தாலும் ஒரு சில மணி நேரங்களுக்கு ஒரு முறை ஐந்து அல்லது பத்து நிமிடங்கள் எழுந்து உடலுக்கு ஒரு அசைவு கொடுத்துவிட்டு அதன் பிறகு பணி செய்தால் உடல் வலி ஏற்படாது

மேலும் இடையிடையே போதுமான ஓய்வு எடுக்க வேண்டும் என்பதும் மூட்டுகள் மற்றும் தசைகளில் லேசாக அவ்வப்போது மசாஜ் செய்து கொள்ள வேண்டும் என்பதும் அப்போது தசைகளுக்கு சூடு கிடைப்பதோடு இரத்த ஓட்டத்தை படம் என்பதும் குறிப்பிடத்தக்கது

குளிர் மற்றும் மழை காலங்களில் இளம் சூடான நீரில் குளிப்பதும் உடல் வலியை போக்கும்



## உதடு சிவப்பாக சில அற்புத அழகு குறிப்புக்கள் !!

சில நேரங்களில் உதடுகள் கருமை அடைவதோடு, வறண்டு போகவும் நேரிடும். இதைத் தவிர்ப்பதற்கு போதுமான அளவு தண்ணீர் குடிக்க வேண்டும். அதிகமாக தண்ணீர் குடிப்பதால் உதடுகள் ஆரோக்கியமாகவும், பொலிவாகவும் இருக்கும்.

உதடுகளைத் தூய்மைப்படுத்த, தினமும் இரவு தூங்கச் செல்வதற்கு முன்பு, 1/2 தேக்கரண்டி சர்க்கரை, ஒரு சிட்டிகை உப்பு, 4 துளிகள் தேன் மற்றும் 2 துளிகள் எலுமிச்சை சாறு போன்ற வற்றை நன்றாக கலந்து, சர்க்கரை கரைவதற்கு முன்பு உதட்டின் மீது பூசி, 2 முதல் 3 நிமிடங்கள் மென்மையாக மசாஜ் செய்தால், இறந்த செல்கள் நீங்கி, உதடுகள் மிருதுவாகும்.


## பச்சை வாழைப்பழத்தை சர்க்கரை நோயாளிகள் சாப்பிடலாமா?

**சர்க்கரை நோயாளிகள் பொதுவாக வாழைப்பழம் சாப்பிடக்கூடாது என்று கூறப்பட்டாலும் பச்சை வாழைப்பழத்தை சாப்பிடலாம் என முன்னோர்கள் கூறியுள்ளனர்.**

**பச்சை வாழைப்பழத்தில் பல்வேறு சத்துக்கள் இருக்கும் நிலையில் பச்சை வாழைப்பழம் வயிற்று பாதையில் உள்ள குடல் புண்களை ஆற்றும் தன்மை கொண்டது என்றும் அது மட்டுமின்றி உடலில் சுரக்கும் அமிலங்கள் காரணமாக ஏற்படும் குடல் புண் அல்சர் ஆகியவற்றை தீர்த்து வைக்கும் என்று கூறப்படுகிறது**

**சர்க்கரை நோயாளிகள் தாராளமாக பச்சை வாழைப்பழங்களை சாப்பிடலாம் என்றும் அதில் ஸ்டார்ச் அதிகமாக உள்ளதால் இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவை கட்டுப்படுத்தும் என்றும் கூறப்படுகிறது**

**அதேபோல் உடல் எடையை குறைக்க விரும்புபவர்கள் பச்சை வாழைப்பழத்தை சாப்பிடலாம் என்றும் அதில் அதிக ஆற்றல் இருப்பதாகவும் கூறப்படுகிறது**



## முகத்திலுள்ள சுருக்கத்தை போக்கும் அற்புத மருத்துவ குணம் அடங்கிய கற்றாழை!

முகத்திலுள்ள கரும்புள்ளிகள் தழும்புகள் வெயில் பாதிப்புகள் உலர்ந்த சருமம் என சரும நோய் எதுவாக இருந்தாலும் சிறிது கற்றாழைச் சாறை தினமும் தடவி வர நல்ல குணம் கிடைக்கும்.

ஆண்கள் சவரம் செய்யும் பொழுது ஏற்படும் கீறல்கள் காயங்களுக்கும் உடனடி நிவாரணம் பெற கற்றாழைச் சாறை பயன்படுத்தலாம். தீக்காயங்களுக்கும் உடனடி தீர்வு கற்றாழைச் சாறுதான். இதன் சாறை இரவு வேளையில் முகத்தில் தேய்த்து காலையில் வெந்நீரால் கழுவ முகத்தில் உள்ள கருமை நீங்கி முகம் பொலிவு பெறும்.

தோலோடு கற்றாழையை பச்சை மஞ்சளோடு சேர்த்து மைய அரைத்து முகம் கழுத்து கை கால்களில் தடவி சில மணி நேரத்துக்குப் பின்னர் வெந்தய நுரை கொண்டு தேய்த்து குளித்தால் உடல் பளபளப்பாகும். தோல் நோய் வராது. கற்றாழை கழியைத் தலை முடியில் தடவி சீவினால் மடி கலையாது. தலையின் சூடும் குறையும். உடல் குளிர்ந்து காணப்படும்.

சருமத்தில் ஏற்படும் எரிச்சலை அடக்கி சருமத்திற்கு குளிர்ச்சி தரும். திசுக்களைப் புதுப்பித்து ஈரப்பதம் அளிக்கும். எல்லா வகை சருமத்திற்கும் ஏற்றது. முகத்தின் சுருக்கங்களைப் போக்கி புத்துணர்ச்சியையும் இளமைப் பொலிவையும் தக்க வைத்துக் கொள்ள உதவும். குறிப்பாக வடுக்கள் இருந்த சுவடு தெரியாமல் மறையும்.

கண்நோய் கண் எரிச்சலுக்கு கற்றாழைச் சோற்றை கண்களின் மேல் வைக்கலாம். விளக்கெண்ணெயுடன் கற்றாழைச் சோறைக் காய்ச்சி காலை மாலை என இரு வேளை ஒரு தேக்கரண்டி சாப்பிட்டு வர உடல் அனல் மாறி மேனி பளபளப்பாகத் தோன்றும். நீண்ட கால மலச்சிக்கல் நீங்கும். கல்லீரல் ஆரோக்கியமாக விளங்கும்.

தலைமுடி பராமரிப்பில் கருப்பாகவும், வளர்ச்சியைத் தூண்டவும் பயன்படுகிறது. தலையில் ஏற்படும் கேசப் பிரச்சனைகள் மற்றும் பொடுகை நீக்குகிறது. கற்றாழை சோற்று பகுதியை தேங்காய் எண்ணெயுடன் காய்ச்சி தலைக்குத் தேய்த்து வர கேசம் நன்கு செழித்து வளரும்.

எண்ணெய் குளியல் செய்ய கண் குளிர்ச்சி மற்றும் சுக நித்திரை உண்டாகும். கற்றாழை சாறு நமது தோலில் நீரை விட நான்கு மடங்கு வேகமாக கற்றாழைச் சாறு ஊடுருவக் கூடியது. விட்டமின் சி மற்றும் பி சத்துகளும் தாதுக்களும் நிறைந்தது.

தோல் இறுக்கத்திற்கு சுகமளிக்கும் மருந்தாகிறது. சருமத்திலுள்ள கொலாஜன் எனப்படும் கொழுப்பு சத்தை குறைக்கக்கூடிய புரோட்டீன் கற்றாழையில் அதிகம் காணப்படுவதால் முகத்திலுள்ள சுருக்கம் வயோதிப தோற்றத்தை குணப்படுத்துகிறது.

07ஆம் பக்க தொடர்ச்சி...

2022ஆம் ஆண்டு ஜுன் மாதம் 26ஆம் திகதி போதைவஸ்து ஒழிப்பு சர்வதேச தினத்தின் தொனிப்பொருளாக 'ஆரோக்கியம், மனிதாபிமானம் ஆகியவற்றுக்கு சவால் விடுக்கும் போதைப்பாவனை' (Addressing drug challenges in health and humanitarian crises) அமைந்திருக்கிறது. போதைப்பாவனை அதிகரித்து செல்வதனால் விழிப்புணர்வை ஏற்படுத்தி யாழ்.போதனா வைத்தியசாலை சமூகம் யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்து மாவட்ட செயலகம் வரையில் நடைபவனியாக சென்று மாவட்ட செயலரிடம் ஐந்தம்ச கோரிக்கை அடங்கிய மகஜரையும் கையளித்துள்ளனர்.

அதில் குறிப்பிட்டு இருந்தவையாவன:

**1. போதைப்பொருள் தொடர்பான முறைப்பாடுகளுக்கு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முப்படைகளையும் உடனடியாக வலியுறுத்துதல்.**
**2. போதைப்பொருள் விநியோகம் தொடர்பான தகவல்களை வழங்குவோரை பாதுகாப்பதற்கான பொறிமுறையை உருவாக்குதல்.**
**3. போதைப்பொருள் சம்பந்தமான தகவல்களை தயக்கமின்றி வழங்க அதிபர்கள் ஆசிரியர்களை ஊக்கப்படுத்துதலும், அவர்களைப் பாதுகாத்தலும்.**
**4. போதைப்பொருள் பாவனைக்கு எதிரான மக்கள் பிரதிநிதிகளை ஒருங்கிணைத்து போலீசாருடன் இணைந்து போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்துவதற்கு உதவியளித்தலும், ஊக்கப்படுத்துதலும்.**
**5. போதைக்கு அடிமையானவர்களுக்கு மறுவாழ்வளிப்பதற்கு உரிய கட்டமைப்புகளை உருவாக்குவதும், அதன் தொடர்ச்சியான செயற்பாடுகளை உறுதிப்படுத்தலும். என்றுள்ளது.**

வடக்கு - கிழக்கில் போதைப்பொருள் பாவனையின் அதிகரிப்பு என்பது. தமிழ்ச்சமூக கட்டமைப்புகளின் வீழ்ச்சி மற்றும் பொறுப்பின்மையின் விழுமியங்கள் சார் அணுகுமுறையை. சமூகக் கட்டமைப்புகள் அல்லது சமூக நிறுவனங்கள் மக்கள் மத்தியில் வளர்த்தெடுக்காமல் காலாவதியாகி விடப்பட்டிருக்கின்றது. அதனால் புறச்சக்திகள் தமிழ் மக்கள் மத்தியில் நுழைவது இனத்தின் இருப்பை அழிப்பதிலும் குறைப்பதிலும் ஆதிக்கம் செலுத்துகிறது. தமிழ் மக்கள் மத்தியில் இருந்து மாயத்திரை விம்பத்தை முற்றாக விலக்கி வைக்க வேண்டும். வடக்கு - கிழக்கில் போதைப்பொருள் பாவனை அதிகரிப்புக்கு அரச கட்டமைப்பே காரணம் என்று குற்றஞ்சாட்டிவிட்டு விலகி ஓடுவது சமூகப் பொறுப்பைத் தட்டிக்கழிப்பதாகும். அரச கட்டமைப்புகள் மட்டும் காரணமல்ல. மாறாக அதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் தரப்புகள் தமிழ் மக்கள் மத்தியில் உண்டு. அந்தத் தரப்புகளை அடையாளப்படுத்தி எச்சரிக்கை செய்வதுதான் தமிழ்த்தேசியத்துக்கான அர்ப்பணிப்பும் அறமும் ஆகும். இல்லையென்றால் போதைப்பொருள் பாவனையால் மாத்திரமல்ல. சமூக குற்றங்களாலும் தமிழ் சூழல் இன்னும் மோசமாக தள்ளாடத் தொடங்கிவிடும்.

இலங்கையில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருவதாகவும் அதிகளவிலான போதைப் பொருள்கள் பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகளிலிருந்து கொண்டுவரப்படுவதாகவும் ஆபத்தான போதைப்பொருட்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரசபையின் (National Dangerous Drugs Control Board) அறிக்கை தெரிவிக்கின்றது. 2015ஆம் ஆண்டின் ஆய்வுகளின்படி தேசிய ஆபத்தான போதைப்பொருள் கட்டுப்பாட்டுச்சபையின் சிகிச்சையின் திறனை பொறுத்தவரையில் 64 வீதமான சிகிச்சை பெற்றவர்கள் விடுதலையான பின்பு போதைப்பொருள் பாவனையை மீண்டும் ஆரம்பித்தனர்.

இது அதிகளவானவர்கள் போதைப்பொருள் பாவனையை மீண்டும் ஆரம்பித்ததை சுட்டிக்காட்டுகிறது. 2018இல் வெளியிடப்பட்ட அதே போன்றதொரு அறிக்கையில், நேர்காணல் செய்யப்பட்ட 170 நபர்களில் அரசினால் செய்யப்பட்ட வலுக்கட்டாயமான போதைப்பொருள் தடுப்பு சிகிச்சையின் பின்பு 123 நபர்கள் போதைப்பொருள் பயன்படுத்த ஆரம்பித்தனர். இந்த அறிக்கைகள் வலுக்கட்டாயமான புனர்வாழ்வளிப்பதானது செயற்திறன் அற்றதாகயிருப்பதை காட்டுகிறது. வலுக்கட்டாயமான போதைப்பொருள் தடுப்பு சிகிச்சை முறையானது செயற்திறனற்றது என்பதை இத்தரவுகள் உறுதி செய்கின்றன. 2018ஆம் ஆண்டு போதைப்பொருள் கைப்பற்றப்பட்ட வருடம் முழுவதும் ஏறத்தாழ 738 கிலோ 560 கிராம் நிறையுள்ள போதைப்பொருட்கள் பொலிஸ ாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இதற்கு முன்னர் 2013ஆம் ஆண்டே அதிகூடிய போதைப்பொருள் கைப்பற்றப்பட்ட ஆண்டாக பேசப்பட்டுவந்தது. அவ்வாண்டில் 350 கிலோ 554 கிராம் அளவே அதிகூடிய நிறையாக பதிவாகியிருந்தது. 2019ஆம் ஆண்டின் ஜனாதிபதி தேர்தல் காலத்தில் தனது விஞ்ஞாபனத்தில் "போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழித்தலுக்கு முன்னுரிமை கொடுப்பேன்" என ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ தெரிவித்ததற்கு இணங்கவே போதைப்பொருள் கட்டுப்பாட்டில் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக இலங்கை அரசாங்கமானது போதைப்பொருள் கட்டுப்பாடு தொடர்பில் இராணுவமயப்படுத்தப்பட்ட அணுகுமுறையை கையாள்கின்றது. போதைப்பொருட்கள் மீதான யுத்தத்தில் இராணுவமானது விஷேடமான வகிப்பங்கினை கொண்டுள்ளது. குறித்த வகிபங்கானது போதைப்பொருள் கடத்தப்படுவதை தடுப்பதில் மாத்திரமல்லாது போதைப்பொருள் அடிமையானவர்களுக்கு சிகிச்சையளித்தல் மற்றும் தடுத்து வைத்தல் போன்றவற்றையும் உள்ளடக்குகிறது.

கடந்தாண்டில் போதைப்பொருள் கடத்தலுடன் சம்பந்தப்பட்ட 40870 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் 60% ஆனோர் 30 வயதுக்கு மேற்பட்டவர்கள். 39% ஆனோர் 20 வயதை நெருங்கியவர்களாவர். கடந்தாண்டு அதிகூடிய ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்ட ஆண்டாக பதிவுசெய்யப்பட்டுள்ளது. 2018 டிசம்பர் 31ஆம் திகதி போதைப்பொருள் தடுப்புப்பிரிவின் திடீர் சுற்றி வளைப்பின் போதே கொழும்பு. தெஹிவளை இரு மாடி வீடொன்றிலிருந்து பதுக்கிவைக்கப்பட்ட நிலையில் சுமார் 40 கோடி ரூபாய் பெறுமதியான 32 கிலோ எடையுள்ள போதைத்தூள் கைப்பற்றப்பட்டுள்ளது. வெளிநாடுகளிலிருந்து கொண்டு வரப்படும் ஹெரோயின் 1 L 3 மில்லியன் ரூபாய் பெறுமதியானது. இதில் 2 கிராமை சுமார் 500 பேர் பாவித்து போதை ஏற்றிக் கொள்ள முடியுமாம். வெளிநாடுகளில் வருடாந்தம் இலட்சக்கணக்கானோர் இதனால் பாதிக்கப்பட்டு தண்டனைக்கும் உள்ளாக்கப்படுகின்றனர். அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் பிரகாரம் இலங்கையில் சுமார் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் போதைப்பொருளுக்கு நிரந்தரமாக அடிமையாகியுள்ளதாக தேசிய போதைத்தடுப்பு சபை எச்சரித்துள்ளது. குறிப்பாக இளைஞர்களிடையே இப்பாவனை சடுதியாக அதிகத்திருப்பதை அது சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த ஆண்டில் போதைப்பொருள் கடத்தலுடன் சம்பந்தப்பட்ட 29,790 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் 60% ஆனோர் 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் 39% ஆனோர் 20 வயதை நெருங்கியவர்களாவர். கடந்த ஒரு சில வருடங்களில் சிறுவர்களிடத்தில் குறைந்திருந்த போதைப்பொருள் பாவனை மீண்டும் நாட்டில் தலை தூக்கிவருவதாகவும் புகைத்தல் மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபை தெரிவித்துள்ளது. போதைவஸ்துக்கு அடிமையானவர்கள் 50% திருமணமாகாத இளைஞர்களாவர். இவர்களுள் பலர் பல்கலைக்கழகம், உயர்தர, சாதாரணதர மாணவர்களாவர். 45% திருமணமானவர்கள். இதில் 50% முதல் 69% ஆனவர்கள் பாடசாலை மாணவர்கள் என சுகாதார அமைச்சின் அறிக்கை குறிப்பிடுகிறது. உலக அளவில் சுமார் 140 மில்லியன் மதுப்பிரியர்கள் இருப்பதாக உலக சுகாதார அமைப்பு மதிப்பிட்டுள்ளது. மதுப்பாவனையை பொறுத்தவரையில் உலக அரங்கில் இலங்கைக்கு 4ஆவது இடம் கிடைத்திருக்கிறது. இலங்கையில் தனிமனித மது பாவனை 4 லீற்றராக மதிப்பிடப்பட்டுள்ளது அதுவே ஆணுக்கு 15.2 லீற்றராக உள்ளது. சமூக வறுமையுடன் கூடிய அவல வாழ்க்கையை மறக்க குடி ஒரு தீர்வாகக் கையாளப்படுகின்றது. குடி சமூகப் பிரச்சனைக்கு வடிகாலாகின்றது. இதன் விளைவாக நகர்புற குடிசைப் பகுதிகளில் 43 சதவீதமானவர்கள் மதுவுக்கு அடிமையாகிவிட்டனர். பெருந்தோட்டப் பகுதியில் இது 55 சதவீதமாக உள்ளது. பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்களில் 18 சதவீதம் பேர் மதுவுக்கு அடிமையாக உள்ளனர். இது தவிர இதற்காக அவர்கள் சராசரியாக செலவழிக்கும் பணம் நாளொன்றுக்கு 950-1000 ரூபாய் என்று மதிப்படப்பட்டுள்ளது.

இலங்கையின் மொத்தக் குற்றச்செயல்களில் 38 சதவீதமானவை மது பாவனையால் ஏற்படுகின்றது. அதாவது போதையினால் ஏற்படுகின்றது. கடந்த ஆண்டில் நடந்த மொத்த வாகன விபத்தில் இறந்தோர் எண்ணிக்கை 2800 ஆகும். இதில் 90 சதவீதமானவை மதுவினால் நடந்துள்ளது. ஒட்டு மொத்தத்தில் கொலை, பாலியல் வன்முறை, விபச்சாரம் போன்றவை தேசியப்பண்பாகி கொடிகட்டிப் பறக்கின்றது. போதைப்பொருள் பாவனையில் இலங்கையில் முதலாம் இடமாக கொழும்பு மாவட்டம் காணப்படுகின்றது. இது 71% ஆக காணப்படுகின்றது. இரண்டாவதாக கம்பஹா மாவட்டம் உள்ளது. இது 22% ஆக காணப்படுகின்றது. மேல் மாகாணமே முதலிடத்தில் காணப்படுகின்றது. 6,00,000 இற்கு மேற்பட்டவர்கள் கஞ்சா பாவிப்பவர்கள். நாட்டில் கடந்த ஆண்டுகளில் ஹெரொயின் எனும் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது.

தென்னிலங்கையில் பாதாள உலகத்தின் செயற்பாடுகள் காரணமாக கொழும்பு மற்றும் புறநகர்ப் பிரதேசமெங்கும் போதைப்பொருள் பாவனை காரணமாக சமூகம் பேரழிவைச் சந்திக்கும் நிலையே காணப்படுகிறது. ஹெரோயின், கொக்கேன் போன்ற சர்வதேச போதைவஸ்துகள் தாராளமாக புழக்கத்தில் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. போதைப்பொருளுக்கு அடிமையாகும் இளைஞர்கள் தமக்கு அவற்றை வாங்குவதற்கு பணம் கிட்டாத போது திருட்டுச் சம்பவங்களிலும், கொள்ளைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். சில சந்தர்ப்பங்ளில் அதற்காக கொலை வெறியர்களாக மாறும் நிலை கூட ஏற்படுகின்றது. தென்னிலங்கையைப் போன்று வட-கிழக்கிலும் போதைப்பொருள் பாவனை கூடிக்கொண்டே போகின்றது. அதுவும் இளம் பருவத்தினரே அதிகமாக போதைக்கு அடிமையாக வருகின்றனர். கிழக்கில் மறைமுகமாக இடம்பெற்று வந்த போதைப்பொருள் பாவனை இன்று வெளிப்படையாகவே இடம்பெற்றுவருவதாக பரவலாக குற்றம் சாட்டப்பட்டு வருகின்றது. முக்கியமாக பாடசாலை மாணவர்கள் மத்தியில் மாவா, கஞ்சா போன்ற போதைப்பொருட்கள் பயன்படுத்தப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது. மற்றொரு அதிர்ச்சி தரும் தகவல் சில பாடசாலை மாணவிகளும் 'மாவா' என்பதில் சிக்கியுள்ளமையாகும். வடக்கிலும் போதைவஸ்துப் பாவனை அதிகரித்து வருகின்றது. வடபுலத்தில் போதைப்பொருட்களை தாராளமாகப் பெற்றுக் கொள்ளக்கூடியதொரு நிலைமை உருவாகி இருக்கின்றது. குறிப்பாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உயிர்கொல்லிப் போதைப்பொருளான ஹெரோய்ன் பயன்படுத்திய 10 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர். தொடர் தற்கொலை முயற்சிகளும் அதிகரித்துக் காணப்படுகிறது .

ஹெரோயின் போதைப்பொருளுக்கு அடிமையான நிலையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்காக கடந்த ஜீன் மாதம் 54 பேர் அழைத்து வரப்பட்டிருந்தனர். ஜீலையில் 53 பேர், ஆகஸ்ட் மாதம் 93 பேர், செப்டம்பர் 112 பேர் என சிகிச்சைக்காக வருவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 350 அதிக்கமானவர்கள் பேர் வரையில் தொடர் சிகிச்சையில் உள்ளார்கள் . யாழ்.மாவட்டத்தில் 20கிராமங்களைச்சேர்ந்தபலரும்ஹெரோய்ன் பாவனைக்கு முற்றாக அடிமையாகியுள்ளனர் என்ற அதிர்ச்சி தகவலும் வெளிவந்துள்ளது. ஹெரோய்னுக்கு அடிமையானவர்களில் அதிகமானோர் 16-23 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என்பதுடன், நகரிலுள்ள பிரபல பாடசாலைகளின் மாணவர்களும் இதற்குப் பழக்கப்பட்டுள்ளனர் என்ற உண்மையும் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. நூற்றுக்கணக்கான முகவர்கள் ஊடாக அவை வடக்குப் பகுதிக்கு கொண்டுவரப்பட்டு சகல பகுதிகளுக்கும் விநியோகிக்கப்படுகின்றன. அதிகமாக ஹெரோய்னை ஊசி மூலமே அதிகளவானோர் பயன்படுத்துகின்றனர். ஒரு நாளைக்கு 30 மில்லி கிராம் தொடக்கம் 300 மில்லி கிராம் வரையில் நுகர்கின்றனர். 16-23 வயதுக்கும் இடைப்பட்ட பள்ளி, பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட இளைஞர்களே ஹெரோய்னை அதிகளவில் நுகர்கின்றனர். இனவழிப்பு போரினால் சிதைவடைந்த வடக்கு கிழக்கு மக்கள் மீள் உருவாக்கத்தின் ஆணிவேராக இருக்க வேண்டிய இளம் சந்ததியினரும் பாடசாலை மாணவர்களும் அண்மைக்காலமாக போதைப்பொருள் பாவனையில் சிக்கவைக்கப்பட்டு வருகின்றார்கள்.

ஹெரோய்ன் நுகரும் பெரும்பாலான இளைஞர்களின் பெற்றோர் இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து தாமே தமது பிள்ளைகளை பொலிஸில் ஒப்படைக்கின்ற சம்பவங்களும் இடம்பெறுகின்றன. சில பெற்றோர் மருத்துவமனைகளிலும் தமது பிள்ளைகளை ஒப்படைத்துள்ளனர். "எவ்வளவு காலம் சென்றாலும் பரவாயில்லை. இவனை நீங்கள் வைச்சிருங்கோ. வெளியில விட்டால் பெரிய பிரச்சினை" என்று தெரிவித்து தாய் ஒருவர் அண்மையில் தனது மகனை மருத்துவமனையில் ஒப்படைத்துள்ளார்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் ஹெரோய்ன் பாவனைக்கு அடிமையான சுமார் 320 பேர் வரையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஹெரோய்னுக்கு அடிமையானமையால் பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டு கைதானவர்களும் இதற்குள் உள்ளடங்குகின்றனர்.தொடர்ந்தும் வடக்கில் அதிகரித்துச் செல்வதால் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் விசேட சிகிச்சைப் பிரிவு இரு மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கு இதுவரை 135ற்கும் அதிகமானோர் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். வடக்கில் உள்ள கிராமங்களிலுள்ள இளைஞர்களில் அநேகர் இதனைப் பயன்படுத்துகின்றமையும் பல்வேறு தரப்புக்கள் ஊடாக உறுதி செய்யப்பட்டுள்ளன. தமிழர் பகுதிகளில் போதைப்பொருள் பயன்பாட்டினால் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் இளைஞர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துள்ளது. இந்த எண்ணிக்கை கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் த.சத்தியமூர்த்தி குறிப்பிட்டார்.

இதனால் சமூகக் குற்றங்களும் இளவயதினரின் தொடர் மரணங்களும் பதிவாகி வருகின்றன. போதைப்பொருளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டுகள் காரணமாக யாழ்.சிறைச்சாலையில் 304 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் குறிப்பிட்டார். தலைநகரிலும் கிராமப்புறங்களிலும்முக்கியமாகபிரசித்திபெற்ற பாடசாலைகளுக்கு அண்மித்த இடங்களில் மறைமுகமான விதத்தில் மாணவர்களுக்கு போதை வஸ்து விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. நாட்டின் எந்தப் பகுதியை எடுத்துக்கொண்டாலும் நகரம், கிராமம், வீதிக்கு வீதியென சகல இடங்களிலும் இன்று போதைப்பொருட்கள் கிடைக்கக்கூடிய நிலையையே காண முடிகிறது. பொதுவாக இலங்கையில் ஹெரோயின், கஞ்சா, அபின், மர்ஜீவானா ஆகிய நான்கு போதை தரும் பொருட்களே பாவனையிலுள்ளன. இவற்றை 12 சதவீதமானோர் ஊசி மூலமே ஏற்றிக் கொள்கிறார்கள் என்றும் ஆய்வுகள் தெவிக்கின்றன. இவர்கள் குடும்பப் பிரச்சினை, கல்வியில் தோல்வியடைதல், வேலையின்மை, காதல் தோல்வி மற்றும் கூடாத சகவாசம் போன்ற பல காரணங்களுக்காக இந்தப் பழக்கத்திற்கு அடிமையாகிறார்கள். இலங்கையில் திறந்த பொருளாதாரக் கொள்கை, உல்லாசப் பயணிகளின் வருகை போன்ற காரணிகளால் நவீன போதைப் பொருட்கள் நாட்டினுள் பிரவேசிக்க ஆரம்பித்துள்ளன. இந்த போதைப்பொருட்கள் கடந்த ஆண்டுகளில் இலங்கையில் பரவ ஆரம்பித்தாக தெவிக்கப்படுகிறது.

தொடரும்...

# விளையாட்டு

## வரவேற்பு விழாவில் பஸ் நகர முடியாததால் ஹெலியில் பறந்த ஆர்ஜென்டீனா வீரர்கள்

உலகக் கிண்ணத்தை வென்ற ஆர்ஜென்டீன வீரர்களுக்கு. ஆர்ஜென்டீனாவில் நடத்தப்பட்ட வரவேற்பு நிகழ்வின்போது. திறந்த பஸ் பயணத்தை இடையில் கைவிட்ட வீரர்கள் ஹெலிகொப்டர் மூலம் பறந்தனர். வீரர்களை ஏற்றிச் சென்ற பஸ் நகர முடியாத அளவுக்கு வீதியில் மக்கள் திரண்டமையே இதற்குக் காரணம்.

உலகக் கிண்ணத்தை வென்ற ஆர்ஜென்டீன அணியினர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை ஆர்ஜென்டீனாவை சென்றடைந்தனர். அன்றைய தினம் ஆர்ஜென்டீனாவில் விடுமுறை பிரகடனப்படுத்தப்பட்டு. வீரர்களை வரவேற்பதற்கான நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. தலைநகர் புவனோஸ் அய்ரிஸின் புறநகர் பகுதியிலிருந்து. தலைநகரின் மத்திய பகுதிவரை 30 கிலோமீற்றர் தூரம் திறந்த பஸ்ஸில் வீரர்கள் பயணம் செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால். மில்லியன் கணக்கான மக்கள் புவனோஸ் அய்ரிஸில் திரண்டிருந்தனர். சுமார் 40 லட்சம் பேர் பஸ் பயணம் செய்யவிருந்த வீதிகளில் திரண்டிருந்தனர் என ஆர்ஜென்டீன பொலிஸார் மதிப்பிட்டுள்ளனர். வீரர்கள் பயணம் செய்த பஸ் நகர முடியாத அளவுக்கு மக்கள் கூட்டம் வீதிகளில் நிறைந்திருந்தது. மேம்பாலம் ஒன்றின் கீழ் சென்றபோது அதன் மீது பாய்வதற்கும் ரசிகர்கள் சிலர் முயன்றனர். எதிர்பார்க்கப்பட்டதைவிட மிக மெதுவாக பஸ் நகர முடிந்தது. இதையடுத்து. வீரர்களின் பஸ் பயணம் இடையில் கைவிடப்பட்டு. ஹெலிகொப்டர் மூலம் வீரர்கள் ஆர்ஜென்டீன கால்பந்தாட்டச் சாங்கத்தின் பயிற்சி நிலையத்துக்கு அனுப்பப்பட்டனர். பின்னர் அவர்கள் தமது வீடுகளுக்குத் திரும்பினர். இதனால் புனோஸ் அய்ரிஸில் விளையாட்டுக் கொண்டாட்டங்களுக்கான மத்தியநிலையமாக விளங்கும் நினைவுச்சின்னத்துக்கு அருகில் காத்திருந்த ரசிகர்கள். தமது நாயகர்களை காண முடியாத நிலை ஏற்பட்டது.




## ஐபிஎல் 'மினி' ஏலம்

இந்தியன் பிரீமியர் லீக் (ஐபிஎல்) கிரிக்கெட் போட்டியின் 2023 ஆம் ஆண்டு சீசனுக்கான வீரர்கள் 'மினி' ஏலம் கொச்சியில் வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது.

போட்டியிலிருக்கும் 10 அணிகளில் காலியாக இருக்கும் 87 இடங்களை நிரப்புவதற்காக நடைபெறும் இந்த ஏலத்தில் மொத்தமாக 405 வீரர்கள் பங்கேற்கின்றனர். 87 இடங்களில் 30. வெளிநாட்டு வீரர்களுக்கானதாகும்.

நவம்பரில் நிறைவடைந்த டி20 உலகக் கிண்ண கிரிக்கெட்டில் போட்டி நாயகனாகத் தேர்வான இங்கிலாந்து ஆல்-ரவுண்டர் சாம் கரனுக்கு இந்த ஏலத்தில் அதிக வரவேற்பு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அவருக்கான அடிப்படை விலை ரூ.2 கோடியாக இருக்கிறது. 2022-ஆம் ஆண்டு ஐபிஎல் சீசனில் காயம் காரணமாக அவர் களம் காணவில்லை.

இந்த சீசனில் சாம் கரனோடு அவரது சக வீரர்களான பென் ஸ்டோக்ஸ். ஹேறி புருக் ஆகியோருக்கான போட்டியும் அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது தவிர. நியூஸிலாந்தின் கேன் வில்லியம்சன். அவுஸ்திரேலியாவின் கேமரூன் கிரீன். சிம்பாப்வேயின் சிகந்தர் ராஸா. இங்கிலாந்தின் ஜோ ரூட் ஆகியோரும் அதிக விலைக்கு வாங்கப்படுவார்கள் என கணிக்கப்படுகிறது.

இந்திய வீரர்களைப் பொருத்தவரையில் மயங்க் அகர்வால் முன்னிலையில் இருக்க. தமிழகத்தின் நாராயண் ஜெகதீசனுக்கான எதிர்பார்ப்பும் அதிகமாக உள்ளது.




## அரச சேவைகள் தேசிய விளையாட்டு விழாவில் கல்முனை றகீப், ஜப்ரான் தங்கம் வென்றனர்

இலங்கை அரச சேவைகள் விளையாட்டுத்துறை அமைப்பு நடாத்திய அரச சேவைகள் தேசிய விளையாட்டு விழாவில் கல்முனை ஸாஹிரா கல்லூரி உடற்கல்வி ஆசிரியர் எம்.வை.எம். றகீப். விளையாட்டுத்துறை பயிற்றுநர் ஏ. எம். ஜப்ரான் ஆகியோர் தங்கப் பதக்கங்களை வென்று பலத்த பாராட்டைப் பெற்றனர்.

தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் நடைபெற்ற இவ் விளையாட்டு விழாவில் மெய்வல்லுநர் போட்டிகளிலேயே அவர்கள் பதக்கங்களை வென்றெடுத்தார்.

ஆண்களுக்கான 110 மீற்றர் சட்டவேலி ஓட்டப் போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்ற றகீப். 4x100 மீற்றர் தொடர் ஓட்டத்தில் தங்கப் பதக்கம் வென்ற அணியிலும் 4x400 மீற்றர் தொடர் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கம் வென்ற அணியிலும் அங்கம் வகித்தார்.

இதேவேளை. ஸாஹிரா கல்லூரியின் விளையாட்டுத்துறை பயிற்றுநர் ஏ.எம். ஜப்ரான் 4x100 மீற்றர் தொடர் ஓட்டப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற அணியிலும் 4x400 மீற்றர் தொடர் ஓட்டப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற அணியிலும் அங்கம் வகித்தார்.

இதேவேளை அக் கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியர் எம். எம். றஜீப் 100 மீற்றர் ஓட்டப் போட்டியிலும் நீளம் பாய்தல் போட்டியிலும் 4ஆம் இடத்தைப் பெற்றார்.

இது இவ்வாறிருக்க இப் போட்டியில் கல்வி திணைக்களத்தின் சார்பாக பங்குபற்றி கல்முனை ஸாஹிரா கல்லூரியின் பழைய மாணவர்களும் விளையாட்டுத்துறை பயிற்றுவிப்பாளர்களுமான எம். யூ. ஏ. சம்லி 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலிடத்தையும். ஏ. ஜீ. எம். மஸ்பூத் 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் இரண்டாம் இடத்தையும் பெற்றதோடு 4x100 மீற்றர் தொடர் ஓட்டப் போட்டியில் முதலிடத்தையும். 4x400 மீற்றர் தொடர் ஓட்டப் போட்டியில் 2ம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.



## உலகக் கிண்ணத்தை முத்தமிட்ட துருக்கிய சமையல் கலைஞர்

உலகக் கிண்ண கால்பந்தாட்ட இறுதிப் போட்டி நடந்த மைதானத்துக்குள். துருக்கியைச் சேர்ந்த பிரபல சமையல் கலைஞரான சோல்ட் பே எவ்வாறு நுழைந்தார் என்பது குறித்து சர்வதேச கால்பந்தாட்டச் சங்கங்களின் சம்மேளனம் (பீபா) விசாரணை நடத்துகிறது. கத்தாரின் லூசெய்ல் அரங்கில் நடைபெற்ற போட்டியில் பிரான்ஸை தோற்கடித்து. உலகக் கிண்ணத்தை ஆர்ஜென்டீனா கைப்பற்றிய பின்னர். புகழ்பெற்ற சமையல் கலைஞர் சோல்ட் பேவும் மைதானத்துக்குள் காணப்பட்டார்.

ஆர்ஜென்டீன அணிக்கு வழங்கப்பட்ட உலகக் கிண்ணத்தை அவர் கையில் ஏந்தியவாறும் முத்தமிட்டவாறும் காணப்படும் புகைப்படங்கள் வெளியாகியிருந்தன. வீரர் ஒருவரின் பதக்கத்தை கடித்தவாறும் அவர் போஸ் கொடுத்தார். பீபா விதிகளின்படி. உலகக்கிண்ண சுற்றுப்போட்டியில் சம்பியனாகியவர்கள். பீபா அதிகாரிகள் மற்றும் நாடுகளின் தலைவர்கள் மாத்திரமே சம்பியன் கிண்ணத்தை ஏந்த முடியும்.

இந்நிலையில். சோல்ட் பேவுக்கு எவ்வாறு இவ்வாய்ப்புகள் கிடைத்த என்பது குறித்து பீபா விசாரணை நடத்துகிறது. சில தனிநபர்கள். தகுதியற்ற வகையில் ஆடுகளத்துக்குள் நுழைந்தமை குறித்து விசாரணை நடத்தப்படுவதாக பீபா பேச்சாளர் ஒருவர். தெரிவித்துள்ளார். 39 வயதான சோல்ட் பேயின் உண்மையான பெயர் நுஸ்ரத் கோக்சே ஆகும். லொஸ் ஏஞ்சல்ஸ். லண்டன் உட்பட உலகின் பல பகுதிகளில் அவருக்கு சொந்தமான உணவகங்கள் உள்ளன. உலகக் கிண்ண ஆரம்பத்தில். போட்டியொன்றின்போது பீபா தலைவர் கியானி இன்பன்டினோவுக்கு அருகில் தான் காணப்படும் வீடியோவை சோல்ட் பே வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# உலக வலம்

## சிலி சுற்றுலா நகரில் தீயினால் இருவர் பலி, 400 வீடுகள் தீக்கிரை

சிலியில் சுற்றுலா நகரான வீனா டெல் மாரில் பரவிய காட்டுத் தீயினால் இருவர் உயிரிழந்ததுடன், சுமார் 400 வீடுகள் சேதமடைந்துள்ளன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.இச்சம்பவத்தை யடுத்து சிலி அரசாங்கம் அவசரநிலையை பிரகடனப்படுத்தியுள்ளது. தென் அமெரிக்க நாடான சிலியின் கடற்கரையோர சுற்றுலா நகரான, வீனா டெல் மார், தலைநகர் சான்டியாகோவிலிருந்து 120 கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது.

அந்நகரில் வியாழக்கிழமை (22) கடும் காற்று காரணமாக தீ வேகமாக பரவியது. தலைநகர் வீனா டெல் மார் நகரில் சன அடர்த்தி மிக்க பகுதிகளுக்கு 2 மணித்தியாலங்களுக்குள் தீ பரவியதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இத் தீ ஏற்கெனவே 110 ஹெக்டேயர் பரப்பளவான காட்டை அழித்துள்ளது என சிலியின் தேசிய அவசரநிலை அலுவலகம் தெரிவித்துள்ளது. இத்தீப்பரவல் காரணமாக, வீனா டெல் மார் அமைந்துள்ள வல்பராசோ பிராந்தியத்தில் அவசரநிலையை பிரகடனப்படுத்த ஜனாதிபதி கெப்ரியல் போரக் உத்தரவிட்டார் அந்நாட்டு உள்துறை அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## பாகிஸ்தானில் கடும் மருந்து தட்டுப்பாடு

பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் நிதி நெருக்கடியின் விளைவாக, மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. பாகிஸ்தானில் உயிர் காக்கும் மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதாக அந்நாட்டு ஊடகங்களை மேற்கோள்காட்டி வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.



பாகிஸ்தான் அரசு எதிர்கொண்டுள்ள அந்நியச் செலாவணி நெருக்கடியால், மருந்துகளை இறக்குமதி செய்ய முடியாத நிலையே இந்த மருந்து தட்டுப்பாட்டுக்கு முக்கிய காரணமாக இருந்து வருகிறது. பாகிஸ்தானில் நீரிழிவு நோயாளிகளுக்கான மருந்துகளைக் கூட கண்டுபிடிப்பது கடினம் என்று ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. மேலும், கராச்சியில் உள்ள மருந்துக் கடைகளின் நிலை நாளுக்கு நாள் மோசமாகி வருவதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## பெண்கள் படிக்கத் தடைவிதித்த தலிபான் ஆட்சிக்கு எதிர்ப்பு!

ஆப்கானிஸ்தானில் பெண்கள் படிக்கத் தடைவிதித்த தலிபான் ஆட்சியின் உத்தரவுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆண் மாணவர்கள் பல்கலைக் கழக தேர்வுகளைப் புறக்கணித்தனர். பெண்களைப் படிக்க அனுமதிக்க வலியுறுத்தி தேர்வறையிலிருந்து ஆண் மாணவர்கள் வெளிநடப்பு செய்தனர். சில பேராசிரியர்களும் பெண்கள் படிக்கத் தடை விதிக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து தங்கள் பணிகளை ராஜிநாமா செய்துள்ளனர்.



ஆப்கானிஸ்தானில் ராணுவ ஆட்சி முடிவுக்கு வந்து, தற்போது தலிபான்கள் ஆட்சி நடைபெற்று வருகிறது. தலிபான்கள் ஆட்சியில் பெண்களுக்கு எதிரான சட்டங்கள் கடுமையாக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில், தற்போது பெண்கள் கல்லூரி பயில ஆப்கன் அரசு தடை விதித்துள்ளது. ஆப்கன் பல்கலைக்கழகங்களுக்கு பெண்கள் செல்ல தலிபான் ஆட்சியாளர்கள் விதித்த தடையை பாதுகாப்புப் படையினர் புதன்கிழமை அமலுக்கு கொண்டு வந்தனர்.

இந்நிலையில், அன்று(23) பல்கலைக் கழக தேர்வுகளை ஆண் மாணவர்கள் புறக்கணித்து தேர்வறையிலிருந்து வெளிநடப்பு செய்தனர். பெண்களை தலிபான்கள் படிக்க அனுமதிக்க வலியுறுத்தி அனைத்து மாணவர்களும் பல்கலைக் கழகத்தை விட்டு வெளியேறினர். இதே போன்று பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த பேராசிரியர்கள் சிலரும், பெண்கள் படிக்கக்கூடாது என்ற தலிபான் ஆட்சியாளர்களின் உத்தரவுக்கு எதிராக தங்கள் பணிகளை ராஜிநாமா செய்தனர். பல்கலைக் கழக தேர்வறை வாயிலில் அனுமதி மறுக்கப்பட்டு திரண்டிருந்த மாணவிகளுக்கு ஆதரவாக, ஆண் மாணவர்கள் தேர்வறையிலிருந்து வரிசையாக வெளியேறினர். இந்த வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

## புத்தாண்டை வரவேற்கும் மொஸ்கோ!




டிசம்பர் 22, 2022, ரஷ்யாவின் மொஸ்கோவிலுள்ள வோரோபியோவி (Vorobyovy) மலையின் கண்காணிப்பு இடத்தில் பாதசாரிகள் ஒளிரும் புத்தாண்டு 2023 எண்களைக் கடந்து செல்கின்றனர்.

## வடகொரியாவில் யாரும் சிரிக்கவோ அழவோ கூடாது

வடகொரியாவில் மக்கள் சிரிக்கக் கூடாது, அழக்கூடாது, கடைகளுக்குச் சென்று பொருள்கள் வாங்கக் கூடாது என்று அர்த்தமற்ற கடுமையான தடையை வடகொரியா அறிவித்துள்ளது. மீறினால் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. வடகொரியா கடும் கட்டுப்பாடுகள் கொண்ட நாடு. மக்களுக்கு அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. வினோதமான சர்வாதிகார சட்டங்கள் அமலில் உள்ளன.

அவரது அனுமதியின்றி அங்கு எதுவும் அசையாது. அந்த அளவிற்கு கடுமையான விதிகளும் தண்டனைகளும் அமலில் உள்ளன.இந்த நிலையில், வடகொரிய மக்கள் யாரும் சிரிக்கக் கூடாது, அழக்கூடாது, மது அருந்தக் கூடாது, கடைகளுக்குச் சென்று பொருள்கள் வாங்கக் கூடாது என்று கடுமையான தடை விதிக்கப்பட்டுள்ளது. கிம் ஜாங்வுன் தந்தை கிம் ஜாங்-இல்லின் பத்தாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, டிச., 17 முதல் 11 நாட்களுக்கு அந்நாட்டில் துக்கம் அனுசரிக்கப்படுகிறது. எனவே, இந்த 11 நாட்களும் மக்கள் யாரும் சிரிக்கக் கூடாது என்று மிகக் கடுமையான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பல ஆண்டுகாலமாக துக்க நாட்களில் இந்த தடை உத்தரவு அமலில் உள்ளது. அது மட்டுமல்ல, இந்த 11 நாட்களில், குடும்பத்தில் யாரேனும் இறந்துவிட்டால் கூட, உறவினர்கள் சப்தம் போட்டு அழக் கூடாது. 11 நாட்களுக்குப் பிறகே அவரது இறுதிச் சடங்குகளை செய்ய வேண்டும் என்று மிகக் கொடுமையான தடையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஒரு வேளை, இந்த 11 நாள்களுக்குள் யாரேனும் பிறந்திருந்தால் அவர்கள் தங்கள் வாழ்நாள் முழுக்க தங்களது பிறந்தநாளைக் கூட கொண்டாட முடியாது என்று அந்நாட்டு பத்திரிகைகள் மேற்கோள் காட்டியுள்ளன.

## ரஷ்ய தனியார் கூலிப்படைக்கு வடகொரியா ஆயுதங்கள் விநியோகித்ததாக அமெரிக்கா குற்றச்சாட்டு

யுக்ரைன் போரில் பயன்படுத்துவதற்காக ரஷ்யாவின் தனியார் கூலிப்படையான வாக்னர் குழுவுக்கு ஏவுகணைகள், ரொக்கெட்கள் முதலான ஆயுதங்களை வட கொரியா விநியோகித்தது என அமெரிக்கா குற்றம் சுமத்தியுள்ளது. இந்த ஆயுத விநியோகம் ஐநா பாதுகாப்புச் சபை தீர்மானங்களை மீறுவதாகும் என வெள்ளை மாளிகை கூறியுள்ளது. அத்துடன் வாக்னர் (wagner) குழுவுக்கு எதிராக மேலதிக தடைகளை விதிக்கவுள்ளதாகவும் வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

எனினும் வாக்னர் குழுவுக்கு தான் ஆயுதம் விநியோகித்ததாக கூறப்படுவதை வட கொரியா நிராகரித்துள்ளது. வாக்னர் குழுவும் இதை நிராகரித்துள்ளது. இதேவேளை, யுக்ரைனில் வாக்னர் கூலிப்படையினரின் எண்ணிக்கை சுமார் 1,000 இலிருந்து 20,000 ஆக அதிகரித்துள்ளது என பிரித்தானிய அரசு கூறியுள்ளது. யுக்ரைனில் இராணுவ நடவடிக்கையில் பயன்படுத்துவற்காக உலகம் முழுவதும் ஆயுத விநியோகத்தர்களை வாக்னர் தேடுகிறது என வெள்ளை மாளிகையின் பேச்சாளர் ஜோன் கேர்பி, செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

## லெபனானில் வடிவமைக்கப்பட்ட கிறிஸ்மஸ் மரம் சொல்லும் பாடம்

லெபனானில் விழிப்புணர்வை ஏற்படுத்த, மறுசுழற்சி செய்யப்படும் பிளாஸ்டிக் போத்தல்களில் கிறிஸ்மஸ் மரம் வடிவமைக்கப்பட்டுள்ளது. கிறிஸ்மஸ் மகிழ்ச்சியைப் பரப்பவும், விழிப்புணர்வை ஏற்படுத்தவும் நன்கொடையாக பெறப்பட்ட ஒரு இலட்சத்து பத்தாயிரம் பச்சை நிற பிளாஸ்டிக் போத்தல்கள் மற்றும் இரண்டாயிரம் வெள்ளை நிற போத்தல்கள் மூலம், இந்த கிறிஸ்மஸ் மரம் உருவாக்கப்பட்டுள்ளது. இதனை வடிவமைக்க ஒரு மாத காலம் ஆனதாக கூறப்படுகிறது. நாம் வாழும் பூமியை சேதப்படுத்தினால், வாழ்வதற்கு வேறு கிரகம் இல்லை என வடிவமைத்தவர்கள் தெரிவித்தனர்.



## கொலம்பியாவில் எரிபொருள் கொள்கலன் வெடித்து ஒருவர் உயிரிழப்பு

கொலம்பியாவில் எரிபொருள் கொள்கலன் வெடித்து தீப்பிடித்ததில் தீயணைப்பு வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார். கொலம்பியாவின் வடக்கு பகுதியில் உள்ள பாரன்கில்லா துறைமுகம் அருகில் உள்ள ஒரு கம்பெனியில் இருந்த எரிபொருள் கொள்கலன் வியாழக்கிழமை (டிச.22) இரவு திடீரென வெடித்து சிதறி தீப்பிடித்தது. இதனால் தொழிலாளர்கள் அவசரம் அவசரமாக அப்பகுதியை விட்டு வெளியேறினர்.

தீயணைப்பு துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து, தீயணைப்பு படையினர் சம்பவ இடத்திற்கு வந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். அருகில் உள்ள எரிபொருள் கொள்கலன்களில் தீ பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மூன்று நாட்களில் தீயை கட்டுக்குள் கொண்டு வர முடியும் என தீயணைப்பு துறை கூறி தெரிவித்துள்ளது.

தீயணைப்பு பணியின் போது ஒரு தீயணைப்பு வீரர் உயிரிழந்துள்ளார். ஜேவியர் சோலனோ (வயது 53) என்ற அந்த வீரர், கீழே விழுந்ததில் தலையில் பலத்த அடிபட்டு உயிரிழந்ததாக தீயணைப்பு துறை தலைவர் ஜேமி பெரேஸ் தெரிவித்துள்ளார். குடோனில் உள்ள மற்ற கொள்கலன்களுக்கு தீ பரவாமல் தடுப்பதே தங்கள் குறிக்கோள் என்றும் அவர் கூறினார். தீ விபத்து காரணமாக துறைமுக பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

























இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 25.12.2022 அன்று வெளியிடப்பட்டது.